# வைகறை வெளிச்சம்

விலை ரூ.20/-


ஆசிரியர் மு. குலாம் முஹம்மது

Volume - 14 Issue - 12 டிசம்பர் 2021 - ரபியுல் ஆகிர் - ஜமாஆத்துல் அவ்வல் 1443


## 13 ஆண்டுகளுக்குப் பின்

# 26/11

## மும்பை தாக்குதல்




# பாபரி மஸ்ஜித்

என்றும் நம் நினைவில்

## காப்பாற்றத் தவறிய இரண்டு முஸ்லிம்கள்

## பாட புத்தகங்களில் இந்துத்துவா!

## மேட்டுப்பாளையத்தில் காவல்துறை அராஜகமா?

بسم الله الرحمن الرحيم

**மேலும், அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் ஒரு காரியத்தைப்பற்றிக் கட்டளையிட்டுவிட்டால், அவர்களுடைய அக்காரியத்தில் வேறு அபிப்பிராயம் கொள்வதற்கு ஈமான் கொண்டுள்ள ஆணுக்கோ பெண்ணுக்கோ உரிமையில்லை; ஆகவே, அல்லாஹ்வுக்கும், அவனுடைய ரஸூலுக்கும் எவரேனும் மாறு செய்தால் நிச்சயமாக அவர்கள் பகிரங்கமான வழிகேட்டிலேயே இருக்கிறார்கள். (அல்குர்ஆன் - 33:36)**

## உள்ளே.....


# மும்பைத் தாக்குதல்

13 ஆண்டுகளுக்குப்பின் 26/11

**04**

## என்றும் நம் நினைவில்

# பாப்ரி மஸ்ஜித்

**09**

## *முதல்வர் அவர்களின் கவலையும்!*

# இஸ்லாம்

## *சொல்லும் தீர்வும்!!*

**32**

- *பாடப்புத்தகங்களில் இந்துத்துவா!* **16**
- *தனக்குரியவருக்காக காத்திருக்கும் இரயில்!* **20**
- *சிலுவை யுத்தம் 2.0* **22**
- *நீரிழிவு நோய் உள்ளவர்களின் கவனத்திற்கு* **28**
- *இந்தியாவில் முஸ்லிம்கள் தொடர்* **40**
- *தேவதாசி முறையை எதிர்த்த டாக்டர்.முத்துலட்சுமி ரெட்டி* **44**
- *உச்சநீதிமன்றத்தின் தாழ்ச்சியும், வீழ்ச்சியும்* **46**
- *குழந்தை வளர்ப்பு* **48**
- *70 சதவிகித இந்தியர்களுக்கு இறைச்சிதான் விருப்பமான உணவாம்!* **56**
- *மேட்டுப்பாளையத்தில் காவல்துறை அராஜகமா!* **60**



டிசம்பர் 2021 - ரபியுல் ஆகீர் - ஜமாஅத்துல் அவ்வல் 1443

# வைகறை வெளிச்சம்



ஆசிரியர்

**மு.குலாம் முஹம்மது**,M.A.,
Journalism & Communication

துணை ஆசிரியர்

**கே.எம்.இல்யாஸ் ரியாஜி**,M.A.,



**தனி இதழ்: ரூ.20 | ஆண்டுச் சந்தா - உள் நாடு: ரூ.240 / வெளி நாடு: ரூ.3000.**

VAIGARAI VELICHAM

52/1, Mannady Street, Room# 07, Mannady, Chennai - 600001.

+91 81481 29887 | Email: darultrust@yahoo.com | Web: www.darultrust.in

**பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர் DARUL ISLAM FOUNDATION TRUST என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம்.**



**All disputes arising out of any publications in this monthly will come under the jurisdiction of chennai courts Only**




**இந்தக்கட்டுரை கர்கரேயின் மனைவி கவிதா கர்கரேயின் நினைவுக்கு**

*13 ஆண்டுகளுக்குப் பின் 26/11/2008 என்ற மும்பை தாக்குதலில் தன் தவறை உணர்ந்துள்ளது காங்கிரஸ். இதனை மூத்த காங்கிரஸ் உறுப்பினரும், பலமுறை ஒன்றிய காங்கிரஸ் அமைச்சராக இருந்தவருமான மணீஸ் திவாரி என்பவர் கூறியுள்ளார்.*

*காங்கிரஸ் அதிவேகமாக திவாலாகிக் கொண்டிருக்கின்றது. மூத்தத் தலைவர்களெல்லாம், காங்கிரஸிலிருந்து தங்கள் காரியமாகும் கட்சிக்குத் தாவிக் கொண்டிருக்கின்றார்கள்.*

*உண்மையிலேயே இந்தியாவை பாசிசத்தின் பிடியிலிருந்து காப்பாற்றிட வேண்டும். அதனால் எக்காரணத்தைக் கொண்டும் நாட்டை நாசமாக்கிக் கொண்டிருக்கும் பாரதீய ஜனதா கட்சியுடன் கூட்டுச் சேர்ந்திடவே கூடாது. அதேநேரத்தில் தங்கள் எதிர்காலத்தையும் காப்பாற்றிட வேண்டும் என விரும்புபவர்கள் வீரமங்கை “மம்தா பேனர்ஜி” அவர்களின் “திரினாமுல் காங்கிரஸ்” கட்சியில் தங்களை இணைத்துக் கொள்கின்றார்கள்.*

*ஏற்கனவே காங்கிரஸ் கட்சிக்குள்* "G23-(Group 23)" *என்றொரு அணி தோன்றி அது, காங்கிரஸுக்கு எதிராக முண்டாதட்டிக் கொண்டிருக்கின்றது. இந்த* G23 *காங்கிரஸின் மூத்த தலைவர்கள் 23 பேர் இணைந்து தொடங்கிய உள்கட்சி எதிர்ப்பு அணி.*




*இவர்களில் ஓரிருவர் பாரதீய ஜனதா கட்சிக்குத் தாவிவிட்டார்கள். காங்கிரஸ் கட்சி தன்னையோ, நாட்டையோ காப்பாற்றிடாது என்ற முடிவுக்கு வந்த அவர்கள், தங்களுடைய வளமான எதிர்காலத்தை மட்டுமே முன்னிறுத்தி பா.ஜ.க.வுக்குத் தாவியுள்ளார்கள்.*

*இந்நிலையில், காங்கிரஸ் கட்சியின் வீழ்ச்சியின் காரணங்களை இப்போது சிலர் மிகவும் கொச்சையாக பேசத் தொடங்கியுள்ளனர்! இதனால் இவர்கள் திருந்திவிடுவார்கள் எனச் சொல்லிவிடுவதற்கில்லை. இவர்கள் ஒருவேளை தங்களுடைய எதிர்காலத்தைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கிவிட்டார்கள் போலும்.*

**அப்படி என்ன செய்துவிட்டார் மணீஷ் திவாரி?**

*காங்கிரஸின் மணீஷ் திவாரியின் ஒப்புதல் வாக்குமூலம் இதுதான்:*

UPA, Government should have taken Decisive action after 26/11 Mumbai Attacks. Going soft after 26/11 was Sign of Weakness of Manmohan Singh Government.

*அதாவது, காங்கிரஸ் தலைமையிலான "ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு," 2008 மும்பைத் தாக்குதலின்போது, தீர்க்கமான நடவடிக்கைகளை எடுத்திருக்க வேண்டும். மும்பைத் தாக்குதலில் மெதுவான நடவடிக்கையை மேற்கொண்டது, மன்மோகன் சிங் அரசின் பலவீனத்தைக் காட்டுகின்றது."*

இது காங்கிரஸின் மணீஸ் திவாரி சொன்ன மிகவும் மிருதுவான சொற்கள். அவர் என்ன சொல்லி இருக்க வேண்டும் என்றால் நாம் நாட்டுக்கு மிகப்பெரிய துரோகத்தைச் செய்துவிட்டோம், எனச் சொல்லியிருக்க வேண்டும்.

அதன் பின் நாட்டை கொலைகாரர்களுக்கும், கொள்ளைக்காரர்களுக்கும் ஒப்படைக்க எல்லா விதத்திலும் உதவி செய்தோம் என்று சொல்லியிருக்க வேண்டும்.

**26/11-இல் மட்டுமா? காங்கிரஸின் துரோகம்?**

(பாபரி மஸ்ஜித் உட்பட பல மஸ்ஜித்கள் நீங்கள் தாம்) காங்கிரஸ்காரர்கள் தாம் பாபரி மஸ்ஜித் போன்ற பல மஸ்ஜித்கள் இடிபடவும், முஸ்லிம்களின் கைகளை விட்டுப்போகவும் காரணமாக அமைந்தவர்கள். பாபரி மஸ்ஜித்தின் பிரதான கதவைத் திறந்துவிட்டது, நீங்கள் இந்த நாட்டின் வகுப்புவாத சக்திகளுக்கும், பிரிவையும் பிரிவினையும் முதலாகக் கொண்டு வாழ்ந்த வர்களுக்கு வசதி செய்து கொடுத்தீர்கள்.

பாபரி மஸ்ஜித்தை இடிக்காமல் தடுத்திருக்கலாம் காங்கிரஸ் கட்சியின் சார்பில் பிரதமராக இருந்த நரசிம்மராவ்.

ஆனால் அவர் கரசேவர்கள் மீது அரசு எந்த நடவடிக்கையும் எடுக்காது என்று பாபரி மஸ்ஜித் இடிக்கப்படுவதற்கு பல நாட்களுக்கு முன்னரே கரசேவர்களுக்கு வாக்குக் கொடுத்தார். இதனால் நெஞ்சுரம் பெற்றவர்கள்தாம், கட்டட இடிப்புக் கலையில் அயோத்தியாவில் வைத்தே, உளவுத் துறையின் கண்களின் முன்னாலேயே பயிற்சி கொடுத்தார்கள்.

பாபரி மஸ்ஜிதை இடிப்பதற்கான எல்லா அடிப்படை வேலைகளும் செய்யப்பட்டு வருகின்றன, என உளவுத்துறை தகவல் தந்து கொண்டே இருந்தபோதும், வேறுபக்கம் தன் முகத்தைத் திருப்பிக் கொண்டார்.

1992 டிசம்பர் 6 அன்று பள்ளிவாசல் இடிக்கப் பட்டுக் கொண்டிருக்கின்றது, தடுக்கும் நடவடிக்கை தேவை என்ற செய்தி வந்தபோது, அதை அவர் கண்டுகொள்ளவில்லை. நரசிம்மராவ் மதிய உணவுக்குப்பின் உள்ள தூக்கத்தைத் தவிர்க்க இயலவில்லை என்றார். ஆகவே தூங்கி விட்டேன் என்றார். நாடு பற்றி எரிந்து கொண்டிருந்தது.

எல்லாப் பகுதிகளையும் கரசேவர்களால் இடிக்க முடியவில்லை, என தகவல் வந்தபோது எல்லோரையும் பத்திரமாக அங்கிருந்து அகற்றி விட்டு, அரசின் சார்பில் புஃல்டோசர்களை அனுப்பி இடிக்கச் செய்தார்.



அங்கே மூன்று நாட்கள் தங்கி சிலைகளை நிறுவிடவும், இந்து பூஜை, புனஸ்காரங்கள் செய்திடவும் எல்லா வசதிகளையும் செய்து தந்தார். அதுகண்டு முஸ்லிம்கள் வெகுண்டெழுந்தபோது அவர்களை அடக்கிப்போட்டார். முஸ்லிம்கள் நாடெங்கும் பிணமாக்கப்பட்டபோது இரசித்துக் கொண்டிருந்தார்.

குவிந்தது முஸ்லிம்களின் பிணங்கள். உயிரோடு இருந்தவர்கள் மீது குவிந்தன வழக்குகள். மும்பையில் தொடர்ந்து நடந்த படுகொலைகள், நரசிம்மராவ் தாகம் தணித்த நரபலிகள். அவருடைய பிணத்தாகம் அத்தோடு நிற்கவில்லை என்பதை நாடறியும், வரலாறு அறியும்.

இடிக்கப்பட்ட பாபரி மஸ்ஜித் - இடிந்துபோன சிறுபான்மையினர். இனி நமக்கில்லை இங்கே நீதி என்ற முடிவுக்கு வந்தார்கள். அதுவே அறுதிவரை நிறைவேறியது. இன்று நீதித்துறை என்றாலே முஸ்லிம்கள் பேதலித்து நிற்கின்றார்கள். முஸ்லிம்களுக்கு இழைத்த அநீதிகளால் காங்கிரஸ் இழைத்துப்போய் நிற்கின்றது.

இந்நிலையில் 15 ஆண்டுகள் உருண்டோடி விட்டன. உண்மைகள் பல வெளிவரத் தொடங்கிவிட்டன.

**பொய் சொன்னேன் - அஜ்மல் கசாப்-இன் வாக்குமூலம்**

அஜ்மல் கசாப் என்பவர் உளவுத்துறையின்



கட்டுப்பாட்டில் இருந்தவர். அவர் இந்த வழக்கில் இணைக்கப்பட்டார். அவர் சிறையிலும் பிரியாணி கேட்டார் என்றெல்லாம் பீற்றிய அஜ்மல் கசாப் - இன் வழக்கறிஞர், நான் அப்போது சொன்னவை எல்லாம் பொய் என ஏற்றுக்கொண்டார்.

அஜ்மல் கசாப்பின் வழக்கறிஞர் என்றால், அவரை அஜ்மல் கசாப் நியமிக்கவில்லை. நமது அரசாங்கம் அஜ்மல் கசாப்பிற்காக அமர்த்திய வழக்கறிஞர் இவர். அஜ்மல் கசாப்பிற்காக நமது அரசு அமர்த்திய மூன்றாவது வழக்கறிஞர்.

ஏனைய இரண்டு வழக்கறிஞர்களும், அஜ்மல் கசாப்பிற்கு எதிராக புனையப்பட்ட சாட்சியங்களை நீதிமன்றத்திற்கு அழைத்து வாருங்கள், எனக் கேட்டதற்காக அவர்களை அரசு நீக்கிவிட்டது. இதில் எந்தச் சட்டவிதிகளையும் பின்பற்றிட வில்லை. சங்கப்பரிவாரம் 26/11 தாக்குதலிலிருந்து தப்பிப்பதற்கு நீதித்துறை பெரிய அளவில் உதவியது.

பரம்பிர்சிவ் IPS ஓர் ஓய்வு பெற்ற காவல்துறை அதிகாரி. ஷம்ஷெர்கான் பத்தான் என்பவர், ஜூலை 2021ல் ஓர் புகாரை மும்பை காவல் துறையிடம் பதிவு செய்துள்ளார்.அதில் 26/11/2008 மும்பைத் தாக்குதலில் கைது செய்யப்பட்ட அஜ்மல் கசாப் என்பவரிடமிருந்து ஓர் துப்பாக்கிக் கைப்பற்றப் பட்டது. அந்தத் துப்பாக்கியை நான் காவல்துறை ஆணையர் பரம்பிர்சிங் அவர்களிடம் கொடுத்தேன். அவர் அந்தத் துப்பாக்கியை உடைத்துப் போட்டுவிட்டார்.இந்த விவகாரத்தை முழுமையாக ஆய்வுக்கு உட்படுத்திட வேண்டும் என தன் புகாரில் கூறியுள்ளார்.

இந்தப் பரம்பிர்சிங் இப்போது, இன்னொரு வழக்கில் சிக்கி தலைமறைவாக இருக்கின்றார்.(DC : 27/11/2021)

இவரை தலைமறைவான குற்றவாளி என நீதிமன்றம் அறிவித்துள்ளது (TH : 27/11/2021)

### அலைபேசி அழைப்புகள்

மும்பை தாக்குதல் 26/11/2008 தாக்குதலை முழுமையாக ஒருங்கிணைத்தவர்கள், அலைபேசிகள் (VOIP - Voice Over Internet Protocol) விண்கோள் அலைபேசி போன்றவை பயன் படுத்தித்தான் தாக்குதலை ஒருங்கிணைத்தார்கள். ஆகவே அலைபேசி அழைப்புகள் விண்கோள் வழிவந்த அல்லது வந்துபோன அழைப்புகள் (Call Records) இவற்றை ஆய்வுக்கு உட்படுத்தினால், பல அறிய உண்மைகள் அவனிக்குக் கிடைக்கும் என எல்லா ஆய்வாளர்களும் கேட்டார்கள். ஆனால் இன்றளவும் அந்த அலைபேசி, விண்கோள் அழைப்புகள் இவற்றை அரசு எங்கேயும் ஒப்படைக்கவில்லை.

ஆய்வாளர்கள், விசாரணை அதிகாரிகள் இவர்களல்லாமல் 26/11/2008 மும்பைத் தாக்குதலைப் பயன்படுத்தி மூன்று காவல்துறை உயரதிகாரிகளைக் கொலை செய்தார்கள். அவர்கள் ஹேமந்த் கர்கரே, சலாஸ்கர்,அசோக் காம்தி!

இதில் ஹேமந்த் கர்கரேயின் மனைவி ஓர் கல்லூரி பேராசிரியை, தன்னால் இயன்ற முயற்சிகளை யெல்லாம் செய்து பார்த்தார், இந்தத் தொலைபேசி



கவிதா கர்கரே

அழைப்புகள் பற்றி எந்தத் தகவலும் கிடைக்க வில்லை.

கடைசியில் என் கணவர் எப்படி இறந்தார்? என்பதை பலமுறை அதிகாரிகளின் அலுவலகப் படிக்கட்டுகளில் ஏறி கேட்டுப்பார்த்தார். அவர் இதனால் ஏற்பட்ட மன அழுத்தத்தால்தான் 29.09.2014ல் இறந்தார். அதற்கு முன் சொன்னவற்றை இங்கே அவருடைய மரண வாக்குமூலமாக பதிவு செய்கின்றோம் இதே கட்டுரையில்.

### வினிதா காம்தி

அதேபோல் இறந்துபோன இன்னொரு காவல்துறை அதிகாரி அசோக் காம்தி. இவருடைய மனைவி வினிதா காம்தி. இவருடன் ஒட்டிப்பிறந்த சகோதரி ஒரு வழக்கறிஞர், இவருடைய தந்தை ,தாய் இப்படி எல்லோருமே வழக்கறிஞர்கள். அவரும் நீதிமன்றம், (RTI) என்ற தகவல் உரிமைச்சட்டம்,இப்படி எல்லா உபாயங்களையும் பயன்படுத்தி அன்று நடந்ததை அறிய முயற்சி செய்தார்.(Call Records) என்ற தொலைபேசிப் பதிவுகள் கிடைக்கவில்லை.




மும்பைத் தாக்குதலின் உண்மைகளை மூடி மறைக்க, அவசரத்தில் அள்ளித் தெளித்தக் கோலமாக, ஓர் விசாரணைக் கமிட்டியைப் போட்டார்கள். அதன் பெயர் பிரதான் கமிட்டி. எதைக் கேட்டாலும் பிரதான் கமிட்டியைக் கேளுங்கள் எனச் சொல்லி விடுகின்றார்கள்.

வினிதா காம்தி அதாவது கர்க்கரேயோடு கொலை செய்யப்பட்ட இன்னொரு காவல்துறை அதிகாரி அசோக் காம்தியின் மனைவி, இந்தப் பிரதான் கமிட்டியிடமும் சென்று முறையிட்டார், வழக்குத் தொடர்ந்தார். தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கேட்டார். ஆனாலும், எந்தப் பதிலும் கிடைக்கவில்லை.

இப்போது Call Records அலைபேசி, விண்கோள் சம்பாஷனைகள் இவற்றைப் பற்றி மிகவும் அதிசயமான உண்மை வெளியாகிறது. அது

26/11/2008ல் மும்பைத் தாக்குதலை ஏற்பாடு செய்திட, ஒரு தனி (Cell Phone Tower) தகவல் தொடர்பு மையத்தை ஏற்பாடு செய்திருக்கின்றார்கள். எல்லா தாக்குதல்களையும், கொலைகளையும் செய்து முடித்த பின் இந்தத் தொலைபேசி மையத்தை கலைத்து,உடைத்து தடம் தெரியாமல் செய்துவிட்டார்கள்.

இப்படி முழு அளவில் ஒன்றிய காங்கிரஸ் அரசின் ஒத்துழைப்போடு 26/11 என அடையாளப்படுத்தும், மும்பைத் தாக்குதலை மத்திய உளவுத் துறையும், மும்பை காவல்துறையும், இந்துத்துவ அமைப்பு களும் நிறைவேற்றி இருக்கின்றன.

(ஆதாரம்: இந்தத் தகவலையும், இதுபோல் இன்னும் பல தகவல்களையும் ஒன்றாக இணைத்து ஒரு நூலாகத் தந்திருக்கின்றார்,முன்னாள் மும்பை காவல்துறை அதிகாரி எஸ்.எம்.முஷ்ரிஃப். அந்த நூல்தான்: Brahmanists Bombed Muslims Hanged. தமிழில் பிராமணிஸ்ட்டுகள் குண்டு வைத்தார்கள், முஸ்லிம்கள் தூக்கில் தொங்கினார்கள்.)

(இப்போது வைகறையில் தொடராக வந்து கொண்டிருக்கின்றது)

### புதிய தகவல்கள் - உளவுத்துறையின் கொலைகள்

பல வழக்குகளில், அத்தனை சித்திரவதைகளுக்குப் பின்னரும் ஒப்புதல் வாக்குமூலங்களைப் பெற்றிட இயலவில்லை. அத்தகைய படியாத முஸ்லிம் இளைஞர்கள், வழக்குகளையும் வாதாடி வெற்றி பெறும் வழிக்கு வந்துவிட்டால்,அவர்கள் சிறையிலிருந்து தப்பித்துச் செல்ல முயற்சி செய்தார்கள் எனக்கூறி என்கவுண்டர்களில் போட்டுத்தள்ளினார்கள்.

இதையும் எஸ்.எம்.முஷ்ரிஃப் அவர்களின் ஆய்வில் கண்டெடுத்துள்ளார்கள்.

### கர்க்கரேயின் கொலையில் புதிய திருப்பம்

கர்கரேயின் மனைவி கவிதா கர்கரே தான்

இறக்கும் முன் சில பல வேதனைகளை வெளிப் படுத்தினார்கள். அதனைப் பார்ப்போம்,

"நான் தொடர்ந்து மூத்த காவல்துறை அதிகாரிகளைச் சந்தித்தேன். இந்தச் சந்திப்புகளின் வழி என்னுடைய கணவர் எப்படி இறந்தார் என்பதை அறிந்திடுவதே! ஆனால் யாரும் எனது கேள்விகளுக்குப் பதிலைச் சொல்லிடவில்லை.

எனக்குச் சொன்னார்கள்,நான் என் கணவர் எப்படி இறந்தார் என்பதைத் தெரிந்திடவே மாட்டேன்.

அவருடைய உடல் கிடைத்தபோது அவருடைய உடலை மறைக்கத் தரப்பட்ட குண்டு துளைக்காத ஆடை காணாமல் போய்விட்டது."

காவல்துறையினரால், குண்டு துளைக்காத ஆடையை வாங்குவதற்குப் பயன்படுத்தப்பட்ட கோப்புகள் (Files for Procuring bullet proof vests has gone missing) காணாமல் போய்விட்டன.


காவல்துறையினர் என் கணவர் இறந்த சூழ்நிலைகளைப் பற்றிய தவறான தகவல்களையே தந்து கொண்டிருக்கின்றார்கள்.

(Dinesh Lalji Gatar) தினேஷ் லால்ஜி கடார் என்ற மருத்துவமனை தொழிலாளி (Sweeper) தான் 27.11.2008இல் அதாவது மும்பைத் தாக்குதல் நடந்த மறுநாள் கர்கரே அணிந்திருந்த குண்டு துளைக்காத கவசத்தை (மேலாடையை) குப்பைத் தொட்டியில் போட்டுவிட்டேன் என ஒரு மாஜிஸ்ட்ரேட் முன் கூறியுள்ளார். (NDTV,Dec: 24,2009).

இதுவே உண்மையை மூடி மறைத்திட காவல் துறையினர் செய்த மிகப்பெரிய பித்தலாட்டம் என்கின்றார் வழக்கறிஞர் Y. P. சிங் என்பவர். அவர் தான் (RTI) தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் போட்ட மனுவில் இது எதுவுமே சொல்லப் படவில்லை. இப்போது திடீரென ஒரு மருத்துவமனை தொழிலாளி (Sweeper) எங்கிருந்து வந்தான் என்பது தெரியவில்லை.

கர்கரேயின் மனைவி கவிதா கர்கரே தன் மரணம் வரை தெரிந்துகொள்ள விரும்பியதெல்லாம்,தன் கணவர் எப்படி கொலை செய்யப்பட்டார்? என்பதைத்தான். அதை அறிந்திடவே இந்த மத்திய மாநில அரசுகள், மத்திய உளவுத்துறை, மாநில உளவுத்துறை இவையெல்லாம் அவருக்கு உதவிடவில்லை.

இறந்த காவல்துறை அதிகாரி கர்கரேயின் மனைவியையும், அவருக்கு பதில் சொல்ல மறுத்ததன் மூலம் கொலை செய்துவிட்டார்கள். இதனை விளக்கமாக வைகறை வெளிச்சம் வாசகர்களுக்குக் கூறியுள்ளோம். கூறியதைக் கூற போரடிக்கும் என்பதால் இங்கே அவற்றை விட்டுவிடுகின்றோம்.



முஷ்ரிஃப்

நாம் வீடியோவில், எழுப்பிய கேள்விகளுக்கு விடை சொல்ல முற்படுகின்றார்கள். முதலில் வீரமகன் கர்கரேயின் மனைவிக்குப் பதில் சொல்லட்டும். இப்போது கர்கரேயின் மனைவியும் இறந்துவிட்ட நிலையில், அவருடைய பிள்ளைகள் இன்று அநாதைகள் மகள்கள் ஷயாலி கர்கரே, ஜூல் கர்கரே, ஆகாஷ் கர்கரே (மகன்) ஆகியோருக்காவது தங்கள் தந்தை யாரால் எப்படிக் கொலை செய்யப் பட்டார் என்பதைச் சொல்லுங்கள். அதேபோல் அவர்களுடைய தாயார் எப்படி இறந்தார் என்பதையும் சொல்லுங்கள்.

**இறுதியில் அண்மைத்தகவல்,**
**கழுத்தில் குண்டைப் பாய்ச்சிய காவலர்**

கர்கரே, ரங்காபவன் தெருவில் வந்த குவாலிஸ் காரில்,அபினவ் பாரத் அமைப்பைச் சார்ந்தவர்கள் சுட்ட பின்னரும் சாகவில்லை. அவர் குற்றுயிரும் குலை உயிருமாகக் கிடந்திருக்கின்றார். அங்கு காலதாமதமாக வந்த காவலர், அவர் உயிருடன் இருப்பதைப் பார்த்து தன் கையிலிருந்த கைத்துப்பாக்கியால் அவருடைய கழுத்தில் ஒரு குண்டைப் பாய்ச்சி இருக்கின்றார். அந்த கான்ஸ்டபிள் பெயர் சஞ்சய் கோவில்கர். இவர் அப்போது துணை காவல் ஆய்வாளர் (Asst. Police

Inspector) இப்போது அவர் மும்பை காவல் துறையில் இணை ஆணையராக இருக்கின்றார். (Asst. Commissioner of Police)

இது கர்கரேயின் பிரேதப் பரிசோதனையில் கிடைத்த உண்மைகள் ஒன்று.


எஸ்.எம்.முஷ்ரிஃப் அவர்கள் இது பற்றிய முழுமையான தகவல்களைத் திரட்டி ஓர் அறிக்கையை, மராட்டிய மாநில தலைமைச் செயலாளருக்கு அனுப்பியிருக்கின்றார். ஆனால் வழக்கம் போல் எந்த பதிலுமில்லை,அது குறித்து எந்த விசாரணையுமில்லை.

பின்னர் 15, ஜூலை 2021ல் காவல்துறையில் IPS என்ற காவல் பணியகம் தலைமைக்குக் கடிதங்களை எழுதியுள்ளார். அங்கு வசிப்பவர்கள் அனைவரும் IPS அதிகாரிகள். அவர்களும் எந்தச் சலனமுமில்லாமல் இருக்கின்றார்கள்.

தங்களைப் போன்ற ஒரு சக IPS அதிகாரிக்கு ஏற்பட்ட அவலங்களைப்பற்றி அவர்கள் கிஞ்சிற்றும் கவலைப்படவில்லை.

- MGM.


"ஒரு தாக்குதலை தொடர்ந்து அதற்கு பிறகு ஒரு தீவிரவாத அமைப்பு அந்த தாக்குதலுக்கு பொறுப்பேற்று கொள்வதும், ஆனால் பின்னாட்களில் அது அரசால் திட்டமிட்டு உருவாக்கப்பட்டது என்றும், அதில் கைது செய்யப்பட்டவர்கள் அப்பாவிகள் என்றும் நீதிமன்றத்தில் விடுவிக்கப்படுவதும் இந்தியாவிற்கு புதிதல்ல.




வாங்கிப் படியுங்கள்:
கர்கரேவை கொலை செய்தது யார்?




இந்தியாவை இந்து ராஷ்டிரமாக மாற்றுவதில் காங்கிரஸ்-ஐ சார்ந்த பல முக்கிய அரசியல் பிரமுகர்கள், அஃதல்லாத பொதுவான சமூக ஆர்வலர்கள் இவர்கள் அனைவரும் பெரும் பங்காற்றி இருந்தார்கள். இதையெல்லாம் உலகம் அறிந்திடும் முன் கர்கரேயைக் கொலை செய்து விட்டார்கள். பின்னர் அந்தப் பழிகளையெல்லாம் ஓர் பாலகன் அஜ்மல் கசாப்-இன் மேல் போட்டு மொத்த உண்மைகளையும் மறைத்து விட்டார்கள்.

விலை: 30/- மட்டுமே...

8072773868

Vergal Pathippagam




# எங்கே அந்த ஆட்டமும், அவசரமும்?

26/11/2008ல் நடந்த மும்பைத் தாக்குதலுக்கு ஆண்டுதோறும், அரசு விழா ஒன்று எடுத்து வந்தார்கள்.

அது அன்று இறந்தவர்கள், அதாவது (இந்துத்துவ) தீவிரவாதிகளால் கொலை செய்யப்பட்டவர்களுக்கு நினைவுகள் என்ற பெயரில் தொலைக் காட்சிகளில் மும்பை தாஜ் ஹோட்டல் தாக்கப் படுவதும், மும்பை இரயில் நிலையத்தில் அப்பாவிகள் தாக்கப்படுவதுமே காட்டப்படும்.

தொடக்க நாட்களில் பாகிஸ்தானிலிருந்து வந்த முஸ்லிம் தீவிரவாதிகள் எனப் பொதுப்புத்தியில் பதிய வைத்திருந்தார்கள்.

இதனால் 26/11க்கு ஒரு நினைவுநாள் என்பது முஸ்லிம் தீவிரவாதம், பாகிஸ்தான் தீவிரவாதம் என மக்கள் மனதில் மீண்டும், மீண்டும் பதிய வைக்கப் பயன்படுத்தப்பட்டது.

காலப்போக்கில் உண்மைகள் மெல்ல மெல்ல, மக்கள் மனங்களில் பதிந்தன. அத்தோடு இந்துத்துவ வாதிகளின் வேஷங்கள் பல துறைகளிலும் கலைந்தன.

இந்நிலையில் 26/11/2008 க்கு விழா எடுத்தால், அது "Saffron Terrorism"என்ற காவி பயங்கரவாதத்தின் உண்மை முகத்தை நாட்டு மக்களுக்கு நினைவு படுத்துவதாகவே அமையும் என்பதனால், இந்த முறை 26/11ஐ சுற்றியுள்ள ஆட்டம், கொண்டாட்டம், மெழுகுவர்த்தி ஒப்பனைகள் எதையுமே காணோம். அரசியல் சாசன நாள் என தங்கள் பார்வையை வேறுபக்கம் திருப்பிக் கொண்டார்கள்.

அரசியல் சாசன நாளுக்கு எப்போதுமில்லாத முக்கியத்துவம் தரப்பட்டது. நாள் முழுவதும் பல கருத்தரங்கங்கள் நடத்தப்பட்டு தொலைக் காட்சிகளின் பார்வை முற்றாக வேறுபக்கம் திருப்பப்பட்டுவிட்டது.

அரசாங்கத்திற்கும் நன்றாகத் தெரியும், நம்மைப் போன்றவர்கள் இந்த நாளிலும் அதில் நடத்தப் படும் கோலாகலங்களுக்கும் அதிக முக்கியத்துவம் தந்திடுவோம் என்று. அதனால் நம்மைப் போன்றவர்களுக்குப் பதில் சொல்லிடும் முகமாக, பாகிஸ்தான் தூதரை அழைத்து 26/11க்கு பாகிஸ்தான் தொடர்பு குறித்து விரைந்து விசாரிக்க வேண்டும் என கூறியதாக ஒரு குறிப்பை மட்டும் பத்திரிக்கைகளுக்கு தந்திருக்கின்றார்கள்.

உண்மை படிதாண்டும் முன், பொய் ஊரைச் சுற்றி வந்துவிடும் என்ற பதத்திற்கேற்ப பொய் அன்றே ஊர்சுற்றி ஓய்ந்துபோனது. உண்மை உரக்க ஒலித்துக் கொண்டிருக்கின்றது. அது மக்கள் மனங்களில் பதியத் தொடங்கிவிட்டது.

இந்தியாவில் யார் தீவிரவாதச் செயல்களைச் செய்து கொண்டிருப்பவர்கள் என்ற உண்மையை ஊரறியச் செய்ததில் "வைகறை வெளிச்சம்" முன்னணியில் நின்றது, அல்ஹம்துலில்லாஹ்! இன்னும் நின்று கொண்டிருக்கின்றது. ஒவ்வொரு முறை இந்தியாவில் குண்டுவெடிப்புகள் நடந்தபோதும் அதில் மறைந்திருக்கும், காவிப் பயங்கரவாதத்தின் முகத்தை மக்கள் மன்றத்தில் வெளிச்சம் போட்டுக் காட்டி இருக்கின்றோம் விடியல் வெள்ளி, வைகறை வெளிச்சம் ஆகியவற்றின் வாயிலாக!

அதன் பின்னர் நாமும் நம்மைப் போன்று சில பத்திரிகைகளும் தேசிய அளவில் மேற்கொண்ட முயற்சிகளின் முத்தாய்ப்பாக,மராட்டிய காவல் துறையின் முன்னாள் இன்ஸ்பெக்டர் ஜெனரல் எஸ்.எம். முஷ்ரிஃப் அவர்கள் தனது அன்பு நண்பர் வீரமகன் ஹேமன் கர்கரேக்கு நீதி தேடிப் புறப்பட்டார், உச்சநீதிமன்றம் நோக்கி.

உச்ச நீதிமன்றத்திலிருந்து, உயர்நீதிமன்றம் அனுப்பப்பட்டார். இப்படி நீதிமன்றங்களின் படிக்கட்டுகளில் ஏறி, இறங்கி அலைக்கழிந்த பின் மக்கள்மன்றம் நோக்கிவந்தார். கர்கரேயைக் கொலை செய்தது யார்? இந்தியத் தீவிரவாதத்தின் உண்மை முகம் என்ற நூலுடன்.அது இந்தியா விலுள்ள எல்லா மொழிகளிலும் வெளிவந்தது. ஓரிரு மொழிகளைத் தவிர.

ஓரிரு திரைப்படங்களும் வெளிவந்தன. தமிழில் "ஆரம்பம்" என்ற பெயரிலும் ஒரு படம் வந்தது. அது போலி, குண்டுதுளைக்காத ஜாக்கெட் Bullet Proof Jacket or vest என்பதை மக்களுக்குப் புரிய வைத்தது.

அரசாங்கம் ஹிந்தி உலகில் சிலரை ஏவிவிட்டு அதன் பொய்களை உண்மைகளாகக் காட்டிடும் திரைப்படம் ஒன்றை படைத்து பயணிக்கவிட்டது. ஆனால் எடுபடவில்லை உண்மையே நிலைத்தது.

ஆக மக்களின் பொது புத்தியில் உண்மையான தீவிரவாதிகள் யார்? அப்பாவிகள் யார்? என்பது தெளிவாக்கப்பட்டுவிட்டது. அல்ஹம்துலில்லாஹ்.



இதனிடையே பல தீவிரவாத வழக்குகளில் கைது செய்யப்பட்ட முஸ்லிம் இளைஞர்கள், அப்பாவிகள், அவர்களுக்கு எந்த சாட்சியமுமில்லை என்ற தீர்ப்புகள் பல வந்துவிட்டன. அவர்கள் விடுதலை அடைந்துவிட்டார்கள். ஆனால் இந்த இடைவெளியில் அவர்களின் வாழ்க்கையில் பொன்னரிய பருவம் தொலைந்து போயிற்று, குடும்பங்கள் குலைந்துபோயின.


பலர்,இந்த நாட்டில் முஸ்லிம்களுக்கு எதிராக எப்படியொரு பயங்கரவாதம் கட்டவிழ்த்து விடப்பட்டது, பட்டுக்கொண்டிருக்கின்றது என்பனவற்றை அறியாதவர்களாக இருந்தார்கள். எந்தக் குற்றமும் செய்யாத நிலையில், திடுதிப்பென காவல்துறை கைது செய்தால்,என்ன செய்வது என அறியாதிருந்தவர்கள். நாட்டுக்கு எதிரான குற்றம், போர் என்பன போன்ற வழக்குகளிலும் தடா, பொடா, ஊபா போன்ற சட்டங்களின் பாய்ச்சலையும் தடுத்து, சட்டத்தை சிறையில் இருந்தபடியே படித்து வழக்குகளிலிருந்து வெளியே வந்துள்ளார்கள். வழக்கறிஞர்களாக மாறி உள்ளார்கள். தங்களைப்போல் சிறையிலிருப் பவர்களின் வழக்குகளை நடத்திக் கொண்டிருக் கின்றார்கள்.

அத்தோடு இடைவிடாமல் சமுதாயங்களில் எப்படி அப்பாவி முஸ்லிம் இளைஞர்கள் சிக்க வைக்கப்படுகின்றார்கள், என்பதைத் தெளிவுபடுத்தி வருகின்றார்கள்.

இதுபோன்ற பிரச்சாரங்கள் மக்களிடையே நல்ல விழிப்புணர்வுகளை ஏற்படுத்தி வருகின்றன.

**வெளிநாடுகளில் ஆய்வுகள்**

இந்தியாவில் நடக்கும் இதுபோன்ற அநீதிகள், வெளிநாட்டு ஆய்வாளர்களை ஈர்த்துள்ளன. அவர்கள் நம் நாட்டில் நடக்கும் குண்டு வெடிப்புகள், குண்டு வெடிப்புகளை நடத்திக் கொண்டிருப்பவர்கள் யார்? குண்டு வெடிப்புகளுக்கு பழி சுமப்பது யார்? என்பன போன்றவற்றையும், மீடியாக்கள் என்ன செய்தன என்பதையும் ஆய்வுக்கு உட்படுத்தி வருகின்றார்கள். அவர்களில் ஜெர்மன் நாட்டு ஆய்வாளர், இல்யாஸ் டேவிட்சன் அவர்களின் ஆய்வு, நூலாக வந்திருக்கின்றது. அந்த நூலுக்கு அவர் வைத்த பெயர் The Great Betrayal "மிகப்பெரிய துரோகம்".




ஊடகங்கள், ஒன்றிய அரசுகள் (காங்கிரஸ்& பா.ஜ.க) உளவுத்துறை இவையெல்லாம் இணைந்து துரோகங்களைச் செய்து ஓர் இந்து ராஷ்டிராவை உருவாக்கிட முனைகின்றார்கள்.

-MGM



# பாபரி மஸ்ஜித்

## என்றும் நம் நினைவில்

## காப்பாற்றத் தவறிய இரண்டு முஸ்லிம்கள்

பாபரி மஸ்ஜித் இடிப்பு என்பது இந்தியாவின் மகாத்மியத்தை, மாண்புகளை குழிதோண்டிப் புதைத்த ஒன்று. பாசிஸ்டுகளின் இந்து ராஷ்டிராப் பாட்டையை விரிவாக்கித் தந்த ஒன்று.

பாபரி மஸ்ஜிதை இடிக்க அனுமதித்த வல்லுநர்கள் (காங்கிரஸ் பிரதமர் P.V.நரசிம்மராவ்) பாபரி மஸ்ஜிதை இடிக்க மட்டும் அனுமதிக்க வில்லை, இந்தியாவையே இடித்துத் தகர்த்திடப் பாதை போட்டுத் தந்தார்கள். நாட்டின் அழிவுக்கு ராஜபாட்டை போட்டுத் தந்தார்கள்.

முஸ்லிம்கள் மட்டுமல்ல நல்லுள்ளம் கொண்டவர்கள் இந்தியாவில் எல்லோரும் கூடி வாழலாம். கோடி சாதனைகளைச் சாதிக்கலாம். வல்லரசு இந்தியாவை வலிமையான நீதம் நிறைந்த அடித்தளங்களில் மேல் எழுப்பலாம். அதனால் இந்தியாவின் மனிதத்தையும், அருமையையும் உலக அரங்கில் நிலை நிறுத்தலாம். இந்தியாவின் குடிமக்கள் என்றால் கண்ணியமான ஒரு நாட்டின் குடிமக்கள் என்ற மாண்போடும், மரியாதை யோடும் பிறரால் பார்க்கப்படுவார்கள் என்பன போன்ற எல்லாக் கனவுகளையும் தகர்ந்து விட்டார்கள் இந்த பெரும் சதியில் பாபரி மஸ்ஜித் இடிப்பு என்னும் பெரும் சதியில் ஈடுபட்டவர்கள், சதித்திட்டங்களைத் தீட்டியவர்கள், அதனை செயல்படுத்தியவர்கள், செயல் முறைகள் எல்லாம் இன்னும் முழுமையாக மக்களை வந்தடைந்திட வில்லை.

அகழ்ந்து எடுத்துக்கொண்டே இருக்கின்றார்கள். பல உண்மைகள், நமக்குக் கிடைத்துக்கொண்டே இருக்கின்றன. அவற்றை மக்கள் மன்றத்தில் வைத்து வருகின்றோம்.

ஏனெனில் எதிர்கால தலைமுறையினரும், இன்றைய தலைமுறையினரும் அறிந்து தெளிந்திட. அவர்கள் எத்தகைய வாதும் சூதும் நிறைந்த உலகில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள் என்பதையும், இந்தச் சூழலை எப்படி வெற்றி கொள்ளலாம் என்பதையும், அறிந்து தெளிந்து வாழ்ந்திடலாம்.


இன்றும் என்ன பாபரி மஸ்ஜிதைப் பற்றி அரற்றிக் கொண்டிருக்கின்றீர்கள், என சில பலர் அங்காய்க் கலாம். ஆனால் இவை அரற்றல்கள், அறிவுடைய வாதங்கள். வரலாற்று ஆவணங்கள் என்பதை வாசகர்கள் உணர்வார்கள் என்பதை நாமறிவோம். அந்தப் பின்னணியில் இந்த வரலாற்றுத் தடங்களைச் சமர்ப்பிக்கின்றோம்.

*06.12.1992*ல் பாபரி மஸ்ஜித் இடிக்கப்படும் போது காங்கிரஸ் கட்சிதான் ஒன்றிய அரசின் பொறுப்பில் இருந்தது என்பதை நாம் அறிவோம். நரசிம்மராவ் தான் பிரதமர் என்பதையும் அறிவோம்.

அவருக்கும், சங்கப்பரிவாரத்திற்கும் இருந்தத் தொடர்பை நாம் நிரம்பவே நிரூபித்து இருக்கிறோம். நாம் வெளியிட்ட "பாபரி மஸ்ஜித் அடிப்படைத் தகவல்கள்" என்ற நூலிலும் இடம் பெறச் செய்துள்ளோம். அதுவும் பல ஆயிரம் பிரதிகள் மக்களைச் சென்றடைந்திருக்கின்றது.

பாபரி மஸ்ஜித் இடித்த கரசேவர்களுக்கு உற்ற துணையாய் நின்றார் நரசிம்மராவ் என்பதையும் வரலாறு பதிவு செய்திருக்கின்றது.

நாட்டு மக்களும் ,பெருமளவு முஸ்லிம்களும் சரி என்ன நடக்கும் என்று அங்கலாய்த்து விரக்தி யடைந்து நின்றிடும்போது சில ஆய்வாளர்கள் அனைத்து உண்மைகளையும், அகழ்ந்தெடுத்து மக்களுக்குத் தந்திடுவதில் வெற்றி கண்டு



நரசிம்ம ராவ்　　P.V.R.K.பிரசாத்

வருகின்றார்கள். அதில் பல அதிர்ச்சி தகவல்கள்.

காங்கிரஸ் கட்சியின் ஒன்றிய ஆட்சியில்தான் சிறுபான்மையினர் உரிமைகளில் பெரும்பாலானவற்றை இழந்தார்கள்.

பல விவகாரங்களில் காங்கிரஸ் கட்சி, ஒரு முழுநேர பாரதீய ஜனதா ஆட்சியாக முஸ்லிம்களை வதைத்திருக்கின்றது. ஆனால் முஸ்லிம்கள் அதனை பெரிதுபடுத்திடவில்லை.

பாரதீய ஜனதா கட்சிதான் எதிர்க்கட்சி என்றால் முஸ்லிம்களுக்கு வேறு வழி கிடையாது. முஸ்லிம்கள் ஒன்றாக ஒருங்கிணைந்து நமக்கு வாக்களிப்பதைத் தவிர வேறுவழி இருக்காது என்பது திண்ணம் என்பதே காங்கிரஸ் கட்சியின் எண்ணம்.

P.V.நரசிம்மராவ் இந்தியாவின் பிரதமராக ஆனவுடன், காங்கிரஸ் கட்சியில் சிலர் இவர் இந்துத்துவ ஆட்சியைத்தான் நடத்துவார் என முடிவு செய்தார்கள். இவருடைய அரசியல் வாழ்க்கையில் ஒரு கட்டத்தில், ஆந்திரப் பிரதேசத்தின் முதல்வராக இருந்தார். அப்போதிருந்தே இவர் “ஹோமங்கள்” வளர்ப்பதும், இதர பூஜை புனஸ்காரங்களையும் செய்வதுதான் எதிரிகளை வீழ்த்தும் வழி என நம்பினார்.அத்தோடு நான் தான் உண்மையான இராமபக்தன் என்றும் பீற்றிக் கொள்வார், என்கின்றார்கள்.

இவருடைய தனிப்பட்ட செயலாளராக ஆந்திரப்பிரதேச நாட்களிலிருந்தே இருந்து வந்தவர் P.V.R.K. பிரசாத் என்பவர்.நரசிம்மராவ் பிரதமர் பதவியில் அமர்ந்தவுடன் P.V.R.K.பிரசாத், இந்தியாவின் முதல் இந்துத்துவ பிரதமர், BJP பிரதமர் P.V.நரசிம்மராவ் என்றார்.

அப்போது இந்துத்துவவாதிகள், பாபரி மஸ்ஜிதை மையப்படுத்தி இந்திய மக்களைப் பிளந்திட திட்டங்களை வகுத்துக் கொண்டிருந்தார்கள். அப்போது P.V.R.K.பிரசாத், இனி பாபரி மஸ்ஜித் நிச்சயமாக இடிக்கப்படும் என்று, காங்கிரஸ் காரர்களை அழைத்து நரசிம்மராவை பிரதமர் பதவியில் இருந்து அகற்றவில்லை என்றால் இந்தியாவின் எதிர்காலம் பாழ்பட்டுப் போகும் என்றார். இத்தோடு நிற்கவில்லை நரசிம்மராவ் ஒரு அறக்கட்டளையை நிறுவி அதன்வழி பாபரி மஸ்ஜித் இடிக்கப்பட்டபின் அந்த இடத்தில் இராமர் கோயில் கட்டிட ஒரு டிரஸ்டையும் நிறுவி இருக்கின்றார். இத்தனையும் அவர் பிரதமர் ஆனவுடன் இந்த டிரஸ்டின் தலைவராக சிறுங்கேரி சீரி பாரதி தீர்த்தா சுவாமிகளை தலைமை அரங்காவலராகவும் நியமித்திருக்கின்றார்.

இத்தனையும் தெரிந்த P.V.R.K.பிரசாத் அவர்களும், மக்கன் லால் ஃபட்டேர் என்பவரும், காங்கிரஸ் காரர்களை அழைத்து விஷயத்தைச் சொல்லி இருக்கின்றார்கள். ஆகவே நாம், நரசிம்மராவின் கைகளைப் பிடிக்க வேண்டும் அல்லது அவரை பிரதமர் பதவியிலிருந்து வெளியேற்றிட வேண்டும் எனக் கேட்டிருக்கின்றார்கள்.

இதற்காக அப்போது நரசிம்மராவின் அமைச்சரவையில் இருந்த இரண்டு முஸ்லிம் அமைச்சர்களையும் இராஜினாமா செய்யச் சொல்வோம், அதன் பின் ஒவ்வொரு அமைச்சராக இராஜினாமா செய்வோம். பிரதமருக்கு நெருக் கடியைக் கொடுப்போம், அவரை இராஜினாமா செய்யச் சொல்வோம், பாபரியைக் காப்பாற்று வோம் என்று திட்டம் போட்டார்கள்.

ஆனால் அந்த இரண்டு முஸ்லிம் அமைச்சர்களும் (ஜாஃபர் ஷரீப், குலாம்நபி ஆசாத் ஆகிய இருவரும்) இராஜினாமா செய்ய மறுத்துவிட்டார்கள். இது பாபரி மஸ்ஜித் இடிப்பு இரண்டு நாட்களுக்கு முன்னால் நடந்தது.

**மஸ்ஜித் இடிக்கப்பட்டுக் கொண்டிருக்கும்போது**

அடுத்து பாபரி மஸ்ஜித் இடிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் போது, இதே முஸ்லிம் அமைச்சர்களை அணுகி, “இப்போதாவது நீங்கள் இராஜினாமா கடிதத்துடன் வாருங்கள் பிரதமரைச் சந்திப்போம். அவரிடம் நாம் இராணுவத்தை முன்னிறுத்தி மஸ்ஜித் இடிப்பதைத் தடுங்கள் இல்லையேல் நாங்கள் அனைவரும் இராஜினாமா செய்வோம்” எனக் கூறலாம் என்றார்கள். அப்போதும் இந்த இரண்டு முஸ்லிம் அமைச்சர்களும் இராஜினாமா செய்ய மறுத்து விட்டார்கள்.

இந்நிலையில் பாபரி மஸ்ஜித் இடிக்கப்பட்ட அன்று (06.12.1992ல்) மதியம் 12 மணிக்கு உத்திரப்பிரதேசத்தின் இந்துத்துவ முதலமைச்சர் கல்யான் சிங், இராஜினாமா கடிதத்தை உத்திர பிரதேசத்தின் ஆளுநருக்கு அனுப்பினார். ஆளுநர், பிரதம அமைச்சர் P.V.நரசிம்மராவை அழைத்து விவரத்தைச் சொன்னார். நரசிம்மராவ் (மஸ்ஜித் இடிக்கப்படும் வரை) இராஜினாமாவை ஏற்றுக்




கொள்ள வேண்டாம் என கூறிவிட்டார்.

முற்றாக பாபரி மஸ்ஜித் ஷஹீதாக்கப்பட்ட பின், அதில் தற்காலிக கோயில் கட்டும் பணியை நரசிம்மராவே முன்னின்று செய்தார். அப்போதே அவர் திருப்தி அடைந்தார். பின்னர் உத்திரப் பிரதேச முதல்வர் கல்யான்சிங்கின் ஆட்சி கவிழ்க்கப்பட்டது.

மூன்று நாட்கள் கரசேவர்களை அங்கே தங்கவைத்து தற்காலிக கோயிலைக் கட்டுவதற்கும், கரசேவகர்கள் பாதுகாப்பாகத் தங்குவதற்கும் ஆவன செய்தார் நரசிம்மராவ்.

பின்னர் ரெயில்வேயின் 300 கோடி ரூபாயைச் செலவிட்டு, கரசேவர்களை பத்திரமாக வீடு கொண்டு சேர்த்தார் அப்போதைய ரெயில்வே அமைச்சர் ஜாஃபர் ஷரீப்.

Source :

1.Wheels Behind The Veil by P. V. R. K. Prasad.

2.Destruction of Babri Masjid A National Dishonour by A. G. Noorani

- MGM

**பாபரி மஸ்ஜித்**
அடிப்படைத் தகவல்கள்

“1992 டிசம்பர் 6 இலிருந்து நாம் – எந்தப் பாடத்தையும் படிக்கவில்லை. அந்த நிகழ்வுகளிலிருந்து நாம் முறையான பாடங்களைப் படித்திருந்தால், பாபரி மஸ்ஜித்-ஐ மீட்க ஓர் மக்கள் இயக்கத்தைக் கட்டி எழுப்பி இருப்போம்.”
இதை செய்யாதது ஓர் வரலாற்றுப் பிழை!




ஆசிரியர்: மு.குலாம் முஹம்மது
பக்கம்: 143 பக்கங்கள்
விலை: 90/-
8072773868

Vergal Pathippagam - 8148129887

# முதல் விடுதலைப் போரில்(1857) பாபரி மஸ்ஜிதை கைப்பற்ற சதி..?

ஆங்கிலேயர்களின் கைகளிலிருந்து இந்தியாவை விடுவிக்க நடந்த மிகப்பெரிய போர் 1857ல் நடந்தது. இதை முதல் விடுதலைப் போர் என்றும் சிப்பாய் கலகம் என்றும் சித்தரிப்பார்கள். இந்தப் பெரும் போரில் ஆங்கிலேயர்களுக்கும் இந்திய போர் வீரர்களுக்கும், மக்களுக்கும் பகதூர்ஷா ஜாஃபர் அவர்கள் தலைமை தாங்கினார்கள்.

இதில் ஒட்டுமொத்த இந்தியர்களும் மத வேறுபாடுகளை, ஜாதி மாறுபாடுகளை மறந்து கலந்து கொண்டார்கள். தங்கள் உயிரைத் தந்தார்கள். இது தெருவிலே ஊர்வலம் போகும் கோழை போராட்டமல்ல, ஆயுதந்தாங்கி உயிரைத் தந்து, உயிரை எடுத்த பெரும் போர். இந்தப் போரின்போது இன்றைய இந்துத்துவவாதிகளின் அன்றைய முன்னோடிகள் கலந்துகொள்ளவில்லை.

ஆங்கிலேயர்களுக்கு ஜால்ரா போட்டுக் கொண்டிருந்தார்கள். மட்டுமல்லாமல் முஸ்லிம்கள் உள்ளிட்ட நாட்டு மக்களின் கவனம் ஒட்டு மொத்தமாக வேறு பக்கம் இருப்பதைப் பயன்படுத்தி, பாபரி மஸ்ஜித் வளாகத்தின் ஒரு பகுதியில் “ராம் சபுத்திரா” உயர்வான தளம் ஒன்றை கட்டினார்.

முதல் விடுதலைப் போர் முடிந்த பின்னர் 1858ல் தான் முஸ்லிம்கள் இதனை அகற்ற முயன்றனர். அப்போது முஸ்லிம்களின் ஆட்சிதான் அயோத்தியாவில் நடந்தது. ஆனாலும், முஸ்லிம்கள் எடுத்தேன் கவிழ்த்தேன் என இடித்துத் தள்ளாமல், அப்போது ஒரு நீதிமன்றம் வழியாகத்தான் இந்தப் பிரச்சனையைத் தீர்த்தார்கள்.

இந்த வழக்கில் 1860ல் தீர்ப்பு வழங்கிய மாஜிஸ்திரேட் பாபரி மஸ்ஜித் வளாகத்தில் எந்த உரிமையையும் எந்த மகந்தும்(பூசாரியும்) கொண்டாட முடியாது. அங்கே ராமரோடு சம்மந்தப்பட்ட இடம் எதுவுமில்லை. அப்படிக் கூறுவது ஆதாரமற்றது எனக்கூறி சபுத்ரா கட்டியது தவறு எனத் தீர்ப்பு வழங்கினார்.

இந்த சபுத்ராவுக்காக அன்றைய இந்துத்துவ வாதிகள் 1855முதலே இந்து முஸ்லிம் கலவரங்களை நடத்தி வந்தார்கள். அல்லாமல் ஆங்கிலேயர்களோடு மோதிடவில்லை. மொத்தத்தில் முஸ்லிம்கள், நாட்டை ஆங்கிலேயர்களிடமிருந்து விடுவிக்கப் போராடிக் கொண்டிருந்த போது, இவர்கள் பாபரி மஸ்ஜித்-ல் ஒரு பகுதியை கைப்பற்ற முயற்சி செய்தார்கள். இன்று தேசப்பக்தர்கள் எனப்பீற்றிக் கொள்கிறார்கள்.

Source : The Babri Masjid 1528-2003 Edited by A.G. Noorani, page : 173-175



A chapter on Hindu epic Ramayana in a compulsory sixth grade text book of a public school in Kolkata. Photo by Rudabah Simrah

# பாட புத்தகங்களில் இந்துத்துவா

இந்திய வரலாறு திருத்தி, மாற்றி எழுதப்பட வேண்டும் என்ற நோக்கில் கலாச்சாரத்துறை அமைச்சர் மகேஷ் ஷர்மா ஒரு குழுவை நியமித்துள்ளார் என்ற விஷயம் 2018 மார்ச்சில் தெரிய வந்தது. 12ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய இந்திய கலாச்சாரத்தின் தோற்றம், அதன் பரிணாமம், மற்ற கலாச்சாரங்களோடு தொடர்பு கொண்ட விதம் இவற்றை ஆராய 14 பேர் இக்குழுவில் இணைக்கப்பட்டனர்.

வரலாற்று ஆய்வாளர்கள் கூறும் காலத்தைவிட மூன்று அல்லது நான்கு மடங்கு முந்தையது ஹிந்து நாகரீகம் என்ற கருத்தின் மூலம் இரண்டு பலன்களை அறுவடை செய்ய பார்க்கிறார்கள்.

- ஒன்று, புராணங்களை வரலாறாக காட்டிவிடலாம். ஹிந்து தேசியவாதிகளின் நீண்ட கால முயற்சி இது.
- இரண்டு, ஹிந்துக்கள் தான் இந்தியாவில் வாழ்ந்த மூதாதையர்களிடம் இருந்து தோன்றிய நேரடி வழித்தோன்றல்கள் என்று நிரூபிப்பதற்காக.

இதற்கான சான்றுகளை பண்டைய வரலாற்றில் தேடுகின்றனர். அதன்மூலம் மற்றவர்களை விட நாம் தான் உயர்ந்தவர்கள் என்று ஹிந்து தேசியவாதிகள் கோரிடுவர்.

கலாச்சாரம், வரலாறு இவற்றில் மகேஷ் ஷர்மா கவனம் செலுத்தி கொண்டிருக்கும் அதே வேளையில் இதே போன்ற திட்டத்துடன் பொது கல்வியில் மாற்றத்தை கொண்டு வந்துள்ளனர்.

மாநிலங்களுக்கான மனித வள மேம்பாட்டு துறையின் முன்னாள் அமைச்சர் ராம் ஷங்கர் கதேரியா ஒரு முறை இப்படி கூறினார், "கல்வியை காவி மயமாக்குவதும், தேசத்தை காவி மயமாக்குவதும் இனிமேல் நடைபெறும்". அரசு அதன் நோக்கத்தை தெளிவுபடுத்தி விட்டதை இதன் மூலம் உணரலாம்.

NDTV LIVE TV LATEST COVID-19 INDIA VIDEO OPINION WORLD CITIES OFFBEAT TRENDS

# Brahmagupta-II Stated 'Law Of Gravity' 1,000 Years Before Newton: Rajasthan Education Minister

Speaking during a programme at the Rajasthan University in Jaipur yesterday, Mr Devnani asserted that Brahmagupta-II, known for his works in mathematics and astronomy in the 6th century, came up with a 'law of gravity' well over a thousand years ago.

All India | Press Trust of India | Updated: January 09, 2018 4:27 pm IST

தங்களுடைய கொள்கைகளை புகுத்திட புதிய பாட புத்தகங்களை எழுதுவதற்கும், அதற்கான நெறிமுறைகளை வெளியிடவும் தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் குழுவின் (NCERT - National council for Education Research and Training) வழி முயற்சித்த முன்னாள் வாஜ்பாய் அரசின் செயல்பாட்டை விட மோடி அரசின் செயல்பாடு வித்தியாசமானது. இரகசியமான நடவடிக்கைகளை கொண்டும், மாநில அரசுகளை கொண்டும் பாடப் புத்தகங்களில் மாற்றத்தை ஏற்படுத்துகிறது. புதிய கல்விக் கொள்கையை தாமதப்படுத்துவதின் நோக்கம் அதனை மோடி அரசு கைவிட்டுவிட்டது என்பதல்ல மாறாக பொது விவாதங்களை தவிர்த்துவிட்டு மறைமுக நடவடிக்கைகளின் மூலம் அதனை மக்கள் மத்தியில் புகுத்தி விடலாம் என்பதே.

சிபிஎஸ்இ (Central Board of Secondary Education) பாடத்திட்டத்தில் இயங்கும் பள்ளிக்கூடங்கள் பயன்படுத்துவதற்காக NCERT வெளியிட்ட பாட புத்தகங்களில் பெருமளவு மாற்றங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. தி இந்தியன் எக்ஸ்பிரசில் வந்த செய்தியின் படி, மனிதவள மேம்பாட்டுத்துறையின் அமைச்சர் பிரகாஷ் ஜவடேகரின் (ஆர்.எஸ்.எஸ் உறுப்பினர்) தொடர்ச்சியான தலையீட்டினால் 182 பாடப்புத்தகங்களில் 1334 இடங்களில் மாற்றங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. NCERT மற்றும் அனுபவம் வாய்ந்த கல்வியாளர்களை கலந்தாலோசிக்க வேண்டும் என்ற வழிமுறையை செயல்படுத்தாமல் 68 இடங்களில் மாற்றங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன.

முஸ்லிம்களின் வரலாற்றை நீக்கிவிட்டு அந்த இடங்களில் ஹிந்து தேசியவாதிகள் தலைவர்களாக முன்னிறுத்தும் நபர்களின் (மகாராணா பிரதாப், சிவாஜி, அரோபிந்தோ, விவேகானந்தா போன்றோர்) வரலாறுகளையும், பழங்கால இந்தியா பற்றிய கூடுதல் தகவல்களையும் (மருத்துவம், வானியல், யோகா) இணைத்துள்ளனர். வரலாற்று புத்தகங்களில் மட்டும் இந்த மாற்றங்கள் கொண்டு வரப்படவில்லை. பத்தாம் வகுப்பு அறிவியல் புத்தகத்தில் அதர்வன வேதாவில் இருந்து இரண்டு மந்திரங்கள் இணைக்கப்பட்டுள்ளன. விண்மீன் கூட்டங்கள் குறித்து ஹிந்து புராணங்கள் என்ன சொல்கின்றன என்பதை எட்டாம் வகுப்பு புத்தகத்தில் இணைத்துள்ளனர். பல பாட புத்தகங்களில் மோடி அரசின் முக்கியமான திட்டங்களைச் சேர்த்துள்ளனர்.

பிஜேபி ஆளும் மாநிலங்களில் இப்படி வரலாற்றை மாற்றி எழுதும் பணி மும்முரமாக நடைபெறுகிறது. ஆரம்ப மற்றும் இடைநிலை கல்விகள் மாநிலங்களின் கட்டுப்பாட்டில் வருவதால், தேசிய அளவில் போடப்பட்ட திட்டத்தை மாநில அளவிலும் உணர முடிகிறது.

குஜராத், ஹரியானா மாநிலங்களில் பாடப்புத்தகங்களை மாற்றி எழுதும் பணி பத்ரா என்பவரிடம் ஒப்படைக்கப்பட்டது. 2014 இல் பிஜேபி வெற்றி பெற்றபின், ஹரியானாவில் கல்வி முறையை புதுப்பிக்கும் குழுவிற்கு தலைவராக இவர் நியமிக்கப்பட்டார். குஜராத்தில் அறநெறி கல்விக்காக இவர் எழுதிய புத்தகத்தை ஹரியானா விற்கும் கொண்டு வந்தார்.

பெண் கடவுள் சரஸ்வதியின் துதி பாடலுடன் தான் இவை ஆரம்பிக்கின்றன. ஆனால் ஹிந்து மயமாக்கலின் அடையாளமாக இவற்றை எடுக்க முடியாது என வாதிக்கிறார் பத்ரா. சரஸ்வதியை மதத்தோடு தொடர்பு படுத்தக்கூடாது. பெண் கடவுளின் ஒவ்வொரு பாகங்களும் ஒவ்வொரு நற்குணங்களின் அடையாளம் அவை ஒவ்வொரு மாணவர்களும் வளர்த்து கொள்ள வேண்டியவை. நல்ல சிந்தனை கொண்ட எந்த முஸ்லிமும் இந்த குணங்களை வேண்டாம் என்று சொல்வாரா? "ஹிந்துத்துவாவையும் தேசப்பற்றையும் அடிப்படையாகக் கொண்ட ஒரு பள்ளிக்கூடத்தை எழுப்பிட வேண்டும் என்பது என் கனா" என்ற



HT Hindustan Times

Thursday, Dec 02, 2021 | New Delhi 21°C

World Cities Entertainment Cricket Lifestyle Astrology

INDIA NEWS

## Sita's birth from earthen pot shows test tube baby concept existed during Ramayana, says UP deputy CM Dinesh Sharma

Uttar Pradesh's deputy chief minister Dinesh Sharma had earlier said that journalism started during Mahabharata and Narad Muni was like Google.

Uttar Pradesh deputy chief minister Dinesh Sharma.(Subhankar Chakraborty/HT File Photo)



MumbaiMirror

Thu, Dec 02, 2021 BANGALORE MIRROR | PUNE MIRROR

Home Coronavirus Mumbai Entertainment Videos Photos Sports News Op

India World Business Fact Check

HOME / NEWS / INDIA /...

## Tripura CM Biplab Kumar Deb makes bizarre claim, says Internet and satellite existed during Mahabharata era, internet has a good laugh

Mirror Online / Updated: Apr 18, 2018, 13:28 IST

FACEBOOK TWITTER LINKEDIN EMAIL

Tripura Chief Minister Biplab Kumar Deb and Prime Minister Narendra Modi

"Internet technology existed in India during the Mahabharata era!" That's the outrageous claim made by Tripura CM Biplab Kumar Deb at a Regional Workshop on Computerisation and Reforms at Pragna Bhawan in Agartala. The BJP CM said, "Internet and satellite communication had existed in the days of Mahabharata. Sanjaya, (Dhritarashtra's charioteer) using technology, gave a detailed account and description to the blind king about the battle of Kurukshetra. It means internet was there, satellites and that technology was there in this country at that time," said Tripura CM.

பத்ராவின் ஒரு கவிதையையும் பாட புத்தகங்களில் இணைத்துள்ளனர்.

அக்பருக்கும், ராஜ்புத் அரசருக்கும் நடந்த போரில் வெற்றி பெற்றது ராஜ்புத் அரசரே என ராஜஸ்தானில் வரலாற்று பாடப்புத்தகத்தில் கொண்டு வந்த மாற்றம் தான் ஊடகங்களில் பெரிய அளவில் கவனம் பெற்றது (அக்பர் வென்றார் என்பதே வரலாறு). புதிய சமூக அறிவியல் பாட புத்தகத்தில் ஜவஹர்லால் நேருவையும், மகாத்மா காந்தி கொலையையும் இடம்பெறச் செய்யவில்லை.

மகாராஷ்டிராவில் ஏழாம் வகுப்பு வரலாறு பாடப்புத்தகத்தில் முகலாய பேரரசர் அக்பர் குறித்த அத்தியாயம் மூன்றே வரிகளில் முடிக்கப்பட்டு விட்டது. உத்தரபிரதேசத்தில் சில வரலாறு பாடப் புத்தகத்தில் முகலாயப் பேரரசு குறித்த அத்தியாயத்தை முழுவதுமாக எடுத்து விட்டார்கள். முகலாயப் பேரரசை பற்றி வரலாற்றுப் பாடத் திட்டத்தில் படிக்கும் கால அளவையும் குறைத்துள்ளது டெல்லி பல்கலைக்கழகம்.

வகுப்புவாதங்களை வளர்த்தெடுத்ததில் ஆர்.எஸ்.எஸ், இந்து மகா சபா, முஸ்லிம் லீக் ஆகியவைகளின் பங்கு என்ற அத்தியாயத்திற்கு பதிலாக தேசத்தை கட்டமைப்பதில் ஆர்.எஸ்.எஸ்.ஸின் பங்கு என்ற தலைப்பு நாக்பூர் பல்கலைக் கழக பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

உத்தரபிரதேசத்தில் எல்லாப் பள்ளிக்கூடங்களும் பங்குபெறும் வகையில் ஒரு தேர்வை நடத்தியுள்ளது சங்பரிவார். தேர்வில் கலந்து கொள்ளும் மாணவர்களுக்கு உதவுவதற்காக ஒரு சிற்றேடும் தயாரிக்கப்பட்டது, அதை 2017 ஆகஸ்டில் அமித்ஷா வெளியிட்டார். அதில் இந்தியா ஒரு இந்து ராஷ்டிரா என்றும் சுவாமி விவேகானந்தர் சிகாகோவில் இந்துத்துவாவிற்கு ஆதரவாக பேசினார் என்றும் குறிப்பிடப் பட்டுள்ளது.

கர்நாடகாவில் திப்பு சுல்தான் ஜெயந்தி மாநில அரசால் கொண்டாடப்படாது என்று அறிவித்த பின்னர், ஏழாம் வகுப்பு பாட புத்தகத்தில் இருந்து திப்பு சுல்தான் பற்றிய அத்தியாயமும் நீக்கப் பட்டது.

Covid-19 சூழ்நிலையை கருத்தில் கொண்டு 30 சதவிகித பாடத்தை குறைக்க வேண்டும் என அரசு கேட்டுக்கொண்டது. இதனை பயன்படுத்தி இந்தியா முழுவதும் இயங்கும் அரசு பள்ளிகளில் ஜனநாயக உரிமைகள், மதச்சார்பின்மை, கூட்டாட்சித் தத்துவம், குடியுரிமை போன்றவை கற்பிக்கப்பட வேண்டாமென முடிவெடுத்தது சிபிஎஸ்இ (CBSE).

சமகாலத்து அறிவியலை விட பண்டைய இந்தியாவின் அறிவியல் உயர்ந்தது என்று

மிகைப்படுத்தி சொல்வதற்கு இவர்கள் பல கதைகளை கட்டிவிடுகின்றனர். உதாரணமாக மனிதவள மேம்பாட்டுத் துறையின் மாநில அமைச்சர் சத்தியபால் சிங் "இந்தியர்களே வானூர்தியை கண்டுபிடித்தனர்" என்று கூறினார்.

ராமரின் மனைவி சீதா மண்பானையில் தான் பிறந்தார் எனவே சோதனைக்குழாய் மூலம் கருவுறுதல் முறை பண்டைய இந்தியாவில் இருந்துள்ளது என்றார் உத்திரபிரதேச துணை முதலமைச்சர். இதற்கு ஒருபடி மேலே போய், செயற்கைக்கோள்கள் தொழில்நுட்பமும், இன்டர்நெட் வசதியும் பண்டைய இந்தியாவில் இருந்துள்ளது என்றார் திரிபுராவின் முதலமைச்சர் பிப்லாப் குமார்.

ஏழாம் நூற்றாண்டில் இந்தியாவில் புவியீர்ப்பு விதி கண்டுபிடிக்கப்பட்டது என்றார் ராஜஸ்தான் கல்வித் துறை அமைச்சர். கேன்சர் நோயாளிகள் தங்களுடைய பாவத்தின் பலனையே அனுபவிக்கின்றனர் என்றார் அஸ்ஸாம் மாநில சுகாதார, கல்வி மற்றும் நிதி அமைச்சர்.


மாநிலத்தில் பாயும் ஒரு ஆறில் இருந்து நீர் அருந்தினால் அறுவை சிகிச்சையை (சிசேரியன்) கர்ப்பிணி பெண்கள் தவிர்க்கலாம் என கூறினார் உத்தரகாண்ட் பிஜேபியின் தலைவர். இனப் பெருக்கத்தில் மரபணுக்களின் பங்கு, பிளாஸ்டிக் சர்ஜரி போன்ற துறைகளை அறிமுகப்படுத்தியது இந்தியாவே என்றார் பிரதம மந்திரி மோடி. 2014 அக்டோபரில் ஒரு மருத்துவமனையில் நடந்த கூட்டத்தில் இப்படிக் கூறினார், "மகாபாரதத்தில் வரும் கர்ணன் கதாபாத்திரத்தை நாம் படிக்கின்றோம். தாயின் கருவறையில் இருந்து கர்ணன் பிறக்கவில்லை என்று மகாபாரதம் கூறுகிறது. அப்படி என்றால் மரபணு அறிவியல் அந்த காலத்திலேயே இருந்துள்ளது. கடவுள் கணேசனை நாம் வணங்குகிறோம் . மனித உடலில் யானையின் தலையை பொருத்திடும் பிளாஸ்டிக் அறுவை மருத்துவர்கள் கண்டிப்பாக அப்பொழுது இருந்திருக்க வேண்டும். அதிலிருந்தே பிளாஸ்டிக் சர்ஜரி முறை ஆரம்பித்துள்ளது".

இதே போன்ற கதைகளை அவிழ்த்துவிடும் பொழுதெல்லாம் பகுத்தறிவுவாதிகளிடம் இருந்து எதிர்ப்பு கிளம்பியுள்ளது. அப்படி எதிர்த்த நரேந்திர தபோல்கர், கோவிந்த் பன்சாரே, கல்புர்கி ஆகியோர் கொலை செய்யப்பட்டுவிட்டனர். வரலாற்றை மாற்றி எழுதும் பணியில் ஹிந்து தேசியவாதிகள் முனைப்புடன் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத்தான் மேலே சொன்ன விவரங்கள் எடுத்துக்காட்டுகின்றன.

*தகவல்கள்:* Scroll.in, 19 November 2021

அபூஹாசின்



# தனக்குரியவருக்காக காத்திருக்கும்

# இரயில்....!

இந்த இரயிலுக்காகத் தான் முழு முஸ்லிம் உம்மத்தே காத்துக் கொண்டிருந்தது.......... அந்த இரயில் தான்.... உஸ்மானிய கலீஃபா அப்துல் ஹமீது ஸானீ(ரஹ்) அவர்களால் உருவாக்கப்பட்ட இரயில் .....

ஒட்டுமொத்த இஸ்லாமிய உலகத்தையும் இணைக்கும் வண்ணமாக அனைத்து இஸ்லாமிய நாடுகளிலிருந்தும் மக்கா வரைக்கும் சென்றடையும் ஒரு இரயில் பாதையை உருவாக்கினார்.

வரலாற்றில் அது ஹிஜாஸ் இரயில்பாதை என்று அறியப்படுகிறது. அனைத்து இஸ்லாமிய நாடுகளையும் இணைக்கும் வண்ணம் அமைக்கப்பட்டதால் அந்த இரயிலில் பயணிப்பவர் எகிப்திலிருந்து ஷாம், மக்கா, மதீனா, இஸ்தான்புல், அல்ஜீரியா இன்னும் ஏன் மேற்கு நாடுகளுக்கும் தனது பயணத்தைத் தொடர்ந்து மிக எளிமையாக தான் நினைக்கும் இஸ்லாமிய நாடுகளுக்கும், மேற்கு நாடுகளுக்கும் குறைந்த காலளவில் சென்றடையும் வண்ணம் ஏற்படுத்தப்பட்டது.

இன்றைக்கு இந்த திட்டம்தான் ஐரோப்பா நாடுகளில் மத்தியில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.



1900ல் உஸ்மானிய கலீஃபா அப்துல் ஹமீது ஸானீ(ரஹ்) அவர்களது காலத்தில் தான் முழு முஸ்லிம் உம்மத்திற்கும் பயனுள்ள திட்டமான ஹிஜாஸ் ரயில் பாதை திட்டம் உருவாக்கப் பட்டது.

இந்த திட்டத்திற்கு என்பது மில்லியன் லீரா (துருக்கி பணம்) இன்னும் 5000 வேலையாட்கள் தேவை என மதீப்பீடுச் செய்யப்பட்டது. எனவே இந்த பிரம்மாண்ட திட்டத்திற்காக உதவிக்கரம் நீட்டுமாறு ஒட்டு மொத்த இஸ்லாமிய உம்மத்திற்கும் அழைப்பு விடுத்தார் சங்கைக்குரிய கலீஃபா அவர்கள்.

சீனா, எகிப்து, இந்தியா, ஷாம் இன்னும் உலகத்தின் எல்லா பகுதிகளிலிருந்தும்

முஸ்லிம்கள் தங்களால் இயன்றதை இந்த திட்டத்திற்காக அர்ப்பணித்தார்கள். எண்ண முடியாதளவுக்கான கோடிக்கணக்கான பணம், தங்கக்கட்டிகள், வேலையாட்கள், என அனைத்தும் தயாரானது.

இறைவனது பேரருளால் 1908 ஆம் ஆண்டு நிறைவடைந்து. மார்க்கத்தை நேசிக்கக் கூடிய, முஸ்லிம் உம்மத்தை விரும்பக் கூடிய ஒவ்வொரு முஸ்லிமின் பேராவல் செயல் வடிவம் பெற்றது. ஆம் உலகத்தின் எந்தவொரு மூலையிலிருந்தும் ஹஜ்ஜுக்கு புறப்படும் ஹாஜி எல்லா வசதிகளுடன் ஐந்தே நாளில் மக்காவை அடையலாம்.

பிறகு 1915 இல் யூத நாய் லாரன்ஸ் அரபியும் அவனது கூட்டாளிகளும் அந்த இரயிலை உடைத்தார்கள். இரயில் பாதையையும் அழித்தார்கள் இதற்கு பிறகு இஸ்லாமிய கிலாஃபத்தையும் தகர்த்தார்கள் இஸ்லாமிய நாடுகளைப் பிரித்தார்கள். அந்த நாடுகளுக்கு மத்தியில் எல்லைகளை அந்த துரோகிகளே நிர்ணயித்தார்கள்.

ஒற்றை உம்மத்தாக இருந்தபோது முஸ்லிம்களது நாடுகளுக்கு மத்தியில் எல்லைகள் என்பதுமில்லை நுழைவு அனுமதி தேவையே இல்லை. ஒரே உம்மத்தாக இருந்தபோது அரபிகள், அஜமிகள் என்ற வேறுபாடு கருப்பர்கள், வெள்ளையர்கள் என்ற பாகுபாடு எதுவும் கிடையாது.

இஸ்லாம் நம்மை இணைத்தக் காலத்தில் முஸ்லிமாகவே ஆண்டோம், முஸ்லிமாகவே எதிரிகளை எதிர்த்தோம், முஸ்லிமாகவே வாழ்ந்தோம், முஸ்லிமாகவே உயிர் துறந்தோம்.

தனக்குரியவரான கலீஃபாவிற்கு இரயில் மட்டும் காத்துக்கொண்டிருக்கவில்லை முஸ்லிம் உம்மத்தும் காத்துக்கொண்டு தான் இருக்கிறது.

**அரபி மூலம்: தியானத் டிவி**




# CRUSADE 2.0 BY JOHN FEFFER

**The west Resurgent War on Islam**

# சிலுவைப் போர் 2.0

**மேலை நாடுகள் இஸ்லாத்தின் மீது தொடுக்கும் மறு உயிர் பெற்ற போர்**




இன்றைய நாள்களில் மேலைநாட்டவர்கள் அமெரிக்காவின் தலைமையின் கீழ் இஸ்லாத்தின் மீதும் முஸ்லிம்களின் மீதும் ஒரு பெரும் போரைத் தொடுத்து வருகின்றார்கள். இந்தப் போரை அவர்கள் சிலுவைப் போர் 2.0 என அழைக்கின்றார்கள். சுருக்கமாகச் சொன்னால் நாங்கள் முஸ்லிம்கள் மேல் தொடரும் இரண்டாவது சிலுவைப் போர் என்கின்றார்கள். சிலுவைப் போர்கள் என்றாலே அது முஸ்லிம்களுக்கும் கிருஸ்தவர்களுக்கும் இடையே நடந்த போர் என்று பொருள். இப்போது நடப்பது இரண்டாவது சிலுவைப் போர் என்றால் முதல் சிலுவைப் போர் எப்போது தொடங்கியது? எப்போது முடிந்தது?

முதல் சிலுவைப் போர் 1095ல் தொடங்கி 1274ல் முடிந்தது. அவை 9 போர்களாக நடந்தன. அவற்றை சிலுவைப்போர் 1.0 என்று கிருஸ்தவ உலகம் அழைக்கின்றது.

சிலுவை யுத்தம் 2.0 என்ற இரண்டாவது சிலுவைப்போர் 1991ல் தொடங்கியது என்பது வரலாற்று வல்லுநர்களின் கணிப்பு. இதனை முதல் வளைகுடா போர் என அழைப்பார்கள். இந்த சிலுவைப் போர் 2.0வை எப்படி நடத்திக் கொண்டிருக்கின்றோம் என்பதை ஜான் பெஃபர் என்பவர் ஒரு நூலாகத் தருகின்றார். அந்த நூலின் பெயர் CRUSADE 2.0 THE WEST'S RESURGENT WAR ON ISLAM அதாவது சிலுவைப் போர் 2.0 மேலை நாடுகள் இஸ்லாத்தின் மீது தொடுக்கும் மறு உயிர் பெற்ற போர்.



இந்த நூலின் தமிழ் வடிவமே இந்தத் தொடர். முஸ்லிம்கள், முஸ்லிம் நாடுகள், இஸ்லாம், இவற்றின் மேல் இன்றைய நாட்களில் நடக்கும் தாக்குதல்களைப் புரிந்திட இந்தத் தொடரைப் படியுங்கள். இது தொடரல்ல. பயன் பயக்கும் பாடம். வரலாற்றுத் தொகுப்பு.

**தமிழ் வடிவம்: மு. குலாம் முஹம்மது.M.A.,**

# மாணவர்கள் எழுச்சி!



பதவி, அதைச் சுற்றிவரும் பவிசு, ஆடம்பரமான வாழ்க்கை இவற்றுக்கு இந்த இயக்கத்தினர் வளைந்து கொடுக்க மாட்டார்கள் என்பதைத் தெரிந்து கொண்டதும் ஆட்சியாளர்கள் அடக்கு முறைகளைக் கட்டவிழ்த்து விட்டார்கள்.

இதுதான் ஆட்சியாளர்களுக்கும், இஸ்லாமிய இயக்கத்தவர்களுக்கும் ஏற்பட்ட முதல் கசப்பான அனுபவம்.

அரசின் அடக்குமுறைகள் அளவுகடந்து செல்லவே இந்த இயக்கத்தினர் தங்களுடையப் பிரச்சாரத்தை மறைமுகமாகச் செய்ய வேண்டியதாயிற்று. ஆகவே இந்த இயக்கத்தவர்கள் தங்களுடைய இல்லங்களில் கூடி திருக்குர்ஆன் மனனம் செய்தல், ஹதீஸ்களைக் கற்றல், ஆகியவற்றைச் செய்து கொண்டிருந்தனர்.

அல் இஹ்வான் அல் முஸ்லிமூன் என்ற, இயக்கத்தை ஆரம்பித்த இமாம் ஹசன் அல் பன்னா(ரஹ்) அவர்களும், அவர்களுடைய இயக்கத்தவர்களும் இது போன்ற அடக்கு முறைகளைச் சந்தித்தவர்கள். ஆகவே இந்த இயக்கத்தின் இந்தக் கட்டத்தை "இஹ்வான் கட்டம்" (IKHWAN PHASE) என அழைக்கின்றனர் இந்த இயக்கத்தின் செயல்வீரர்கள்.

வெளிப்படையாகச் செயல்பட அனுமதிக்காத இந்தக் காலத்தில் அவர்கள் இந்த நூற்றாண்டின் தலைசிறந்த இஸ்லாமிய அறிஞராகத் திகழ்ந்தவர்களின் நூல்களையும், பேரறிஞர்கள் செய்யது குதுப்,முஹம்மது குதுப் ஆகியோரின் நூல்களையும் அதிகமாகக் கற்றனர்.

இந்நிலையில் கன்னவ்சி அவர்கள், துனீஸிய பள்ளி ஒன்றில் தத்துவத் துறையில் ஆசிரியராகச் சேர்ந்தார். அங்கே மாணவர்களை இஸ்லாமிய அச்சில் வார்த்தெடுக்க முயன்றார்.

இந்த மாணவ மணிகள் பள்ளிப் படிப்பை முடித்துவிட்டு பல்கலைக்கழகங்களில் பிரவேசித்தபோது அங்கேயும் இஸ்லாமிய எழுச்சியை ஏற்றி வைத்தனர்.

பள்ளி நாட்களில் பள்ளிகள்தோறும் ஒரு பள்ளிவாயிலை நிறுவுவதும், அதில் அல்லாஹ்வை தொழுகின்ற தலையாயக் கடமையை நிறைவேற்றுகின்ற ஒரு தலைமுறையை உருவாக்குவதிலும் கன்னவ்சி அவர்களும், அவர்களின் மாணவர்களும் ஈடுபட்டனர். இதேப் பணியை பல்கலைக்கழகங்களிலும் தொடர்ந்தனர்.

இதுபோன்ற பணிகளைச் செய்தமைக்காக பல மாணவ மணிகள் பல்கலைக்கழகங்களைவிட்டு வெளியேற்றப்பட்டனர். பலர் கல்வியைத் தொடர முடியாத நிலைக்கும் ஆட்படுத்தப்பட்டனர். ஆனாலும் அந்த மாணவ மறவர்கள் இறைவனை வணங்குகின்ற ஒரு தலைமுறையை உருவாக்குவதில் தொய்வோ, தளர்வோ காட்டிடவில்லை.

1977ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் இந்த இயக்கத்தைச் சேர்ந்த மாணவர்கள் தங்களுடைய கல்லூரி வளாகத்திற்குள் ஒரு கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தனர். இந்தக் கூட்டம் நடக்கவிடாமல் தடுத்திட ஹபீப் போர்கிபாவின் அரசு தன்னுடைய முழு பலத்தையும் பிரயோகித்தது.

நாடு முழுவதும் இளைய தலைமுறையினர் தொழுகை அழைப்பைச் செவிமடுத்ததும், இறைவனை வணங்க இறையில்லம் நோக்கி விரைகின்ற நிலைகண்டு ஆட்சியிலே இருந்தவர்கள் அதிர்ந்து போயிருந்தனர். ஆகவே இதுபோன்ற கூட்டங்களை அவர்களால் பொறுத்துக்கொள்ள இயலவில்லை.

மாணவர்களும் கூட்டம் நடத்தும் திட்டத்தைக் கைவிடுவதாக இல்லை. ஆகவே வேறுவழியின்றி அரசின் கைப்பாவையாய்ச் செயல்பட்டுக் கொண்டிருந்த இடதுசாரி அமைப்புகளை தூண்டிவிட்டு இந்தக் கூட்டத்தைத் தடைசெய்ய ஆட்சியாளர்கள் முயன்றனர். முடியவில்லை. எனவே தங்களது கடைசி கையிருப்பான வன்முறையைக் கட்டவிழ்த்துவிட்டனர்.

அரசும், இடதுசாரி அமைப்புகளும் சேர்ந்து

கட்டவிழ்த்துவிட்ட இந்த வன்முறை வெறியாட்டங்களால் இஸ்லாமிய இயக்கத்தவர்கள் காட்டுமிராண்டித்தனமான கடுந்தாக்குதல்களுக்கு உள்ளாக்கப்பட்டனர். பல மாணவர்கள் நினைவற்ற நிலையில் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டனர். தியாகத் தழும்புகளின் தடாகம் தான் இஸ்லாமிய இயக்கங்கள்

திருக்குர்ஆனை முழுமையாகப் பின்பற்றும் எந்த இறைநம்பிக்கையாளனும் எதிர்ப்புகள், ஏகடியகங்கள், இழிமொழிகள், வன்முறைகள் சித்திரவதைகள், மரணம் இவற்றிற்கு கிஞ்சிற்றும் அஞ்சமாட்டான். அசைந்து கொடுக்கமாட்டான். ஆகவே அல்லாஹ்வின் உண்மை அடியார்களாகத் திகழ்ந்த அந்த மாணவ மறவர்கள் தங்களது முயற்சியில் தொய்வோ, தளர்வோ காட்டிட வில்லை. தொடர்ந்தார்கள் தங்கள் இறைப்பணியை!

சில வாரங்கள் கழித்து ஒரு கூட்டத்திற்கு அதே கல்லூரி வளாகத்திற்குள் ஏற்பாடு செய்தார்கள். இங்கேயும் இடதுசாரிகளும், அரசின் கைக்கூலிகளும் தங்கள் அடக்குமுறையைக் கட்டவிழ்த்துவிட்டு குருதி ஆறு ஓடச்செய்தார்கள்.

இந்தமுறை இஸ்லாமிய இயக்கத்தவர்கள் ஒரு சிலரின் உயிரைக் குடிக்கத்தான் திட்டமிட்டிருந்தனர் இந்தக் குண்டர்கள். அந்த இலட்சியக் கூட்டத்தில் இவர்களுக்கு உயிர்பலி கிடைக்கவில்லை. ஆனால் அந்த இலட்சியவாதிகள் சிலரை நிரந்தரமாக ஊனப்படுத்திட முடிந்தது.

இந்தக் கெடுபிடிகளால், தியாகங்களால் அவர்களால் கூட்டம் நடத்த இயலவில்லையே தவிர மக்களின் பார்வையை அவர்களால் கவரமுடிந்தது. மக்கள் ஒட்டுமொத்தமாக இந்த இயக்கத்தை ஆதரிக்கத் தொடங்கினர். இதனால் இந்த மாணவர் இயக்கம் மக்கள் இயக்கமானது!

1978-ஆம் ஆண்டை இந்த இயக்கத்தின் இன்னொரு வரலாற்றுப் படலம் என்று குறிப்பிட்டால் அது மிகையாகாது.

ஆட்சியிலிருந்த ஹபீப் போர்கிபா மக்களைச் சுரண்டி மயங்கிக் கிடந்த இந்தக் காலகட்டத்தில், உழைக்கும் வர்க்கத்தினர் உரிய கூலி கேட்டு ஓர் அறப்போராட்டத்தை ஆரம்பித்தனர். உழைப்பாளர்களுக்காகவே உயிர் வாழ்வதாக முழங்கும் கம்யூனிஸ்டுகள் தங்களுக்குக் கை கொடுத்து உதவுவார்கள் என எதிர்பார்த்தார்கள் உழைப்பாளர்கள். அங்கே கம்யூனிசத்தை ஏற்றுக் கொண்டவர்களை ஹபீப் அச்சூர் என்பவர் தலைமை தாங்கி வழிநடத்தினார். ஆட்சியாளர் ஹபீப் போர்கிபா இந்த கம்யூனிஸ்டுகளை விலைக்கு வாங்கி தனது பைக்குள் வைத்திருந்தார். ஆகவே கம்யூனிஸ்டுகள் அரசின் பக்கம் நின்று, உழைப்பாளர்களின் போராட்டத்திற்கு



உள்நோக்கம் கற்பித்தனர். விரக்தியடைந்த பாட்டாளிகள், கம்யூனிஸ்டு தலைவர் ஹபீப் அச்சூர் அவர்களை நிராகரித்தனர். கம்யூனிஸ்ட்களைப் போர்கிபாவின் கைப்பாவை என அழைக்கலாயினர்.

இந்நிலையில் இஸ்லாமிய எழுச்சி இயக்கத்தினர், உழைக்கும் வர்க்கத்தினரின் பிரச்சனைகளை விபரமாக விளக்கி ஆட்சியிலே அமர்ந்திருந்த வர்களிடம் ஒரு தீர்மானம் நிறைவேற்றினர். பாட்டாளி வர்க்கத்தைச் சார்ந்த அந்த பஞ்சையர்களுக்கு நியாயம் கிடைக்க அயராது பாடுபட்டனர். இதனால் பாட்டாளி வர்க்கத்தினர், "நீதியை நிலைநாட்டிட பாடுபடும் உண்மையான திருக்கூட்டம் இதுதான்" என்பதைக் கண்டு கொண்டனர்.

இதுமுதல் கம்யூனிஸ்டுகள் நிரந்தரமாகப் புறக்கணிக்கப்பட்டனர். இஸ்லாமிய இயக்கத்தவர்கள் உழைப்பாளிகளிடையே நிரந்தரமாக நிலைத்துவிட்டனர்.

இவ்வாறாக மாணவர்கள், உழைக்கும் வர்க்கத்தினர், பொதுமக்கள் என அனைத்துத் தரப்பினரிடையேயும் இயக்கம் ஆழமாக வேரூன்றியது!

"Society fot the Preservation of Holy Quran" என்ற திருக்குர்ஆன் பாதுகாப்புச் சங்கத்திற்குப் பிறகு, இஸ்லாமிய இயக்கத்தவர்கள், "இஸ்லாமிய அமைப்பு" என்ற பெயரிலேயே செயல்பட்டு வந்தனர்.

1978ஆம் ஆண்டு இந்த இயக்கத்திற்குக் கிடைத்த மக்கள் ஆதரவிற்குப்பிறகு இஸ்லாமிய இயக்கத்தவர்களின் கருத்துக்களை வெளியிடுவதில் துனீஸியப் பத்திரிகைகள் பெருமை அடைந்தன.

ஒவ்வொரு முறை இந்த இயக்கத்தவர்களின் கருத்துக்களை எழுதிடும்போதும் இதுதான் "இஸ்லாமிய எழுச்சிக்காகப் பாடுபடுபவர்களின் கருத்து" என்று எழுதுவது வழக்கம்.

பெயர் வந்தது 1978 - 79இல் என்றாலும் இந்த இயக்கம், இயக்க ரீதியாக 1970 - 71 முதலே செயல்பட ஆரம்பித்துவிட்டது. 1973ஆம் ஆண்டு முதலே அல்மாரிஃபா என்றொரு பத்திரிகையை வெளியிட ஆரம்பித்தது. இதில் கன்னவ்சி 1978 ஆம் ஆண்டு எழுதிய "மீண்டும் மேலை நாடுகளும் நாமும்" என்ற கட்டுரைத் தொடர்கள் நாட்டு மக்களைப் பெரிதும் கவர்ந்தன.

அப்துல் பத்தாஹ் மாறோ,ரஷீத் கன்னவ்சி ஆகியோரின் எழுத்துக்களும், ஜும்ஆ பேருரைகளும் நாட்டையே ஓர் உலுக்கு உலுக்கிற்று. ஆட்சியாளர் ஹபீப் போர்கிபா அதிர்ந்து போனார். ஆகவே இஸ்லாமிய எழுச்சி இயக்கத்தைச் சார்ந்த எவரும் ஜும்ஆ பேருரை நிகழ்த்தக்கூடாது என தடைவிதித்தார்.

1981ஆம் ஆண்டு ரஷீத் கன்னவ்சி அவர்கள் ஜும்ஆ குத்பா நிகழ்த்திக் கொண்டிருந்தபோது கைது செய்யப்பட்டார். இவரோடு இயக்கத்தின் முக்கியத் தலைவர்கள் அத்தனை பேரும் சிறைபிடிக்கப்பட்டனர். எதிர்த்துக் கிளம்பினார்கள் மக்கள். எனவே தலைவர்கள் எனக் கருதப்பட்ட 3000 பேரும் கைது செய்யப்பட்டார்கள்.

சிறைபிடிக்கப்பட்ட அத்தனைபேரும் சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டனர். ரஷீத் கன்னவ்சி அவர்களுக்கும் இன்னும் இயக்கத்தின் முக்கியத் தலைவர்களுக்கும் 20 ஆண்டு காலம் கடுங்காவல் தண்டனை தரப்பட்டது.

இந்த இஸ்லாமிய இயக்கத்தவர்களை ஏளனப்படுத்திடவும், தனது மகிமையை உலகுக்கு உணர்த்திடவும் கம்யூனிஸ்டுகளுக்கு எல்லா வகையான உதவிகளையும் செய்து தந்தார் ஹபீப் போர்கிபா.

இவருடைய ஆடம்பரங்கள் கொடிகட்டிப் பறக்கவே வெளிநாட்டுக் கடன் அதிகமாகியது. உள்நாட்டில் உணவுப் பொருட்களின் விலை உயர்ந்தது. இதனால் நாடே கொந்தளித்தது. ஹபீப் போர்கிபாவிற்கு எதிராக கிளர்ச்சிகள் ஆரம்பமாயின. இந்த கிளர்ச்சியைத்தான் "பிரட் கலவரம்" எனக் குறிப்பிடுகின்றனர்.

மக்கள் பிரச்சனை என்றால் இஸ்லாமிய இயக்கமே தீர்க்க வேண்டும் என்ற நிலை உருவானது துனீஸியாவில்! இதுபோன்ற கிளர்ச்சிகளால் இஸ்லாமிய எழுச்சி இயக்கத்தின் செல்வாக்கு மக்களிடையே பெருகியது.

ஆகவே மக்களின் அனுதாபத்தைப் பெறும் பொருட்டு 1984ஆம் ஆண்டு கைது செய்து கொட்டடிகளில் அடைத்துக் கொடுமைப்படுத்தி வந்த இஸ்லாமிய இயக்கத்தைவர்களை விடுதலை செய்தார் ஹபீப் போர்கிபா.

விடுதலைச் செய்து பரிவு காட்டுவதுபோல் காட்டி இஸ்லாமிய எழுச்சி இயக்கத்தவர்களை பூண்டோடு ஒழித்துவிட வேண்டும் என முடிவு கட்டினார் ஹபீப் போர்கிபா.

குறிப்பாக இந்த இஸ்லாமிய எழுச்சி இயக்கத்தின் தலைவர் ரஷீத் கன்னவ்சி அவர்களின் உயிரைக் குடித்திட திட்டம் தீட்டினர். அதை நிறைவேற்றிட விரைந்தனர்.

- தொடரும்

**இஸ்லாம்** நாங்கள் தேர்ந்தெடுத்த மார்க்கம்

தமிழகத்தில் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட சாதாரண மக்களின் அனுபவங்கள்!




ஆசிரியர்: **அஷ்ரஃப் அலி**
பக்கம்: **128 பக்கங்கள்**
விலை: **100/-**
வெளியீடு: **வேர்கள் பதிப்பகம்**

''இந்து இளைஞர்களை மூளைசலவை செய்து மதமாற்றம் செய்கின்றனர்''

''லவ் ஜிஹாத் என்ற பெயரில் நமது இந்து பெண்களை மதமாற்றம் செய்கின்றனர்''

''அவைகளையெல்லாம் தட்டிக்கேட்கும் ''ராமலிங்கம்'' போன்றோர்களை கொலை செய்கின்றனர்''

போன்ற வெறுப்பு பிரச்சாரங்கள் பாசிஸ்டுகளாலும், இஸ்லாத்தின் எதிரிகளாலும் தொடந்து முன்வைக்கப்படுகின்றன.

இவ்வாறன வெறுப்பு பிரச்சாரங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கிறது இந்த நூல்!

Vergal Pathippagam | Contact Us: 8148129887

**கஷ்மீரின் பாதி விதவைகள்**

வேர்கள் பதிப்பகம்

**பிப்ரவரி 23, 1991**

டெல்லியில் ஒரு பெண் கற்பழிக்கப்பட்டபோது, இந்தியா முழுவதும் 15 நாள்கள் மெழுகுவர்த்தியைக் கொளுத்தினார்கள். ஆனால் ஒட்டுமொத்த கிராமமும் கற்பழிக்கப்பட்ட போது எதுவுமில்லை. எங்கே நமக்கு நியாயம் கிடைத்தது?




**தொகுப்பு: மு.குலாம் முஹம்மது**

**விலை: 70/-**

கொரியர் கட்டணம் தனி
140 Pages

For Order: 8148129887
8072773868

Vergal Publications




# பிராமினிஸ்டுகள் குண்டு வைத்தார்கள் முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள்

**பிராமணிஸ்ட்டு குண்டு வைத்த வழக்குகளில் முக்கியத் தடையங்களை விசாரிக்காமல் விடுவது**

முக்கிய ஆதாரங்கள் இருந்தும் விசாரணை வளையத்திற்குள் பிராமிணர்கள் சிக்காமல் இருந்தனர். ஆனால் தீவிரவாத தடுப்புக் குழு தொடர்ந்து முஸ்லிம்களை கைது செய்து கொண்டும், தீவிரவாத வழக்குகளை அவர்கள் மீது தொடுத்த வண்ணம் இருந்து கொண்டிருந்தனர். ஆனால் குண்டு வெடிப்புகள் நடந்த இடத்தில் மற்றும் புலனாய்வு நேரத்தில், மிக வலுவான மற்றும் ஆதாரப்பூர்வமான குற்றச்சாட்டுக்கள் பிராமிணர்களுக்கு எதிராக இருந்தபோதிலும் அவர்கள் யாரும் தீவிரவாத தடுப்புக் குழுவால் விசாரணை வளையத்திற்குள் கொண்டு வரப்படவேயில்லை. அதற்கு எடுத்துக் காட்டாக பின்வரும் நிகழ்வுகளைக் குறிப்பிடலாம்.

**மும்பை குண்டுவெடிப்பு 2006 [07 - 11 - 2006]**

அகமதாபாத் நகரைச் சேர்ந்த பெண் விரிவுரையாளர் ஒருவர் உள்துறை அமைச்சர் சிவராஜ் பாட்டீலை தொடர்பு கொண்டு இந்த குண்டு வெடிப்பு தொடர்புடைய தீவிரவாதிகளில் ஒருவனை தனக்குத் தெரியுமென்றும் அவன் பெயர் கணேஷ் காந்தாராவ், அவ்ரங்காபாத் ஆஷா நகரில் வசிப்பதாகவும் தெரிவித்தார். உள்துறை அமைச்சர் உடனே இச்செய்தியை அவ்ரங்காபாத் போலீசுக்கு தொலைபேசியில் தெரிவித்தார். ஆனால் உள்துறை அமைச்சரால் சொல்லப்பட்ட இச்செய்தியை, தொலைபேசி அழைப்பை எடுத்த காவலர் பெயரை தவறாக எழுதியதால் காவல்துறையால் சரியான புலனாய்வை மேற்கொள்ள முடியவில்லை. அந்தப் பெண் மீண்டும் காவல்துறையை தொடர்பு கொண்டு சரியானப் பெயரையும் அவனைப் பற்றிய முழு விவரங்களையும் கடிதமாகவும் கொடுத்தார். ஆனால் காவல் துறையினரோ குற்றவாளியை விசாரிக்காமல் அவனுடைய சகோதரனையும் மற்றும் தந்தையையும் விசாரித்துவிட்டு இது ஒரு காதல் பிரச்சனை என்ற முடிவிற்கு வருகின்றனர்.

அதாவது குற்றச்சாட்டு கூறிய பெண் (விரிவுரையாளர்)ணிற்கும் காந்தராவிற்கும் (குற்றவாளி) காதல் இருந்ததாகவும் தன்னை திருமணம் செய்துகொள்ள மறுத்ததால் அவனுக்கு சரியான பாடம் கற்பிப்பதற்காக இப்படி ஒரு புகாரை கொடுத்ததாகவும் காவல் துறையினர் இவ்வழக்கை முடித்தனர். (ஆதாரம் : டைம்ஸ் ஆப் இந்தியா *18.08.2006)*

இந்த வழக்கில் காவல்துறை பெண் விரிவுரையாளரின் ஆதாரமில்லாத காதல் கதையை முன்னிலைப்படுத்தி அவரால்

கொடுக்கப்பட்ட சரியான தகவல்களை தவறென்று முடிவு செய்தனர்.

ஒரு விரிவுரையாளருக்குத் தெரியாதா? உள்துறை அமைச்சரிடமும், காவல் துறையினரிடமும் தவறான தகவல்களை அளித்தால் என்ன விளைவுகள் ஏற்படுமென்று? அதுபோக தவறான பெயரை எழுதிய காவல் துறையினரிடம் சரியான பெயர் (காந்தாராவ்) மற்றும் அவனைப் பற்றிய முழு விவரங்களையும் எழுத்துமூலம் அளித்தது எப்படி தவறாகும்?

ஆக இந்த வழக்கை விசாரித்த மகாராஷ்டிரத்தைச் சேர்ந்த தீவிரவாத தடுப்புக் குழுவினர் காந்தாராவை விசாரணை வளையத்திற்குள் கொண்டு வந்திருக்க வேண்டும். ஆனால் தீவிரவாத தடுப்புக் குழு அதனை செய்யவில்லை.

மேற்படி குற்றவாளி என்று சந்தேகப்படக்கூடிய கணேஷ் காந்தாராவிற்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் உள்ளது என்பதை கீழ் வரக்கூடிய இரு ஆதாரங்களின் மூலம் உறுதிசெய்து கொள்ளலாம்.

1. கணேஷ் காந்தாராவ் ஒரு தலித்தாக இருந்தபோதிலும் ஒரு பிராமிணப் பெண்ணோடு கட்டாயத் திருமணம் செய்விக்கப்பட்டார். தம்பதிகள் இருவரும் மகாராஷ்டிரா மாநிலத்தில் உள்ள யவாட்மால் மாவட்டத்தில் உள்ள ஆள்நடமாட்டம் குறைவாக உள்ள பகுதிக்கு குடிபெயர்ந்தனர்.


அந்தப் பகுதியில்தான் கணேஷ் காந்தாராவ் பேராசிரியராக பணிபுரியும் அமோல்சந்த்ரா கலை அறிவியல் கல்லூரியுமுள்ளது. அந்தக் கல்லூரி ஒரு ஆர்.எஸ்.எஸ் சித்தாந்தத்தினரால் நடத்தப்படுகிறது. இத்தம்பதிகளின் குடிபெயர்ப்பு சதிகாரர்களால் மிகவும் இரகசியமாக நடத்தப்பட்டது என்பதை காட்டுகின்றது.

2. மும்பை இரயில் குண்டுவெடிப்பில் கணேஷ் காந்தாராவின் தொடர்பைப் பற்றி ஒரு பெண் பேராசிரியை உள்துறை அமைச்சர் சிவராஜ்பாட்டீலுக்கு எழுதிய கடிதத்தைப் பற்றி நான் ஏற்கனவே என்னுடைய புத்தகமான "கர்கரேயை கொலை செய்தது யார்?"ல் குறிப்பிட்டுள்ளேன்.

இரண்டு வருடங்களுக்கு முன்னால் அவ்ரங்காபாத்தைச் சேர்ந்த ஒரு தலித் தலைவர் மூலம் கணேஷ் காந்தாராவ் எனக்கு ஒரு குறுஞ்செய்தி அனுப்பினான். அதில், இந்த 7/11 என்ற மும்பை குண்டு வெடிப்பைப் பற்றி நான் அதிகமாக ஆராயக்கூடாது என்றும், மேலும் இதில் இவனுடைய (கணேஷ் காந்தாராவ்வின்) பங்கு மிகவும் குறுகியது என்றும் குறிப்பிடப் பட்டிருந்தது. இது என்னுடைய சந்தேகத்தை இன்னும் வலுப்படுத்தியது.

காவல்துறையினர் இத்தம்பதியினரை விசாரிக்க வேண்டிய விதத்தில் விசாரித்திருந்தால் இவ்வழக்கின் உண்மையான சதிகாரர்களை வெளிக்கொண்டு வந்திருக்கலாம். இந்த வழக்கில் சம்பந்தப்பட்டவர்களை விசாரணை நீதிமன்றம் தூக்குத் தண்டனை வழங்கிய தீர்ப்பை ஆய்வு செய்தபோது இதை ஒரு குறிப்பாக நான் பகுதி 5ல் விவாதித்துள்ளேன்.

- தொடரும்


இந்த புத்தகம் இரண்டு முக்கியமான விஷயங்கள் நம் ஜனநாயகத்திற்கு மிக மோசமான அச்சுறுத்தல்களாக இருப்பதை பற்றி பட்டயங்கூறுகிறது. ஒன்று ஐ.பி என்ற மத்திய உளவுத்துறையின் வானளாவிய அதிகாரம் மற்றொன்று ஐ.பி என்ற மத்திய உளவுத்துறைக்கும் தவறான அழிவுக் கொள்கைகளைக் கொண்ட வலது சாரி தீவிரவாத குழுக்களுக்கும் இடையிலான சாத்தானிய உறவு. இவை இரண்டும் தான் இப்புத்தகத்தின் முக்கிய நோக்கம்.

~~₹220~~ ₹150 தள்ளுபடி விலையில்!




# நீரிழிவு நோய்

## உள்ளவர்களின் கவனத்துக்கு!

நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்ட முதியவர்கள் மற்றவர்களைப் போல நீண்ட காலம் நலமாக வாழலாம். அதற்கு வாழ்க்கை முறையில் ஒரு சில மாற்றங்களை மேற்கொண்டாலே போதுமானது!

### அறிகுறிகள்

நீரிழிவு நோயின் முக்கிய அறிகுறிகளே அதிகமான தாகம், அடிக்கடி சிறுநீர் கழித்தல், சோர்வு, உடல் இளைத்தல், அதிக பசி போன்றவை. ஆனால் வயதான காலத்தில் இந்த அறிகுறிகள் ஏதுமின்றி இருக்கக்கூடும். அப்போது நீரிழிவு நோயினால் ஏற்படும் தொல்லைகளே இந்நோயின் ஆரம்ப அறிகுறிகளாக இருக்கலாம். பார்வை மங்குதல், நடந்தால் மார்பில் ஒரு சங்கடம், கை, கால் மரத்துப்போதல் அல்லது எரிச்சல் ஏற்படுதல், ஆறாத புண், உடல் அரிப்பு, எடை குறைதல்... இவையே முதுமையில் தோன்றும் நீரிழிவு நோயின் முக்கிய அறிகுறிகள்.

பெண்களுக்கு நீர்த்தாரையில் அரிப்பு ஏற்பட்டால் அது நீரிழிவு நோயின் ஆரம்ப அறிகுறியாக இருக்கலாம். வயதான காலத்தில் நீரிழிவு நோய் எந்த அறிகுறியும் இல்லாமல் இருப்பதால், வேறு ஏதோ காரணத்துக்காக இரத்தப் பரிசோதனை செய்யும்போதுதான் இந்நோயிருப்பது பலருக்கும் தெரிய வருகிறது.

### தொல்லைகள்

நீரிழிவு நோயை கட்டுக்குள் வைத்துக் கொள்ளா விட்டால் பல தொல்லைகள் வரலாம்.

இரத்தத்தில் சர்க்கரை மற்றும் கொழுப்புச் சத்து அதிகமாகும்போது அது இரத்தக் குழாய்களில் அடைப்பை ஏற்படுத்தும். இந்த அடைப்பு எந்த உறுப்பில் ஏற்படுகிறதோ அந்த உறுப்பு பாதிக்கப்படும்.

உதாரணம்: மாரடைப்பு, பக்கவாதம், சிறுநீரகப்பாதிப்பு, விழித்திரைப் பாதிப்பு, நரம்புப் பாதிப்பு, பாதங்கள் பாதிப்பு.

### பரிசோதனைகள்

இரத்தப் பரிசோதனை மூலம் நீரிழிவு நோயைக் கண்டறிய, காலை வெறும் வயிற்றில் இரத்த சர்க்கரை 126-க்கு மேல் இருந்தால் அல்லது HBA1c எனப்படும் மூன்று மாத சராசரி வழங்கும் சோதனை 6.5% மேல் இருந்தால், ஒரு நபருக்கு நீரிழிவு இருப்பது உறுதிசெய்யப்படும். வயதானவர்கள் தங்கள் இரத்த சர்க்கரையை குளுக்கோஸ் மானிட்டர் மூலம் வீட்டிலேயே பரிசோதிக்கலாம். குறிப்பாக அவர்கள் அதிக அளவு மருந்து எடுத்துக் கொண்டு இருந்தால் இரத்த சர்க்கரை சோதனை செய்வதன் மூலம் இரத்த சர்க்கரையின் அளவை சரியான நிலையில் வைத்துக் கொள்ளலாம்.

நீரிழிவு நோய் உள்ள முதியவர்கள் பின்வரும் பரிசோதனைகளை ஆண்டுக்கு ஒரு முறை அவசியம் செய்துகொள்ள வேண்டும்.

**இதயம்**

மறைந்து இருக்கும் இதயப் பலவீனத்தைக் கண்டறிய ஈ.சி.ஜி மற்றும் எக்கோ.

**சிறுநீரகம்**

இரத்தத்தில் உள்ள யூரியா, கிரியாட்டினின், ஜி.எஃப்.ஆர் பரிசோதனை மற்றும் சிறுநீரில் உள்ள புரதப் பரிசோதனை.

**கண் விழித்திரை**

கண் நோய் சிறப்பு மருத்துவர் மூலம் கண் விழித்திரை பாதிப்பு கண்டறியும் பரிசோதனை.

**பாதப் பராமரிப்பு**

பாதங்களில் உள்ள நரம்புப் பாதிப்பினால் தொடு உணர்ச்சி குறையலாம். பாதத்துக்குச் செல்லும் இரத்த ஓட்டமும் குறையலாம். ஆகவே, பாதப் பராமரிப்பு மிகவும் அவசியம்.

**பற்கள்**

சொத்தைப் பற்களினாலும், சொத்தை ஏற்பட்ட ஈறுகளினாலும் நீரிழிவு நோய் கட்டுக்குள் அடங்காமல் இருக்கலாம். குறைந்தது 6 மாதத்திற்கு ஒரு முறையாவது பற்களை பரிசோதனை செய்து கொள்ள வேண்டும்.

**மறதி நோய்**

ஆரம்ப நிலையில் உள்ள மறதி நோயைக் கண்டறிய பரிசோதனை செய்வது அவசியம்.

**நெஞ்சு மார்பு படம்**

வருடத்துக்கு ஒரு முறை அவசியம் எடுக்கவேண்டும்.

**அல்ட்ராசோனாகிராம் பரிசோதனை**

பித்தநீர்ப்பையில் உள்ள கற்கள் மற்றும் புரோஸ்டேட் சுரப்பியின் வீக்கத்தை அறிய வயிற்றுப்பகுதி ஸ்கேன் அவசியம். கொழுப்புக் கல்லீரல், தொல்லைகள் இன்றி மறைந்து இருக்கும். இப்பரிசோதனை கொழுப்புக் கல்லீரலையும் கண்டறிய உதவும்.

மலம் வெளியேறுவதில் ஏதாவது மாற்றம் ஏற்பட்டால் கோலனோஸ்கோபி பரிசோதனை தேவைப்படலாம்.

உங்களில் வயது 70க்கு மேல் இருந்தால் எச். பி. ஏ.1சி-யை 8% என்கிற அளவுக்குக் கீழே வைத்துக் கொள்ளவும்.

வயதானவர்களின் எச்.பி.ஏ.1சி அளவு 6.5% இல் இருக்கவேண்டும் என்ற கட்டாயமில்லை.

**சிகிச்சை முறைகள்**


முதுமையில் ஒருவருக்கு நீரிழிவு நோய் இருப்பதை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்தால், அதை உணவுக்கட்டுப்பாடு மற்றும் உடற்பயிற்சியால் மட்டுமே கட்டுப் படுத்தி விடலாம்.

நீரிழிவு நோய் மருத்துவப் பேராசிரியர் எம்.விஸ்வநாதன் 1950-ம் ஆண்டிலேயே குடும்பத்தில் மற்றவர் எடுத்துக்கொள்ளும் உணவையே நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்ட முதியவர்களும் (ஒரு சில உணவு வகைகளைத் தவிர்த்து) எடுத்துக் கொள்ளலாம் என்று கூறினார்கள்.

கோவிட் தடுப்பூசி, நிமோனியா மற்றும் இன்ஃப்ளூயன்சா தடுப்பூசிகளை அவசியம் போட்டுக் கொள்ள வேண்டும்.

நீரிழிவு நோய் உள்ளவர்கள் அடிக்கடி மருத்துவப் பரிசோதனை செய்து கொண்டு, உணவுக் கட்டுப்பாடு மற்றும் தவறாமல் உடற்பயிற்சி செய்து வந்தால், அவர்கள் மற்றவர்களைப் போல் பல்லாண்டு காலம் நலமுடன் வாழலாம்!

**டாக்டர். விஜய் விஸ்வநாதன்**
*நீரிழிவு நோய் சிறப்பு மருத்துவர்.*



## முதியோர் நலன் தந்தை

# டாக்டர் வி.எஸ்.நடராஜன்

## வந்து குவியும் விருதுகள்!

பத்ம சிரி டாக்டர் வி.எஸ்.நடராஜன் அவர்கள், முதியோர் நலனில் அதிக அக்கறைக் கொண்டு இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் பட்டங்கள் பல பெற்றார்கள்.

Geriatric "முதியோர் நலம்" என்ற பெயரில், ஒரு மருத்துவம் நம் நாட்டில் தழைத்தோங்கிட அயராது உழைத்தவர். பின்னர் நமது சென்னை மருத்துவக் கல்லூரியில் முதியோர் நலம் பிரிவு என்று டாக்டர் அவர்களின் உந்துதலில் அரசாங்கத்தால் தொடங்கப்பட்டபோது அதன் தலைமையை ஏற்று நடத்தியவர்.

டாக்டர் வி.எஸ்.நடராஜன் அவர்களை இந்தியாவின் முதியோர் நலத்தந்தை என அழைக்கின்றார்கள்.

முதியோர் நலன் முதுநிலை பட்டப்படிப்பையும் நிறுவியவர். ஓய்வுபெற்ற பின் முதியோரை, இல்லங்களுக்குச் சென்று மருத்துவம் செய்யும் சேவையைத் தொடங்கி தொடர்ந்து கொண்டிருப்பவர். இந்தச் சேவையை "Geriatric Housecall programme" என்று அழைக்கின்றார்கள். இவரது சேவையைப் பாராட்டி பத்ம சிரி விருது 2012ல் வழங்கப்பட்டது.

அவருடைய அரிய சேவை தொடர்ந்து கொண்டிருக்கின்றது. இந்தத் தொடர் முயற்சியைப் பாராட்டி இந்த வருடம் "வயோஷ் ரேஷ்தா சமான்" விருதை டாக்டர் வி.எஸ்.நடராஜன் அவர்களுக்குக் குடியரசுத் துணைத் தலைவர் வழங்கினார்.

ஒவ்வொரு வருடமும் அக்டோபர் முதல் நாளை முதியோர் நல தினமாக உலகெங்கும் கொண்டாடுகின்றார்கள். இந்த நாளில்தான் முதியோருக்குச் சிறப்பாக சேவை செய்த வர்களுக்கு இந்த விருது வழங்கப்படுகின்றது.

உலக வரைபடத்தில் முதியோர் நலனில் இந்தியாவும், சென்னையும் இடம்பெறுவதற்கு டாக்டர் வி.எஸ்.நடராஜன் அவர்களே காரணம் என்கின்றது அவர் பற்றிய வரலாற்றுக் குறிப்பு.

அரசின் விருதுகள் அல்லாமல் பல தனியார் தொண்டு நிறுவனங்களும் அவருக்குப் பல விருது களை வழங்கியுள்ளது.

டாக்டர் அவர்கள் தன்னுடைய பல்வேறு சேவைகளுக்கிடையே பல நூல்களை ஆங்கிலத் திலும், தமிழிலும் எழுதி இருக்கின்றார்கள். இப்போது "முதுமை எனும் பூங்காற்று" என்றொரு மாத இதழையும், நடத்தி வருகின்றார்கள். அதிலிருந்து அவ்வப்போது, வைகறை வெளிச்சம் மருத்துவப் பகுதியை அலங்கரிக்கின்றோம். வாசகர்கள் பயனடையுங்கள்.

"வைகறை வெளிச்சம்" ஆசிரியரின், நீண்டகால குடும்ப மருத்துவர் மட்டுமல்ல, மருத்துவ ஆலோசகர், சிறந்த குடும்ப நண்பர் டாக்டர் அவர்களுடைய பல பயனுள்ள ஆக்கங்களை வைகறை வெளிச்சத்தில் இடம் பெறச் செய்துள்ளோம்.

MGM



# இஸ்லாத்தின் வருகைக்குப் பின் பெண்கள்

**இ**றைவனின் இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களின் வருகைக்கு முன் பெண்கள் ஆண்களின் பிடியிலிருந்து விடுபடவில்லை. அவர்கள் ஆண்களைச் சார்ந்தே வாழ்ந்து கொண்டிருந்தார்கள்.

இஸ்லாத்தின் வருகைக்குப் பின் அவளுடைய அந்தஸ்தில் தலைகீழ் மாற்றங்கள் ஏற்பட்டன. பெரும்பாலான விவகாரங்களில் அவள் தனித்து முடிவெடுக்கும் உரிமையைப் பெற்றாள். அவளுடைய ஒப்புதல், அவளுடைய விருப்பம் இவையின்றி அவளுடைய விவகாரங்களில் யாரும் தன்னுடைய விருப்பத்தையோ, ஒப்புதலையோ திணித்திட இயலாது.

அவள் வியாபாரம் செய்திட இயலும், வியாபார ஒப்பந்தங்களைச் செய்திட இயலும், அவளுக்குச் சொத்துக்களில் உரிமை உண்டு. தாய், மகள், சகோதரி, மனைவி என்ற அந்தஸ்துகளில் அவள் சொத்துக்களில் உரிமையைப் பெற்றிட இயலும். இத்தகையதொரு உரிமை வேறு எந்த மதத்திலும் இருந்ததில்லை. நாகரீகத்தில் உச்சத்தை எட்டிவிட்டோம் என்ற சமுதாய அமைப்புகளிலும், நாங்கள் தாம் கலாச்சாரங்களின் கலாசாலை எனப் போற்றி வாழ்ந்த சமுதாயங்களிலும் இன்றும் நடப்பில் வராத பெண்ணுரிமைகள் இவை.


பெண்களை, திருமணம் செய்து கொடுக்க அவள் சம்மதம் அவசியம், அவசரம். அவளது தந்தை மற்றும் உறவினர்கள், இவர்கள் எவ்வளவுதான் அவளுக்கு வேண்டியவர்களாக இருந்தாலும், அவளுடைய சம்மதம் இல்லாமல் அவளை திருமணம் செய்து தர முடியாது. இதில் அவளை காயப்படுத்துதல் என்ற பேச்சுக்கே இடமில்லை.

இனி சொத்துக்களைச் சொந்தமாக்கிக் கொள்வதிலும், பாகப்பிரிவினைகளின் வழி அவர்களுக்குச் சொந்தமாகும் சொத்துக்களையும், அவள் யாரையும் சார்ந்திருக்காமல் தன் விருப்பம்போல் கையாளலாம். இதில் அவள் முழு சுதந்திரத்தையும் பெற்றவள்.

"பெற்றோரோ நெருங்கிய உறவினர்களோ விட்டுச் சென்ற சொத்தில் ஆண்களுக்கும் பாகம் உண்டு.அவ்வாறே பெற்றோரோ நெருங்கிய உறவினர்களோ விட்டுச் சென்ற சொத்தில் பெண்களுக்கும் பாகமுண்டு. அச்சொத்திலிருந்து குறைவாக இருந்தாலும் சரி, அதிகமாக இருந்தாலும் சரியே! இது அல்லாஹ்வினால் விதிக்கப்பட்ட பாகமாகும். (அல்குர்ஆன் 4 : 7)

# அன்றும், இன்றும் தொடரும் தீண்டாமை

தொடர்-08



# முதல்வர் அவர்களின் கவலையும்! இஸ்லாம் சொல்லும் தீர்வும்!!

**சம்பவம் 01**

ஈரோடு மாவட்டம் பெருந்துறை தாலுகா காஞ்சிக்கோயில் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட கண்ண வேலம்பாளையம் என்ற பகுதியில் வழக்கமாக வாய்க்காலில் தலித் மாணவர்கள் மதிவாணன் (17) தேவேந்திரன்(17) நண்பர்களுடன் குளித்துக் கொண்டிருந்தனர். அப்போது உங்களுக்கெல்லாம் இங்க என்னடா குளியல் கேட்குது என்று சொல்லி பிரகாஷ் என்பவர், வாய்க்காலில் இருந்து அவர்களை வெளியேற்றி இருக்கிறார்.

மேலும் அந்த மாணவர்களை அரை நிர்வாணமாக ஜட்டியுடன் நிற்க வைத்து டிராக்டரில் கட்டி வைத்திருந்த கயிற்றை எடுத்து பலமாக அடித்து ஒரு மணிநேரம் பொதுவெளியில் ஜட்டியுடன் நிற்க வைத்து அவமானப்படுத்தி சித்திரவதை செய்துள்ளார். பாதிக்கப்பட்ட மாணவர்கள் பெருந்துறை அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (One India - Nov 23 - 2021)

**சம்பவம் 02**

உ.பி.யில் மெயின்புரி மாவட்டத்தில் உள்ள தாவுத்பூர் கிராமத்தில் செயல்படும் அரசு தொடக்கப் பள்ளியில் மொத்தம் 80 மாணவர்கள் படித்து வருகிறார்கள். அதில், 60 மாணவர்கள் தாழ்த்தப்பட்ட சமூகத்தை சார்ந்தவர்கள். மீதி 20 மாணவர்கள் பொதுவான மற்றும் தாக்கூர் சாதிப் பிரிவை சார்ந்தவர்கள்.

அப்பள்ளியில் மாணவர்களுக்கு மத்திய உணவு வழங்குவதில் சாதித் தீண்டாமை கொடுமை நிகழ்ந்திருப்பது தற்போது அம்பலமாகியுள்ளது. 20 மாணவர்களின் தட்டுக்கள் மட்டுமே சமையல் கூடத்தின் ஊழியர்களால் கழுவப்படுகிறது. தாழ்த்தப்பட்ட சாதியை சார்ந்த 60 மாணவர்களின் தட்டுக்களையும் அவர்களே கழுவிக் கொள்ளுமாறு நிர்பந்திக்கப்படுகிறார்கள். அவர்களுக்கென்று ஒதுக்கப்பட்ட இடத்தில்தான் தட்டுக்கள் வைக்கவேண்டும் என்றும் தீண்டாமையை அரங்கேற்றியுள்ளனர், ஆதிக்க சாதியைச் சேர்ந்த சமையற்கூட ஊழியர்கள்.

இப்படி தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு நிகழ்ந்த சாதித் தீண்டாமை கொடுமை வெளியே தெரிய வந்ததையடுத்து, பள்ளியின் தலைமை ஆசிரியர் கரிமா சிங் ராஜ்புத் பணியிடை நீக்கம் செய்யப் பட்டுள்ளார். சமையற்கூடத்தில் பணிபுரியும் சோமாவதி மற்றும் லட்சுமி தேவி ஆகியோர் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். (Vinavu - Sep 29 - 2021)

**சம்பவம் 03**

திண்டிவனம் அருகே விழுக்கம் கிராமத்தில் உள்ள செல்லியம்மன் கோயிலில், ஒரு பிரிவைச் சேர்ந்த மக்கள் மற்றும் பட்டியலினத்தவர்கள் வழிபட்டு வந்தனர். இந்த நிலையில், கடந்த 2013ம் ஆண்டு அந்த கோயில் இடிக்கப்பட்டு புதியதாக கட்டு மான பணி தொடங்கியது. இதற்காக பட்டிய லினத்தைச் சேர்ந்த மக்கள் ஒரு லட்ச ரூபாயை வழங்கிய போது, அதனை வாங்க கோயில் நிர்வாகம் மறுத்ததாக கூறப்படுகிறது. இந்த சூழலில் கடந்த மாதம் 29ம் தேதி நடைபெற்ற குடமுழுக்கு விழாவில், பட்டியலின மக்களை அப்பகுதியில் வசிக்கும் மற்றொரு பிரிவினர் முழுவதுமாக புறக்கணித்துள்ளனர்.

அங்கிருந்த பூசாரி உள்பட அனைவரும் கோயிலில் இருந்து வெளியேறியுள்ளனர். பின்னர் பட்டியலினத்தவர்கள் ஒன்று சேர்ந்து அம்மனுக்கு அலங்காரம் செய்து வழிபாடு செய்துவிட்டு திரும்பி யுள்ளனர். உடனடியாக கோயிலுக்கு சென்ற ஒரு பிரிவினர் பட்டியலித்தவர்கள் கோயிலுக்குள் நுழைந்ததால் கோயில் தீட்டு ஏற்பட்டதாக கூறி, பட்டியலினத்தவர்களால் அம்மனுக்கு சாத்தபட்ட புடவை, வளையல் உள்ளிட்டவற்றை கோயிலுக்கு வெளியில் உள்ள ஏரிக்கரையில் போட்டு எரித்துள்ளனர் .

மேலும் பட்டியலினத்தவர் தொட்டு பயன்படுத்திய பூஜை பொருட்களை கோயிலுக்கு வெளியே தூக்கி வீசியுள்ளனர். மேலும் கோயில் தீட்டு பட்டுவிட்டதாகக்கூறி கோயிலை சுத்தம் செய்த ஒரு பிரிவினர் தீட்டு கழிக்க தனியாக பூஜை நடத்தியுள்ளனர். கோயிலுக்கு சாமி கும்பிட சென்ற அருள்மொழி என்ற பெண் ஒருவரை கோயிலில் இருந்து வெளியேற்றியதோடு, பட்டிய லினத்தவர்கள் கோயிலுக்குள் வந்தால் இரண்டாயிரம் ரூபாய் அபராதம் என கூறியுள்ளனர். இதனால் அதிர்ச்சியடைந்த பட்டியலின மக்கள், சம்பவம் குறித்து ரோசனை காவல்நிலையத்தில் புகார் அளித்தனர்.

இதுகுறித்து பட்டியலினத்தவர்கள் கூறுகையில், பல தலைமுறைகளாக கோயிலில் வழிபட்டு வரும் தங்களுக்கு தற்போது கோயில் உள்ளே அனுமதி மறுக்கப்படுவதாகவும். ஒரு சிலர் மட்டுமே பிரச்சனை செய்து எங்களை உள்ளே விடாமல் மறுப்பதாகவும் குற்றம்சாட்டியுள்ளனர். மேலும் செல்லியம்மன் கோயில் வழிபாட்டு உரிமையை மீண்டும் அரசு ஏற்படுத்தி தர வேண்டும் என கேட்டுக்கொண்டுள்ளனர். (News 18 Tamil - June 09 - 2021)

**சம்பவம் 04**

கர்நாடக மாநிலம் ஹாசன் மாவட்டம் சென்னராயபட்டணா அருகே தின்டகூரு என்ற கிராமம் உள்ளது. அங்கு மாதே கவுடா என்பவர் கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக உணவகம் நடத்தி வருகிறார். இந்நிலையில் கடந்த 15ம் தேதி அதே கிராமத்தைச் சேர்ந்த சந்தோஷ் (26) தனது நண்பர்களுடன் உணவகத்துக்குச் சென்றுள்ளார்.

அப்போது உணவகத்தின் உரிமையாளர் மாதே கவுடா, “தலித் மக்களுக்கு உணவகத்தின் உள்ளே அமர்ந்து உணவு அருந்த அனுமதி இல்லை. வெளியே நின்று உணவை பார்சல் வாங்கிக் கொண்டு போகலாம்” எனக் கூறியுள்ளார். இதனால் சந்தோஷுக்கும் அவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்ட நிலையில், மாதே கவுடா சந்தோஷை தாக்க முயன்றுள்ளார்.

இதையடுத்து சந்தோஷ் சென்னராயப்பட்டணா வட்டாட்சியர், ஹாசன் மாவட்ட ஆட்சியர், சமூக நலத்துறை அதிகாரிகளிடம் மாதேகவுடாவின் உணவகத்தில் தீண்டாமை கடைபிடிக்கப்படுவதாக புகார் அளித்தார். இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படாத நிலையில், கடந்த 21ம் தேதி ஹாசன் மாவட்ட பீம் ஆர்மி அமைப்பின் செயலாளர் நடராஜ் தலைமையில் தின்டகூருவில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

அப்போது தீண்டாமையைக் கடைப்பிடிக்கும் உணவகத்தை மூடக்கோரியும், அதே கிராமத்தில் உள்ள ஆஞ்சநேயர் கோயிலில் தலித் மக்களை உள்ளே அனுமதிக்கக் கோரியும் முழக்கம் எழுப்பப் பட்டது.

பீம் ஆர்மி அமைப்பின் தொடர் அழுத்தத்தின் பேரில் சென்னராயப்பட்டணா வட்டாட்சியர் ஜே.பி.மாருதி, சமூக நலத்துறை அதிகாரிகள் தின்ட கூரு கிராமத்தில் விசாரணை மேற்கொண்டனர்.

அப்போது உணவகத்தில் தீண்டாமை கடைப் பிடிக்கப்பட்டது உறுதி செய்யப்பட்டது. இதைத் தொடர்ந்து வட்டாட்சியர் ஜே.பி.மாருதி, உணவகத்தை மூடுவதற்கான நோட்டீஸை ஒட்டி, சீல் வைத்தார். மேலும் இதுகுறித்து எஸ்சி, எஸ்டி

வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின்கீழ் வழக்குப்பதிவு செய்து விசாரிக்க போலீஸாருக்கு உத்தரவிட்டார்.

வட்டாட்சியர் ஜே.பி.மாருதி கூறும்போது, "இந்திய அரசியலமைப்பு சட்டத்தின்படி தீண்டாமை கடைபிடிப்பது குற்றமாகும். உயர் அதிகாரிகள் உத்தரவின்பேரின் உணவகத்தின்மீது நடவடிக்கை எடுத்திருக்கிறோம்.

இந்த கிராமத்தில் உள்ள கோயிலில் தலித் மக்களுக்கு அனுமதி மறுக்கவில்லை என இங்குள்ள பிற சாதியினர் கூறினர். எனவே போலீஸார் முன்னிலையில் தலித் மக்கள் கோயிலுக்குள் சென்று வழிபாடு நடத்த விரைவில் தேதி குறிக்கப்படும்" என்றார். (Hindu Tamil - 24-sep 2021)

### சம்பவம் 05

கர்நாடக மாநிலம் கொப்பல் மாவட்டத்தில் உள்ளது மியாபுரா கிராமம். அங்குள்ள ஆஞ்சநேயர் கோயிலுக்கு, அதே கிராமத்தைச் சேர்ந்த ஒருவர் தனது குழந்தையின் பிறந்தநாளை முன்னிட்டுச் சென்றுள்ளார்.

அந்தக் கோயிலில் தலித் மக்கள் நுழைவதற்கு ஆதிக்க சாதியினர் தடை விதித்துள்ளதாகக் கூறப்படுகிறது. இதனால் கோயிலுக்கு வெளியே நின்று குழந்தைக்காக பிரார்த்தனை செய்துள்ளார். அப்போது அக்குழந்தை கோயிலுக்குள் ஓடிவிட்டுத் திரும்பியதாகக் கூறப்படுகிறது.

இதைப் பார்த்து ஆத்திரமடைந்த ஆதிக்க சாதியினர், தலித் சமூக குழந்தை கோயிலுக்குள் நுழைந்ததைக் கண்டித்து கூட்டம் நடத்தியுள்ளனர். தலித் குழந்தை நுழைந்ததால் கோயிலுக்கு தீட்டு ஏற்பட்டுவிட்டதாக கூறியுள்ளனர்.

இதனால் கோயிலை தூய்மைப்படுத்த சடங்குகள் நடத்தவேண்டும் எனக் கூறி சம்பந்தப்பட்ட குழந்தையின் தந்தைக்கு ரூ.23,000 அபராதம் விதித்துள்ளனர்.

இதுகுறித்து மாவட்ட நிர்வாகத்துக்கு தகவல் கிடைத்த நிலையில் காவல்துறை, வருவாய்த்துறை மற்றும் சமூக நலத்துறை அதிகாரிகள் அக்கிராமத்திற்கு விரைந்து சென்று ஆதிக்க சாதியினர் மீண்டும் இதுபோன்ற செயல்களில் ஈடுபட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரித்தனர்.

மேலும், கிராமவாசிகளுக்கு தீண்டாமை ஒழிப்பு குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது .(Kalainar News - 21 - sep 2021)

### சம்பவம் 06

கரூர், தான்தோன்றிமலை அருகிலுள்ள ஜல்லிப்பட்டி பகுதியைச் சேர்ந்தவர்கள் கௌசிக் (21), தினகரன் (23). இவர்களில், தினகரன் அரசு கலைக் கல்லூரியில் படப்படிப்பு முடித்திருக்கிறார். கௌசிக் மூன்றாம் ஆண்டு படித்துவருகிறார். தனது நண்பர்களான தினகரனுடனும் மற்றோர் இளைஞருடனும், கௌசிக் இரு சக்கர வாகனத்தில் பாகநத்தம் நெடுஞ்சாலையில் சென்றிருக்கிறார். அப்போது, சிறுநீர் கழிப்பதற்காக வாகனத்தை கௌசிக் சாலையோரமாக நிறுத்தியிருக்கிறார்.

அப்போது, பாகநத்தம் பகுதியைச் சேர்ந்த சில மாற்றுச் சாதி இளைஞர்கள், கௌசிக், மற்ற இரண்டு இளைஞர்களின் சாதி விவரத்தைக் கேட்டு, "சிறுநீர் கழிப்பதற்கு பட்டியல் சாதிப் பயலுகளுக்கு எங்கள் ஊர்தான் கிடைத்ததா? நீங்கள் இங்கே சிறுநீர் கழித்தால், ஊருக்கே தீட்டாயிரும்" என்று கூறி, மிரட்டியதாகச் சொல்லப்படுகிறது.

இதனால், இரு தரப்புக்கும் வாக்குவாதம் ஏற்பட, அந்தக் கும்பல் கௌசிக்கை சரமாரியாக கொலை வெறித் தாக்குதல் நடத்த ஆரம்பித்திருக்கிறது. இதனால், பயந்துபோன தினகரனும் மற்றோர் இளைஞரும் அங்கிருந்து தப்பித்துச் சென்றிருக்கிறார்கள்.

ஆனால், கௌசிக்கை அந்தக் கும்பல் தொடர்ந்து தாக்கிவிட்டு அங்கிருந்து சென்றிருக்கிறது. இதில் கௌசிக், படுகாயங்களுடன் மீட்கப்பட்டு, கரூர் காந்திகிராமம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார். இது குறித்து, வெள்ளியணை காவல் நிலைய போலீஸார் வழக்கு பதிவு செய்து, விசாரணை நடத்திவருகின்றனர். (Vikadan 16 Sep 2021)

### தீர்வுதான் என்ன?

ஒரு சில தினங்களுக்கு முன் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் மாநில அளவிலான உயர்நிலை விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழுக் கூட்டத்தில் முதல்வர் ஸ்டாலின் பேசியபோது, சாதிக்கொடுமைகள் பற்றியும், தீண்டாமை பிரச்சனைகள் பற்றியும் உருக்கமான சில வார்த்தைகளை தெரிவித்திருந்தார்.

> "கல்வி, பொருளாதாரம், நாகரிகம் வளர்ந்தாலும் சாதி, தீண்டாமை, ஏற்றத்தாழ்வு என்பது அப்படியேதான் இருக்கிறது. அதில் மாற்றம் செய்ய இன்னும் பல ஆண்டுகாலம் கடக்க வேண்டும் என்றே தெரிகிறது. இதனைச் சட்டத்தின் மூலமாக

ஓரளவு சரிசெய்ய முடியும். அத்தகைய சட்டங்கள் முறையாகப் பயன்படுத்தப்பட வேண்டும்."

இப்படி பேசிய முதல்வரின் வார்த்தைகள், ஒன்றை நமக்கு தெளிவாகப் படம்பிடித்து காட்டுகிறது. கடுமையான சட்டங்கள், சமத்துவத்திற்கான விழிப்புணர்வுகள், சமூக நீதிப் பிரச்சாரங்கள் என ஒரு நூற்றாண்டு காலமாக இந்த மண்ணில் போராடி வந்தாலும், இன்னும், சாதீய தீண்டாமைக் கொடுமைகளுக்கு முழுமையான தீர்வு கிடைக்கவில்லை என்பதே அது.

கடுமையான சட்டங்கள், விழிப்புணர்வு பிரச்சாரங்கள் போன்றவைகளெல்லாம் தீண்டாமையை அனுபவிப்பவர்களுக்கு தற்காலிகமாக ஒரு நிவாரணத்தைத் தருமே தவிர, முழுமையான விடுதலையைத் தராது என்பதற்கு மேலே நாம் பட்டியலிட்டுள்ள சம்பவங்களும், அதனைத் தொடர்ந்து குறிப்பிட்டுள்ள முதல்வர் ஸ்டாலின் அவர்களின் வார்த்தைகளுமே நமக்கு சாட்சி.

**இஸ்லாம் அழைக்கிறது**

அன்றைய அரபுலக மக்கள் குலப்பெருமையாலும், இன பேதத்தாலும், நிற வெறியாலும், மொழி பாகு பாட்டாலும் ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொண்டும், தலைமுறைக்கும் பகைமையை வளர்த்து பழிதீர்த்துக் கொண்டும் இருந்த கால கட்டத்தில்தான் அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்கள் அம்மக்களிடையே ஏகத்துவக் கொள்கையை, இஸ்லாமிய அழைப்பை அறிமுகப் படுத்தினார்கள்.

தீண்டாமையின் வீரியத்தை, அதன் விபரீதத்தை அல்லாஹ்வின் அழகிய வழிகாட்டலோடு அங்குலம் அங்குலமாய் தெளிவுபடுத்தினார்கள்.

மனிதன் தன் சக மனிதன் ஒருவனுக்குச் செய்ய வேண்டிய கடமைகளிலிருந்தும், கொடுக்க வேண்டிய உரிமைகளிலிருந்தும் புறக்கணித்து ஒதுங்கி நிற்கும் போதுதான் தீண்டாமை உருவாகிறது என்று கூறி மாசுபடிந்திருந்த அவர்களின் இதயங்களைத் தூய்மைபடுத்தினார்கள்.

சக மனிதனின் மீதான உரிமையை, கடமையை நிறைவேற்றும் போது இறைவன் புறத்திலிருந்து கிடைக்கும் வெகுமதிகளைக் குறித்து ஆர்வமூட்டி, சக மனிதனின் மீதான உரிமைகளில், கடமைகளில் தவறிடும் பட்சத்தில் இறைவன் புறத்திலிருந்து கிடைக்கும் சாபங்களைக் குறித்து எச்சரித்து சக மனிதர்களை சமத்துவமாகக் கருதுகிற,




சகோதரனாக பாவிக்கிற ஓர் உன்னதமான வாழ்வியல் நெறிக்குள் அவர்களைக் கொண்டு வந்தார்கள் மாநபி(ஸல்) அவர்கள். அன்றிலிருந்து தான் அரபுலக மக்கள் "மானுடத்தின் வசந்தத்தை" நுகர ஆரம்பித்தார்கள்.

> மனிதர்களே! உங்களை ஓர் ஆண் ஒரு பெண்ணிலிருந்தே நாம் படைத்தோம். நீங்கள் ஒருவரையொருவர் அறிந்து கொள்வதற்காக உங்களைக் கிளைகளாகவும், கோத்திரங்களாகவும் ஆக்கினோம். உங்களில் (இறைவனை) அதிகம் அஞ்சுவோரே அல்லாஹ்விடம் அதிகம் சிறந்தவராவார். அல்லாஹ்வே நன்கறிபவன்; நன்கறிந்தவன். (அல்குர்ஆன்:49:13)

இந்த ஓர் இறைவசனத்தின் உதவி கொண்டு பெருமானார்(ஸல்) அவர்கள் இறைவனின் பெயரால் நிலவி வந்த தீண்டாமைக்கு முற்றுப்புள்ளி வைத்தார்கள்.

மனித இனம் முழுமையும் ஆதம், ஹவ்வா (அலை) என்கிற ஒரே ஜோடியின் மூலம் தான் படைக்கப்பட்டுள்ளனர். மனிதர்களுக்கு மத்தியில் பிறப்பால், இனத்தால், மொழியால், நிறத்தால் கலாச்சாரத்தால், நிலத்தால் எந்த ஒரு வேறுபாடும் கிடையாது என்ற தீண்டாமைக்கு எதிரான இந்த முதல் பிரகடனமே அம்மக்களின் அறியாமைக்கு திரையிட்டது.

அட என்னப்பா நீ! நம் முன்னோர்கள் அந்த காலத்தில் பல சமூகங்களாக, பல தொழில்களை செய்பவர்களாக இருந்தார்கள். அப்படி தொழில் ரீதியாக பிளீக்கப்பட்டதுதான் சாதிப்பிரிவுகள். அதில் ஒன்றும் தீண்டாமையெல்லாம் இல்லை. என்று சாதிப்பிரிவுகளுக்கு இப்போது நவீன

விளக்கங்கள் கொடுக்கப்படுகின்றன.

ஆனால் இஸ்லாம் மனிதனுக்கு மனிதன் கடைப்பிடிக்கப்படும் பாகுபாடுகள் குறித்த இது போன்ற எந்த விளக்கத்தையும் ஏற்றுக் கொள்ளவில்லை என்பது மட்டுமல்ல அதை வண்மையாக கண்டிக்கவும் செய்கின்றது.

எந்த தொழிலும் உயர்ந்ததும் இல்லை. தாழ்ந்ததும் இல்லை. எந்த தொழிலாக இருந்தாலும் சரி அதில் அவனுக்குத் திறமையும், நேர்மையும் இருந்தால் அதை அவன் தாராளமாக செய்யலாம் என்பதே இஸ்லாத்தின் நிலைப்பாடு. இஸ்லாத்தின் இந்த நிலைப்பாட்டை நபி(ஸல்) நடைமுறையில் செய்து காட்டினார்கள்.

- நபி(ஸல்) அவர்கள் ஆடு மேய்த்துள்ளார்கள்.
- நபி(ஸல்) மண், கற்களை சுமந்துள்ளார்கள்.
- நபி(ஸல்) அவர்கள் மஸ்ஜிதுநபவியில் எங்கேனும் சலியைக் கண்டால், அதை தானே சுத்தம் செய்வார்கள்.
- ஏன் நபி(ஸல்) வீட்டு வேலைகளைக் கூட செய்துள்ளார்கள்.

அன்னை ஆயிஷா (ரலி) அவர்களிடம் மக்களில் சிலர் வந்து, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் வீட்டில் என்ன செய்து கொண்டிருப்பார்கள்?" என்று வினவியதற்கு,

"அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் வீட்டில் தமது அறுந்து போன செருப்பைத் தைப்பார்கள். தமது ஆடையின் கிழிசலையும் தாமே தைப்பார்கள். வீட்டு வேலைகளையும் எங்களோடு இணைந்து செய்வார்கள். ஆடுகளின் பாலைக் கறந்து தருவார்கள்" என்று பதிலளித்தார்கள்.(நூல்: புகாரி)

ஆக மனிதன் தனது வாழ்வாதாரத்திற்காக செய்யும் எந்த வேலையிலும் ஏற்றத்தாழ்வுகள் இல்லை என்பதை நபி(ஸல்) தானே முன்வந்து நிரூபித்துக்காட்டினார்கள். அதன் மூலம் அன்றைய அரபுகளிடத்தில் இருந்த அறியாமைக்கால தொழில்ரீதியான பாகுபாடுகள் துடைத்தெறியப்பட்டது.

நபி(ஸல்) தனது இறுதி உரையில் இப்படி குறிப்பிட்டார்கள்;

ஓ மக்களே! என் பேச்சைக் கவனமாகக் கேளுங்கள்! உங்களது இறைவன் ஒருவனே! உங்களது தந்தையும் ஒருவரே! அறிந்து கொள்ளுங்கள்; எந்த ஓர் அரபிக்கும் அரபி அல்லாதவரை விடவோ, எந்த ஓர் அரபி அல்லாதவருக்கும் ஓர் அரபியை விடவோ எந்த மேன்மையும் சிறப்பும் இல்லை.

எந்த ஒரு வெள்ளையருக்கும் கறுப்பரை விடவோ, எந்த ஒரு கறுப்பருக்கும் வெள்ளயரை விடவோ எந்த மேன்மையும் சிறப்பும் இல்லை.

இறையச்சம் மட்டுமே ஒருவரின் மேன்மையை நிர்ணயிக்கும். நிச்சயமாக, அல்லாஹ்விடத்தில் உங்களில் மிகச் சிறந்தவர், உங்களில் அதிகம் இறை அச்சம் உள்ளவர் தான்!"

ஓ மக்களே! அல்லாஹ்வை அஞ்சிக்கொள்ளுங்கள்! கறுப்பு நிற அபீசீனிய அடிமை ஒருவர் உங்களுக்குத் தலைவராக ஆக்கப்பட்டாலும், அவர் அல்லாஹ்வின் வேதத்தைக் கொண்டு உங்களை வழி நடத்தி, அதை உங்களுக்கிடையில் நிலைநிறுத்தும் காலமெல்லாம் அவரது சொல்லைக் கேட்டு நடங்கள்; அவருக்கு கீழ்ப்படியுங்கள்!"(நூல்: புகாரி)

நபி(ஸல்) அவர்களின் இந்த உரை, வெறும் உரையல்ல. மாறாக உலகின் ஒவ்வொரு பகுதியிலும், நிறம், இனம், பிறப்பின் அடிப்படை யிலான ஏற்றத்தாழ்வுகளால் தீண்டாமையை அனுபவித்துக் கொண்டிருக்கும் ஒவ்வொரு மனிதனுக்கான விடுதலை சாசனம் இது.

எனவே இஸ்லாம் கற்பிக்கும் இறையியல் குறித்தும், அது போதிக்கும், நடைமுறைப்படுத்தும் சமத்துவம், சமநீதி குறித்தும் சிந்திக்க வேண்டும். சாதி ரீதியான தீண்டாமையால் பாதிக்கப்பட்ட மக்கள் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டு தங்கள் மீது படிந்திருக்கின்ற தீண்டாமையை துடைத்தெறிய வேண்டும்.

**- அஷ்ரப் அலீ**





# திருமதி எஸ் எதிர் சிறைக் கண்காணிப்பாளர்!!!

சிறையில் கைதிக்கு தண்ணீர் வழங்க தாமதமானதை எதிர்த்து வரலாற்றில் பதிவான முதல் கலகக்குரல் இரண்டாம் நூற்றாண்டின் தமிழ்நாட்டின் புறநானூற்றுப் பாடல்தான் எனக் கூறினால் மறுப்பது கடினம் .

என்னை நாயைச் சங்கிலியில் பிணைத்து வருவதைப் போல இழுத்துக் கொண்டு வந்ததையும், வயிற்றுப் பசியை அடக்கக் கேட்ட தண்ணீரைக் கூட தாமதமாக கொண்டு வந்ததையையும் பொறுத்துக்கொண்டு எப்படி உயிர் வாழ்வேன் என உரைத்த கணைக்கால் இரும்பொறையின் பாடல் தமிழகத்தில் சிறைவாசிகளின் முதல் உரிமைக்குரல்.

'குழவி இறப்பினும் ஊன்தடி பிறப்பினும்
ஆள் அன்று வாளின் தப்பார்
தொடர்ப்படு ஞமலியின் இடர்படுத்து இரீஇய
கேளல் கேளிர் வேளாண் சிறுபதம்
மதுகை இன்றி வயிற்றுத் தீத்தணிய
தாம் இரந்து உண்ணும் அளவை
ஈன்ம ரோ இவ் உலகத்தானே?'

கணைக்கால் இரும்பொறைக்குப் பின் 1800 வருடங்களாகியும் திகார் சிறையில் சிறை உரிமை கேட்ட சுனில் பத்ரா சித்திரவதைக்குள்ளான வழக்கில் சிறையில் வாடும் மனிதர்களும் மனிதத்தன்மையுடன் நடத்தப்பட வேண்டுமென தனது தீர்ப்பில் மேனாள் உச்சநீதிமன்ற நீதிபதி வி.ஆர். கிருஷ்ணய்யர் கவிதை நடையில் பதிவு செய்தார்.

16.11.2021 ஆம் நாள் தீர்ப்பளிக்கப்பட்ட திருமதி எஸ் எதிர் சிறைக்கண்காணிப்பாளர் என்ற வழக்கில் கைதிகளின் மன நலன் கருத்தில் கொள்ளப்பட வேண்டும் என்ற கடமை குற்றவியல் நடுவர்களுக்கும் சிறை நிர்வாகத்திற்கும் உண்டு என்ற உயர்நீதிமன்ற நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் அவர்களது உத்தரவு காலனிய கால கைதிகள் சட்டம் 1900ல் சொல்லப்பட்ட மனநோயாளி என்ற கோட்பாட்டை புரட்டிப் போட்டதுடன் 2017ம் ஆண்டு மனநலம் பேணல் சட்டப்படி குற்றவியல் நடுவர்கள் தாங்கள் காவல் அடைப்பிற்கு உத்தரவிடும் கைதிகள் மனநோயுற்றவர்களாக இருக்கின்றார்களா என உரிய மருத்துவரைக் கொண்டு பரிசோதிப்பது அவசியமெனக் கூறி, மேலும் அவ்வழக்கில் மன நலனுக்காக சிகிச்சை பெறும் கைதியை திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு மாற்றவும் கூறியது.

திருமதி எஸ் தீர்ப்பை படிக்கும்போது அதில் சொல்லப்பட்ட சில்வியா நாசரின் "பியூட்டிஃபுல் மைண்ட்" திரைப்படத்தை ஏற்கனவே பார்த்த நிறைவு இருந்தாலும் அதில் பரிந்துரைக்கப்பட்ட ஜெரி பின்டோவின் 'எ புக் ஆஃப் லைட்' நூலை படிக்காத குறையும் வந்து போகிறது.

சிறைவாசிகளின் மனித உரிமைகளைப் பற்றி அழுத்தமாகச் சொல்லும் நீதிபதி சுவாமிநாதனின் தீர்ப்பில், பார்க்கின்ஸன் நோயால் பாதிக்கப்பட்ட ஒருவர் தான் அருந்தும் கோப்பையைக் கையில் பிடிக்க இயலாமல் போனால் அவருக்கு உறிஞ்சு குழல் கோப்பையை வழங்க வேண்டுமெனவும் அது மறுக்கப்படுவது அவரை மனிதத்தன்மையற்று கொடுமைப்படுத்துவதற்கு சமம் என 12 ஆவது பத்தியில் குறிப்பிட்டிருப்பது பழங்குடிகளுக்காக போராடி பொய்யான தீவிரவாதக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 84வயது முதியவரான ஸ்தனிஸ்லாஸ் லூர்து சாமி என்ற ஸ்டேன் சாமிக்கு பிணையும், அடிப்படை வசதிகளையும் மறுத்த பாம்பே உயர்நீதிமன்றம் இழைத்த நீதித்துறை படுகொலைக்கு எதிரான நீதியின் குரலாகவே கொள்ளலாம்.

சிறைவாசிக்கு நீருக்காகவும், நீரருந்தும் கோப்பைக்காகவும் எழுந்த முதல் உரிமைக்குரல் தெற்கிலிருந்து என்பது மகிழ்ச்சியூட்டுகிறது.

**தி.லஜபதி ராய்**
*மதுரை - 20*
*28.11.2021*

தலையங்கம்

# ஊழல் அற்ற தலைவர்

ஊழல் என்ற வார்த்தையைக் கேட்டுக் கேட்டு தற்போது மக்களுக்கு அது சர்வ சாதாரணமாகிவிட்டது. எந்த அளவுக்கு என்றால் தேர்தலின்போது மக்கள், எந்தக் கட்சி குறைவாக ஊழல் செய்கிறதோ அதைத் தேர்ந்தெடுப்போம் என்றால், எல்லாக் கட்சிகளும், அதன் தலைவர்களும் ஒரேபோல் தான் ஊழல் செய்கிறார்கள். யாரைத் தேர்ந்தெடுத்தாலும் இதுதான் நிலை என்று கூறும் அளவிற்கு ஊழல் என்பது எல்லாக் கட்சிகள், தலைவர்களிடம் நிறைந்து காணப்படுகின்றது.

சாதாரண மனிதர்களாக இருந்து ஆட்சியாளராக மாறும்போது இவர்கள் தங்களை அரசனாகவும், மக்கள் உழைப்பின் மூலம் வரும் வரிப்பணத்தை தன்னுடைய சொத்தாகவும் நினைத்துக் கொள்கிறார்கள். மக்கள் நலனுக்காக செலவிட வேண்டிய மக்கள் பணத்தை தன்னுடைய சுய ஆடம்பரச் செயல்களுக்கு செலவிடுகின்றார்கள். இவர்கள் மரணத்திற்குப் பின் உள்ள வாழ்க்கையைப் பற்றிய அச்சமும், நம்பிக்கையும் இல்லாதவர்கள். யாரிடம் மரணத்திற்குப் பின் உள்ள வாழ்க்கை பற்றிய அச்சமும், நம்பிக்கையும் இருக்கிறதோ அவர்களிடம் தான் உண்மையும், நேர்மையும் இருக்கும்.

முஹம்மத் நபி(ஸல்) அவர்கள் பொதுநிதி (பைத்துல் மால்) விசயத்தில் மிகவும் கவனமாக இருந்தார்கள். நபிகள் நாயகத்தின் வீடு பள்ளிவாசலுடன் ஒட்டி அமைந்திருந்தது.

பள்ளிவாசலில் குவிக்கப்படும் பொது நிதிக்கு சொந்தமான பேரிச்சம்பழங்களில் ஒன்றிரண்டு நபிகள் நாயகத்தின் வீட்டுக்குள் வந்து விழுந்திட வாய்ப்பு இருப்பதால், வீட்டில் இருக்கும் பேரீச்சம் பழத்தைக் கூட சாப்பிட மாட்டேன் என்றார்கள்.

பொதுநிதியைச் சேர்ந்ததாக இருக்குமோ என்ற சந்தேகம் இருந்தால் கூட அதைத் தவிர்க்கும் அளவுக்கு பேணுதலாக இருந்தார்கள்.

முஹம்மது நபி(ஸல்) அவர்கள் தொழுகையை நடத்திவிட்டு வேகமாக வெளியேறினார்கள். சற்று நேரத்தில் பள்ளிவாசலுக்கு திரும்பி வந்து விட்டார்கள்.

ஒரு நாளும் இல்லாமல் நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் வேகமாகப் புறப்பட்டுச் சென்றதையும் உடனேயே திரும்பி வந்ததையும் நபித்தோழர்கள் வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தனர்.

நான் ஏன் அவசரமாகச் சென்றேன் தெரியுமா? பொதுநிதிக்குச் சொந்தமான வெள்ளிக்கட்டி என் வீட்டில் இருந்தது. அதை ஏழைகளுக்கு விநியோகம் செய்யு மாறு குடும்பத்தாரிடம் தெரிவித்துவிட்டு வந்தேன் என்றார்கள்.

முஹம்மது நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் :

ஒருவன் விலக்கப்பட்ட வழியில் செல்வத்தை ஈட்டி, அதிலிருந்து இறைவழியில் செலவு செய்தால் அந்த தர்மம் இறைவனிடம் ஏற்றுக் கொள்ளப்படாது. தனக்காகவும், தன் வீட்டாருக்காகவும் அதிலிருந்து செலவிட்டால் பாக்கியம் அற்றதாகவே இருக்கும். அதனை விட்டுவிட்டு அவன் இறந்துவிட்டால் அவனது நரகப் பயணத்திற்கு சாதகமாகத்தான் அது விளங்கும்.

அல்லாஹ் தீமையை தீமையின் வாயிலாக அழிப்பதில்லை. மாறாக தீய செயலை நற்செயலின் வாயிலாக அழிக்கின்றான். ஓர் அசுத்தம் இன்னோர் அசுத்தத்தை அழிப்பதில்லை.

முஹம்மது நபி (ஸல்) கூறினார்கள்:

மறுமையில் ஐந்து கேள்விகளுக்கு பதில் சொல்லாமல் ஒரு அடி கூட நகர முடியாது.

- உன் ஆயுளை எவ்வாறு கழித்தாய்?
- உன் இளமையை எவ்வழியில் பயன்படுத்தினாய்?
- செல்வத்தை எவ்வழியில் ஈட்டினாய்?
- செல்வத்தை எவ்வழியில் செலவு செய்தாய்?
- கொடுக்கப்பட்ட அறிவை எவ்வழியில் பயன்படுத்தினாய்?

என்னுடைய வாழ்நாளின் ஒவ்வொரு நொடிப் பொழுதையும் நாளை மரணத்திற்குப் பிறகு படைத்த இறைவனிடம் பதில் சொல்லியாக வேண்டும் என்ற நம்பிக்கையும், அச்சமும் யாரிடம் உள்ளதோ அவர் தான் சிறந்த மனிதராக இருக்க முடியும்.







# இந்தியாவில் முஸ்லிம்கள்

பலவிதமான கலைகளை, அறிவுகளை முஸ்லிம்கள் இந்தியாவிற்குள் கொண்டு வந்தார்கள். அவற்றில் மிகவும் முக்கியமானது வரலாறு.

இந்திய வரலாற்றுத் துறையில் மிகப்பெரிய வறட்சி நிலவியது. தெளிவான வரலாற்று தரவுகளோடு தொகுக்கப்பட்ட ஒரு வரலாற்று புத்தகம் கூட கிடையாது. ஏதேனும் மதம் சம்பந்தமான புத்தகங்கள் அல்லது போர் சம்பந்தமான புத்தகங்கள் அல்லது இராமாயணம், மஹாபாரதம் போன்ற காப்பியங்களில் உள்ளது போல குறிப்பிட்ட காலத்தை பற்றிய வரலாற்று குறிப்புகள் மாத்திரமே இருந்து வந்தது.

ஆனால் முஸ்லிம்களோ உலகின் மிகப்பெரிய வரலாற்று நூலகங்களின் வரிசையில் ஒரு பிரம்மாண்ட நூலகத்தை வரலாற்றுத் துறையில் உருவாக்கியிருந்தார்கள்.

இதனைத் தெளிவாக நாம் புரிந்துகொள்ள அல்லாமா சையத் அப்துல் ஹை ஹஸனீ(ரஹ்) அவர்கள் எழுதிய அஸ்ஸகாஃபதுல் இஸ்லாமியா ஃபில் ஹிந்து என்ற புத்தகத்தைப் படித்தால் அசாதாரண உத்வேகத்தோடு வரலாற்றுத் துறையில் முஸ்லிம்கள் ஆற்றிய மிகப்பெரிய பங்களிப்பை நம்மால் புரிந்துகொள்ள இயலும்.

கஸ்தாவ் லபூன் தனது புத்தகமான ஹளாரதுல் ஹிந்து என்ற புத்தகத்தில் கூறுகிறார்:

இந்தியாவின் பண்டைய வரலாறே கிடையாது. அது போல இந்திய நாட்டின் வரலாற்று நினைவுச் சின்னங்கள், பாரம்பரியமிக்க பழங்காலத்து கட்டிடங்களை வைத்தும் கூட இந்தியாவின் பண்டைக்கால வரலாற்றைக் குறித்து ஒரு முடிவுக்கு வர இயலாது. மத ரீதியான புத்தகங்களில் ஆன்மீக சிறுகதைகளில் நாட்டுப்புற கதைகளில் வேண்டுமானால் ஆங்காங்கே சில வரலாற்று தகவல்கள் புதைந்து கிடக்கலாம். அட்லாண்டிக் தீவைக் கண்டறிவது எவ்வளவு கடினமோ அதுபோல இவற்றை வைத்து பண்டைய இந்தியாவை அறிய முயற்சி செய்வது மிகவும் கடினம்.

ஆசிரியர் இன்னும் கூறுகிறார், இந்து சமய வேதங்கள் மகாபாரதம், இராமாயணம் போன்ற காப்பியங்கள் பண்டைய இந்திய வரலாற்றை குறித்து சில விஷயங்களை பதிவு செய்கிறது என்பதில் சந்தேகமில்லை. ஆனாலும் உண்மையில் பதினோராம் நூற்றாண்டில் முஸ்லிம்கள் இந்திய நாட்டை நோக்கி போர் தொடுத்ததற்கு பிறகு முஸ்லிம்கள் தான் இந்திய வரலாற்றை எழுதத் துவங்கினார்கள்.

இந்தியாவை முஸ்லிம்கள் ஒரு புதிய இலக்கிய உலகிற்கு கொண்டு சென்றனர். இலக்கியத்திற்கு அவசியமான விசாலமான கற்பனை திறனையும்,நவீன சிந்தனைகளையும் இன்னும் கவிதைகளிலும் இலக்கியங்களிலும் சிந்தனைக்கு எட்டாத புதுப்புது அர்த்தங்களுடைய சொற்களையும் அதன் புதிய கோணங்களையும் முஸ்லிம்களின் மூலமாகத் தான் இந்தியர்கள் கற்றுக் கொண்டார்கள்.

இன்னும் முஸ்லிம்கள் இந்தியாவுக்கு அன்பளிப்பாக அளித்த ஒரு அற்புதமான பொக்கிஷம் உருதுமொழி இன்றும் இந்த மொழி வளர்ந்து விரிவடைந்து கொண்டே செல்லும் அற்புத மொழி. இன்றும் இந்த மொழியே இந்தியாவில் வாழும் பல்வேறு பகுதிகளில் வாழும் மக்களின் தொடர்பு கொள்ளக்கூடிய சாதனமாகவும் இலக்கிய வெளிப்பாட்டின் சிறந்த கருவியாகவும் விளங்கிவருகிறது. இப்படிப்பட்ட உருது மொழியின் பெருமையை விளக்க வேண்டிய அவசியமில்லை.

மற்ற எல்லா விஷயங்களை விட இந்திய நாகரீகத்தில், அதன் உற்பத்தியில், வாழ்க்கை முறையில் முஸ்லிம்களது தாக்கம் தெளிவாகவும் ஆழமாகவும் இருந்தது.

இந்திய நாட்டிற்கு சற்றும் பரிச்சயமில்லாத ஒரு புதுவிதமான வாழ்க்கை முறையை இந்நாட்டிற்குள் புகுத்தினார்கள். இவை இரண்டிற்கும் மத்தியிலிருந்த வேறுபாடு என்பது இடைக்கால ஐரோப்பாவிற்கும் தற்கால ஐரோப்பாவிற்கும் மத்தியில் உள்ள வேறுபாட்டை போன்றிருந்தது.

இந்திய நாட்டின் வளங்களுக்கும் நாகரீகத்திற்கும் எவற்றையெல்லாம் கொண்டு வந்து சேர்த்தார்கள். எவ்வாறு முஸ்லிம்கள் ஒரு புதிய நாகரீகத்தை, இந்திய இஸ்லாமிய கலாச்சாரத்தை நிறுவினார்கள். எவ்வாறு தாங்கள் இதுவரை அனுபவித்து வந்த வசதிகளை இந்தியாவிற்கு அன்பளிப்பாக அளித்தார்கள் என்பதனை அறிய விரும்பினால்

முஸ்லிம்களது வருகைக்கு முன்னால் இந்தியாவின் வளங்கள், கலாச்சாரம், வருவாய், வசதி வாய்ப்புகள், சராசரி வாழ்க்கை என அனைத்தையும் குறித்து தெளிவான வரைபடத்தை வரைந்த பிறகே நம்மால் அதனை அறிய இயலும்.

முகலாயப் பேரரசின் நிறுவனர் பாபர் இந்திய நாகரீகத்தை குறித்தும் அதன் இயற்கை மற்றும் செயற்கை வளங்கள் குறித்தும் அவரது போர் தொடுக்கும் போது இருந்த இந்திய மக்களின் சராசரி வாழ்க்கைத் தரத்தைப் பற்றியும் தெளிவாக குறிப்பிடுகிறார்.

எல்லா தரப்பிலும் காணப்பட்ட கலாச்சார வீழ்ச்சியை பற்றி பாபரது இந்த குறிப்பின் மூலம் அறியலாம்

இங்கே முக்கியமானதொரு விஷயம் முகலாயர்கள் இந்தியாவை நோக்கி படை எடுப்பதற்கு முன்பே முஸ்லிம்கள் இந்தியாவில் வளர்ச்சி நடவடிக்கைகளை துவங்கிவிட்டனர் என்பதனை நினைவில் கொள்ள வேண்டும்.

பாபர் கூறுகிறார்:

“குதிரைகள், மாமிசம், திராட்சைப் பழங்கள், முலா பழங்கள் அல்லது வேறு பழங்கள் இல்லை சந்தைகளில் பனிக்கட்டி, குளிர்நீர், நல்ல உணவு அல்லது ரொட்டி எதுவுமில்லை. குளங்களோ மதரஸாக்களோ இல்லை. மெழுகுவர்த்தி தாங்கி தீபங்கள் இல்லை.”

“மெழுகுவர்த்தி மற்றும் தீபங்களுக்கு பதிலாக தியோதிக்கள் என்ற எளிய மக்கள் பலர் கூட்டமாக விளக்கை ஏந்திச் செல்ல இருக்கிறார்கள்.”

“தியோதிக்கள் தங்கள் இடது கையில் ஒரு முக்காலியை ஏந்தியுள்ளனர்.அதன் கால் ஒன்றின் முனையில் மெழுகுவர்த்தி தாங்கி போல ஒரு இரும்புத்துண்டு முக்காலி மரத்தில் கட்டப்பட்டுள்ளது. அதன் பக்கத்தில் கட்டைவிரல் கணத்தில் ஒரு திரியை கட்டுகிறார்கள் அவர்களுடைய வலது கையில் ஒரு சுரைக்காய் குடுவை ஒரு சிறு ஓட்டையுடன் இருக்கிறது. அந்த ஓட்டை வழியாக திரிக்கு எண்ணெய் ஊற்றப்படுகிறது. திரிக்கு எண்ணெய் தேவைப்படும் போதெல்லாம் குடுவையிலிருந்து அவர்கள் எண்ணெய் விடுகிறார்கள். பெரிய மனிதர்கள் நூற்றுக்கணக்கில் தியோதிக்களை மெழுகுவர்த்தி அல்லது தீபங்களுக்குப் பதிலாக வைத்து பராமரிக்கிறார்கள். அரசர்களோ, பிரபுக்களோ இரவில் வெளிச்சம் தேவைப்படும் வேலை இருக்கும்போது இந்த எளிய தியோதிக்கள் இந்த வகையான விளக்கை கொண்டு வந்து அருகே ஏந்தி நிற்கின்றனர்.”

“நீரோடைகள், பள்ளங்கள் பள்ளத்தாக்குகளில் ஓடும் நீரைத்தவிர அவர்களுடைய தோட்டங் களிலோ அரண்மனைகளிலோ ஓடும் வாய்க் கால்கள் இல்லை. அவர்களுடைய கட்டிடங்களில் கவர்ச்சிகரமான ஒழுங்கோ ஒருமைப்பாடோ இல்லை.”

“உழவர்களும், சாதாரண மக்களும் கோவணம் போன்ற ஏதோ ஒன்று இரண்டு விரல் கடை அளவுக்கு தொப்புள்களுக்கு கீழே தொங்கும் படி முழுநிர்வாணமாக வருகிறார்கள். இதற்கடியில் மற்றொரு துண்டு துணி கால்களுக்கு இடை வழியாக கோவணத்துடன் ஒரு கயிறால் கட்டியிருக்கிறார்கள். பெண்கள் நீண்ட துணியின் பாதியை தங்கள் இடுப்பில் கட்டிக்கொண்டு இன்னொரு பாதியை தலையில் முக்காடிட்டு கொள்கிறார்கள்.”

பண்டைய இந்தியாவின் கலாச்சார பின்னடைவை பற்றியான பாபரின் கருத்திற்கு வலுசேர்க்கும் விதமாக பாரதத்தின் முன்னால் பிரதமரான ஜவஹர்லால் நேரு அவர்கள் Discovery of India என்ற தனது புத்தகத்தில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:


“வட இந்தியாவின் மீது படிந்திருந்த கலாச்சார பின்னடைவை பாபரின் வரலாற்றுத் தொகுப்பிலிந்து நாம் தெளிவாகப் புரிந்து கொள்ள முடிகிறது. இது ஏற்பட்டதற்கான காரணம் பகுதியளவில் தைமூரின் அழித்தொழிப்பு நடவடிக்கைகளாலும் பகுதியளவில் பல கற்றறிந்த மனிதர்களும், கலைஞர்களும் புகழ்பெற்ற கைவினைஞர்களும் தெற்கிற்கு குடி பெயர்ந்ததாலுமே இது நிகழ்ந்தது.”

மேலும் பாபர் கூறுகிறார்:

“திறமையான கைவினைஞர்களுக்கும் கலைஞர்களுக்கும் இந்திய நாட்டில் பஞ்சமில்லை ஆனால் அவர்களது புதுப்புது கண்டுபிடிப்புகள் நுட்பமற்றதாக நேர்த்தியற்றதாக அமைந்திருந்தன.”

“இதற்கான காரணம் வடக்கில் கலாச்சார சீரழிவு தெளிவாக தெரிந்தது. நிலைத்த நம்பிக்கைகளும், கடுமையான சமூக கட்டமைப்பும் சமூகத்தை வளர்ச்சியை நோக்கி எடுத்துச் செல்ல தடுத்தது.”

இந்திய பூமி வளம் மிகுந்த மண்வளத்தை கொண்டிருந்தாலும் வெறும் சில பழங்களே விளைந்து கொண்டிருந்தது அதுவும் தரமற்றதாகவே இருந்தது. சரியான பராமரிப்பு இல்லாமல் காடுகள் போல வளர்ந்திருந்தன. தோட்டக்கலையின் வளர்ச்சியில் மக்கள் போதுமான கவனம் செலுத்தவில்லை ஆனால் முகலாயர்களோ உயர்தரமான ரசனைக்கு சொந்தக்காரர்கள் அதேபோல அவர்களது பூர்வீக நாடு பல்வகை பழங்கள் கொழிக்கும் நாடு இதனால் இந்தியாவில் முகலாயர்கள் நுழைந்ததிலிருந்தே பழ சாகுபடியை அதிக அளவில் மேற்கொண்டார்கள் என்பது பற்றியான தெளிவான குறிப்புகளை மன்னர் பாபர் மற்றும் ஜஹாங்கிர் அவர்களது சுயசரிதையான




“துஸிகி பாபர், துஸிகி ஜஹாங்கிர்” போன்ற நூல்களின் மூலம் அறியலாம். ஒட்டுக் கட்டும் முறை பற்றி பல ஆய்வுகளை மேற்கொண்டு, முகலாயர்கள் ஒட்டுக்கட்டும் முறையின் மூலம் பல புதுவகையான பல்சுவை பழங்களை உருவாக்கினார்கள். இதற்கு ஓர் உதாரணம் கூற வேண்டுமென்றால் மாம்பழம் சுவைமிகுந்த நன்கு பிரபல்யமான இந்தியப் பழம் ஆனால் முகலாயர்களது வருகைக்கு முன்னால் வரை விதைகளின் மூலம் மட்டுமே பழங்களை விளைவித்து ஒரே வகை மாம்பழத்தை மட்டுமே சாகுபடி செய்துக் கொண்டிருந்தனர்.

ஆனால் முகலாயர்கள் ஒட்டுக் கட்டும் முறையின் மூலம் கலமி என்ற புதுவகை மாம்பழத்தை விளை வித்தார்கள். இதிலிருந்து பல்வேறு வகைகளை உருவாக்கினார்கள். இவ்வாறு ஒரு நூறு என்ற எண்ணிக்கையை அடையும் அளவிற்கு ஒட்டுக்கனிகளை உருவாக்கிக் கொண்டே போனார்கள். அதேபோல ஜவுளி துறையிலும், நெசவுத்துறையிலும் மிகப்பெரிய அளவில் உற்பத்தியை மேற்கொண்டனர். இந்தியாவில் பெரும்பான்மையான மக்களின் ஆடைகள் பட்டு, பருத்தி, கம்பளிகளினாலான ஆடைகளாகவே இருந்தது.

மஹ்மூத் பேக்கர் என்று பிரபல்யமாக அழைக்கப்படக்கூடிய குஜராத் மன்னரான மஹ்மூத் இப்னு முஹம்மத் அல்குஜராத்தி பல ஆலைகளை அமைத்தார்.நெசவு செய்வதற்கு, சாயமிடுவதற்கு, அச்சிடுவதற்கு, எம்பிராய்டரி செய்வதற்கு, யானைத் தந்தங்களை செதுக்குவதற்கு, காகிதத்தை தயாரிப்பதற்கு என அனைத்திற்கும் தனித்தனி ஆலைகள் நிறுவப்பட்டது. மிகப்பெரிய நகரத்தை நிறுவிய பெருமை மன்னர் மஹ்மூதையே சாரும்.

வர்த்தகத்துறை, உற்பத்தித்துறை, விவசாயத்துறை என அனைத்து துறைகளிலும் புத்துணர்வூட்டி மிகப்பெரிய அளவில் முன்னேற்றமடையச் செய்தார். அந்த காலத்தில் இதனை ஒப்பற்ற முன்னெடுப்பு எனலாம்

இந்திய வரலாற்றுத் துறை ஆய்வாளர் சையது அப்துல் ஹை ஹஸனீ நுஸ்ஹதுல் ஹவாதிர் என்ற தங்களது நூலில் கூறுகிறார்:

“இவரது தொண்டுகளில் முக்கியமானது பல நகரங்களை உருவாக்கினார் பள்ளிவாசல்களை பள்ளிக்கூடங்களை, ஆன்மீக மையங்களை நிறுவினார். வேளாண் உற்பத்தியைப் பெருக்கினார் நிறைய கனிதரும் மரங்களை விதைத்தார், நிறைய தோட்டங்களை பூங்காக்களை நிறுவினார் இவற்றின்பால் மக்களை அதிகமாக ஆர்வ மூட்டினார் நீர் பாசனத்திற்காக பல்வேறு

கிணறுகளை கால்வாய்களை வெட்டினார். இவ்வாறான பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் பல்வேறு பகுதியிலிருந்து மக்களை இந்த நகரத்தை நோக்கி வரவழைத்தது."

"இதற்கும் மேலாக ஈரானிலிருந்து துருக்கியிலிருந்து திறமைவாய்ந்த கட்டிட கலைஞர்கள், கைவினைஞர்கள் வந்து இந்த வளர்ச்சிப் பணியில் தங்களது கைவண்ணத்தையும் காண்பித்தார்கள்."

இதனால் குஜராத்தில் நீர் பாசனத்திற்கு தேவையான பல்வேறு கிணறுகள், கால்வாய்கள் இருந்ததால் பூத்துக்குலுங்கும் தோட்டங்கள், பசுமையான விவசாயம், பல்வேறு கனிகள் காய்க்கும் மரங்கள் என குஜராத் வளம் பொருந்திய நகரமாக உருமாறியது.

உயர்தரமான ஆடைகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் வர்த்தக மையமாக குஜராத் மாறியது இவை அனைத்திற்கும் சுல்தான் மஹ்மூதின் இடைவிடாத முயற்சிகள் மற்றும் மக்கள் நலனில் அவர் எடுத்த கவனமே காரணமாகும்."

மன்னர் அக்பரது ஆட்சிக்காலத்தில் பல்வேறு நெசவு தொழிற்சாலைகள் நிறுவப்பட்டன. இந்த ஆட்சியில் அறிமுகப்படுத்தப்பட்ட பல்வேறு நுட்பமான சீர்திருத்தங்கள் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. குறிப்பாக நிலங்கள், விவசாய நிலங்கள் அனைத்தும் தெளிவாக அளக்கப்பட்டு அதற்கான வரியை நிர்ணயம் செய்து அதனை நிர்வகித்து அதற்கான சட்ட ஒழுங்குகள் வகுக்கப்பட்டது.


அதேபோல நிதி நிர்வாக மையங்கள் ஏற்படுத்தப் பட்டன. இந்திய நாட்டிற்கு பரிச்சயமில்லாத நாணயங்கள் முதன் முறையாக அறிமுகப்படுத்தப் பட்டது.

உயர் திறன் வாய்ந்த மிகச் சிறந்த நிர்வாகி அரசு தந்திரி சேர் சா சூரி செய்த அற்புதமான நிர்வாக சீரமைப்பு பணிகள் இவருக்குப் பின்னால் வந்த முகலாய அரசர்களுக்கு குறிப்பாக அக்பர் போன்றோருக்கு முகலாய அரசை வழி நடத்திச் செல்ல ஒரு அடித்தளமாக அமைந்தது.

இதனைப் போலவே விலங்குகளை பராமரிப்பது உணவளிப்பது அதன் இனவிருத்தியை மேம்படுத்துவது அதனது உடலை நல்ல முறையில் கவனிப்பது என்பதையெல்லாம் முஸ்லிம்கள் மேற்கொண்டார்கள் என்பதனை துஸ்கி ஜஹாங்கிர், அய்னி அக்பரி போன்ற வரலாற்று நூல்களின் மூலம்அறிந்து கொள்ள முடிகிறது.

**- மௌலவி நியாசுதீன் புகாரி நத்வீ**

**நவம்பர் 2021,வைகறை வெளிச்சம் மாத இதழில் கவிஞர் கா.மு.ஷெரீப் அவர்களைப் பற்றிய கட்டுரையில் 1993ஆம் ஆண்டு குடியரசு இதழில் அவரது முதல் கவிதை வெளிவந்ததாக ஆண்டினை பிழையாக குறிப்பிடப்பட்டிருந்தது. சரியான வருடம் 1933 என்பதே. தவறுக்கு வருந்துகின்றோம். சுட்டிக்காட்டிய வாசகர்களுக்கு நன்றி!**


Mideen Batcha is with Ashraf Alee.
12 October ·

பிற மதங்களில் இருந்து அதிலும் குறிப்பாக இந்து மற்றும் கிறிஸ்தவ மதத்தில் இருந்து இஸ்லாமை ஏற்றுக்கொண்டவர்களின் மன மாற்றத்தை அவர்களே உணர்வுகளாக வெளிப்படுத்தியவற்றை தாங்கி நிற்கிறது இந்நூல்.

அவர்கள் இஸ்லாமை அறிந்த விதம் ஏற்றுக்கொண்ட முறை அதன் பின் ஏற்பட்ட கடுமையான சோதனைகள் அனைத்தையும் தாண்டி முஸ்லிம்களாகவே மரணிப்போம் என்ற அவர்களின் உறுதி படிப்பவர்களின் கண்களில் கண்ணீர் வரச் செய்கிறது.

பரம்பரை முஸ்லிம் என்று கூறிக்கொண்டு இஸ்லாமை படிக்ககூட தயாரில்லாத,தொழுகைக்கூட இல்லாத நிலையில் இஸ்லாமை ஏற்றுக் கொண்டவர்களின் தியாகம் மகத்தானது.

அழைப்புப் பணியில் உள்ளவர்களுக்கும் குறிப்பாக ஈமானுக்காக எதையும் இழக்காத தாய் தந்தை வழி முஸ்லிம்களுக்கும் இந்நூல் உத்வேகம் அளிக்கும்.

இந்நூலின் மற்றொரு சிறப்பு இதைத் தொகுத்தவரும் இஸ்லாமை ஏற்றுக் கொண்டவர் என்பது....

நூல்: இஸ்லாம் நாங்கள் தேர்ந்தெடுத்த மார்க்கம்.
பக்கம் 128

# தேவதாசி முறையை எதிர்த்த

# டாக்டர்.முத்துலட்சுமி ரெட்டி

ஈஸ்வரனுக்கு நாட்டிய உபசாரம் நடக்க வேண்டும் என்பதற்காகவே கோவில்களில் தேவதாசிகள் ஏற்படுத்தப்பட்டனர்.

தேவதாசிகளுக்கு நேர் பொருள் தேவு அடியாள். ஈஸ்வரனின் அடிமை என்பது பொருள். இந்த நாட்டில் வர்ணாசிரம முறை கடுமையாக பின்பற்றிய போது நடைமுறையில் இருந்த சமுதாய நடைமுறை. இதை நம் நாட்டில் உள்ள இந்து மதம் நடைமுறைப்படுத்தி இருந்தது. தேவு அடியாள், கோவிலிலுள்ள சாமியால் பொட்டு கட்டப்பட்டு (கல்யாணம் செய்யப்பட்டு) தெய்வத்திற்கு உபசாரம் செய்ய வேண்டியவள். இப்பெண்கள் காலப்போக்கில் பூசாரிகளாலும், உயர் மனிதர்களாலும் அவர்கள் வாழ்க்கையை சீரழித்தனர். இந்த தேவதாசி முறையை சமுதாயத்தில் ஒழிக்க சமூக சீர்திருத்தவாதிகள் முயற்சித்தபோது சங்கராச்சாரியும், வர்ணாசிரம விரும்பிகளும் முழு முயற்சி செய்து இதை எதிர்த்தனர்.

பெரியார் தேவதாசி முறையை அரசு ஒழிக்க கூட்டங்கள் மூலமும், மாநாடுகள் கூட்டி தீர்மானம் போட்டும் கண்டனம் தெரிவித்தார். தமிழகத்தை ஜஸ்டிஸ் கட்சி ஆட்சி செய்தபோது டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி தேவதாசி ஒழிப்பு தீர்மானத்தை அன்றைய சட்டசபையில் கொண்டு வந்தார். இத்தீர்மானத்தை சுதந்திர திலகம் திரு.சத்தியமூர்த்தியும் குழுவினரும் எதிர்த்தனர். சத்திய மூர்த்தி அவர்கள் இம்மசோதா பற்றி சட்டமன்றத்திலே பேசும்போது நான் இச்சட்டத்தை எதிர்த்து சிறைக்கு போனாலும் போவேன். சாஸ்திரத்தை எதிர்த்து நரகம் செல்லமாட்டேன் என பேசி வர்ணாசிரம முறையை சட்டமன்றத்தில் நியாயப்படுத்தினார்.

தேவதாசி முறை இருப்பதாலேயே பெண்களுக்கு புண்ணியம் வருகிறது என்ற பழமையான மூட பழக்கவழக்கத்தை சட்டமன்றத்தில் நியாயப் படுத்திப் பேசினார் அன்றைய அவையில் சத்தியமூர்த்தி. இவர் பேச்சைக் கேட்ட டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி பெரியாரிடம் வந்து இவர் சட்ட மன்ற பேச்சு பற்றி சொன்னார். இதனைக் கேட்ட பெரியார் நான் சொல்லும் பதிலை திரு. சத்தியமூர்த்திக்கு சட்டமன்றத்தில் பதிலளியுங்கள் என சொன்னார்.



ஹாஜி.பீ.எம்.அப்துல் கரீம்
குளச்சல்

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி பெரியார் சொன்ன பதிலை அன்றைய சட்டமன்றத்தில் பேசினார். நம் எதிர்க்கட்சித் தலைவர் தேவதாசி ஒழிப்பு மசோதாவை எதிர்த்து பேசும்போது இந்தப் புண்ணியம் அந்தப் பெண்களுக்கு கிடைக்காமல் போகிறது என ஆதங்கப்பட்டார். இவ்வளவு காலம் அப்புண்ணியத்தை வாங்கியது எங்கள் சமூக பெண்கள். இனிமேல் சத்தியமூர்த்தி அப்புண்ணியத்தை செய்யட்டும் நாங்கள் பொட்டு கட்டியிருக்க தயாராக இல்லை. அவர்கள் வேண்டுமானால் பொட்டு கட்டிக் கொள்ளட்டும். இதில் எங்களுக்கு ஆட்சேபனை இல்லை என முழங்கினார். சட்டமன்றத்தில் தேவதாசி ஒழிப்பு சட்டம் பாசாக்கப்பட்டு சமூக இழிவு நீக்கப்பட்டது. இச்சட்டம் பாசாக்கப்பட பெரியாரும், சமூக சீர்திருத்தவாதிகளும், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டியும் அரும்பாடு பட்டனர்.

நம் நாட்டிலே இருந்த வர்ணாசிரம முறைதான் இஸ்லாமும், கிறிஸ்தவமும் இந்நாட்டில் வாழ்ந்த மக்களால் பின்பற்றக் காரணம். வர்ணாசிரம முறையை எதிர்த்துத் தோன்றிய ஜைன,புத்தமதமும் நாளடைவில் ஆரிய சூழ்ச்சியால் அழிந்தது. சீனா,நேபாளம்,பர்மா, தாய்லாந்து, ஜப்பான், இலங்கை வியட்நாம், இந்தியாவின் சில பகுதிகளில் ஜைன,புத்த மதங்களை பின்பற்றும் மக்கள் வாழ்கின்றனர்.

சாரதா பிரசாத், நம் நாட்டில் வயது வருவதற்கு முன்பு மணம் முடித்து கொடுக்கும் பாலிய மணத்தை எதிர்த்தார். ஆங்கிலேயர் இவர் கோரிக்கையை ஏற்று சட்டம் கொண்டு வந்தனர். வயது வருவதற்கு முன்பு ஒரு பெண்ணை ஓர் ஆணுக்கு திருமணம் முடித்துக் கொடுத்து வயது வந்ததும் சடங்கு, திருமண உறவு புதுப்பித்து பாலிய விவாகம் நடைபெற்ற ஆணோ, பெண்ணோ இறந்தால் வாழ்நாள் முழுவதும் மணம் முடிக்காமல் வாழ வேண்டும். இதை தெய்வீகத்தின் குரல் பத்திரிகையில் சங்கராச்சாரியார் ஆதரித்து எழுதியுள்ளார் என்றால் இவ்வளவு நாகரீக காலத்திலும் வர்ண பேதத்திலும், மூட நம்பிக்கையிலும் முழு நம்பிக்கை உடையவராக சங்கராச்சாரி இருப்பதை அறிய முடிகிறது.

நம் நாட்டில் இருந்த தேவதாசி முறை, பாலிய விவாகம், தீண்டாமை போன்றவை சமூகத்தில் புரையோடிருந்தது. திருநெல்வேலியில் புரதி வண்ணான் (என்ற வகுப்பினர்) என்ற சக்கிலியன், பறையர்கள் போன்ற சமுதாயத்தில் இழி குலத்தவராக ஒதுக்கப்பட்ட மக்களின் துணி மணிகளை துவைக்க ஒரு பிரிவினர் இருந்துள்ளனர். இவர்களை உயர் குலத்தோர் பார்த்தாலே தீட்டு. ஆகவே இவர்கள் துணிமணிகளை ஆறு குளங்களுக்கு விடிவதற்கு முன் சென்று யார் கண்ணிலும் படாமல் சென்று துவைக்க வேண்டும். இந்த விஷயம் மண்டல் கமிஷின் அறிக்கையில் உள்ளது. சாதீயக் கொடுமை நாட்டில் இருந்துள்ளதை அறியமுடிகிறது.

நாடார்கள் வழக்கு மன்றங்களில் 36 கால் தூரமும், ஹரிஜனங்கள் 90 கால் தூரமும் ஜாதி வாரியாக நிற்கக்கூடிய கொடுமைகள் இருந்து காலப் போக்கில் சமூக சீர்திருத்தவாதிகளால் இவை கண்டிக்கப்பட்டு காலப்போக்கில் மாறியுள்ளது. மராட்டியத்தில் மகார் இனமக்கள் பூமியில் எச்சில் துப்பக் கூடாது என்பதற்காக கழுத்தில் ஒவ்வொரு வரும் ஓர் மண் கலயம் கட்ட வேண்டிய வழமை இருந்துள்ளது.

மேலும், மேல் ஜாதியினரைக் கண்டால் சாஷ்டாங்கமாக வணங்க கையில் முள்ளாலான கம்பு கையிலே கொண்டு செல்ல வேண்டிய திருந்தது. கீழ் ஜாதி மனிதன் மேல் ஜாதிக்காரன்



குளிக்கும் குளத்தில் குளிக்கவோ, அத்தண்ணீரைக் குடிக்கவோ செய்யக்கூடாது போன்ற சமூக கொடுமைகள் இருந்தது. அம்பேத்கர் குளத்தில் தண்ணீர் எடுத்தார் என்பதற்காக தீட்டு கழிக்காமல் விடவில்லை நம் நாட்டு மேல்மக்கள்.

நாடார் சமுதாயமும் நம் பகுதிகளில், சமூகத்தில் ஒதுக்கப்பட்டார்கள். நம் குமரி மாவட்டத்தில் நாடார்கள் மேல்ஜாதி வீதிகளில் செல்வதானால் காலில் உள்ள செருப்பை கழற்றி போக வேண்டும். உணவு தண்ணீருக்குரிய இடங்களில் தனியாக வைக்கப்பட்டனர். நாடார் பெண்கள் மேல் சட்டைப்போட மறுக்கப்பட்டனர். முலைவரி என்ற வரி கொடுப்போர் மேல்சட்டை போடலாம் என்ற வழமை இருந்துள்ளது. ஆங்கிலேயர்களிடம் இதுபற்றி கிறிஸ்தவரான நாடார்கள் முறையிட ஆங்கிலேயர் அரசனை வேண்டி முலைவரி நீக்கப்பட்டது என்பது வரலாறு. நாடார்கள் உரிமைக்காகப் போராடியவர் முத்து குட்டிசுவாமி என்பது அகிலத்திரட்டு பார்த்தால் தெரியும்.

தீண்டாமை, நரபலி,பால்ய விவாகம், உடன்கட்டை ஏறுதல் ஆகியவை வட இந்தியாவில் இருந்தது. இதை முகலாய அரசர்கள் சூபி ஞானிகுதுபுல்ஹிந்த், காஜா முஹியினுத்தீன் ஜிஸ்தி போன்றோர் இதன் தீமையைக் களைய இஸ்லாமிய சட்டங்கள் மூலமும், நல் உபதேசங்கள் மூலமும் சமூகத்தில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தினர்.

காய்தல் உவத்தல் அகற்றி இந்நிகழ்வை ஆய்ந்தால் இஸ்லாமும், கிறிஸ்தவமும் இந்த நாட்டிலிருந்த சமூகக் கொடுமைகளை அகற்ற பெரும்பணி செய்துள்ளதை அறியலாம்.

**தொடர்**



# உச்ச நீதிமன்றத்தின் தாழ்ச்சியும், வீழ்ச்சியும்

**நீதிமன்ற அவமதிப்பு வழக்கு, உலக நீதி மன்றங்களில் நடந்து கொண்டிருப்பதென்ன?**


*ஆங்கிலம்:*
**திரு.பிரஷாந்த் பூஷன்,**
*மூத்த வழக்கறிஞர்,உச்சநீதிமன்றம்.*
**தமிழ் வடிவம்:**
**மு.குலாம் முஹம்மது,**
*ஆசிரியர்.வைகறை வெளிச்சம்.*


இந்தப் பகுதியில்,

மூத்த வழக்கறிஞர் பிரசாந்த் பூஷன் அவர்கள், உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்த, ஒரு ஆவணத்தின் தமிழ் வடிவத்தைப் பார்த்து வருகின்றோம்.

குறிப்பாக இந்தப் பகுதிகளில், நீதிமன்ற அவமதிப்பு என்பது என்ன? பொதுமக்களுக்கு, குடிமக்களுக்கு நீதிமன்றங்களை, நீதித்துறையை, உச்சநீதிமன்றத்தை விமர்சிக்கும் உரிமைகள் உண்டா? இல்லையா? என்பதைப் பற்றி பார்த்து வருகின்றோம். அதிலும் குறிப்பாக, நீதிமன்ற அவமதிப்பு என்பதை உலகநாடுகளின் நீதிமன்றங்கள் எப்படிப் பார்க்கின்றன என்பதை இந்தப் பகுதியில் பார்த்து வருகின்றோம்.


இந்தப் பகுதியில் வாசகர்கள் அதிகமாக கவனம் செலுத்திட வேண்டும், எனக் கேட்டுக்கொள்கின்றோம். காரணம், இங்கே நம் நாட்டில் நீதித்துறை இந்தக் காலகட்டத்தில் தரையிலே வீழ்ந்தது போல் இதற்கு முன்னால் தரம் தாழ்ந்ததில்லை.

எமர்ஜென்சி-நெருக்கடி காலம் என அறியப்படுகின்ற 74-76 வரை உள்ள காலகட்டத்தைத் தவிர..

உச்ச நீதிமன்றத்தின் மீது அல்லது நீதித்துறையின் மேல் மக்கள் விமர்சனங்களை அள்ளித் தெளித்தால், நீதிபதிகள் என்ன செய்திட வேண்டும் என்பதை, நீதிபதி அம்பார்டு அவர்கள் இப்படிக் கூறுகின்றார்கள்.

“விமர்சனங்கள் எங்களை (நீதிபதிகளை) எது சரி என நினைக்கின்றோமோ, அதைச் செய்வதிலிருந்து தடுத்திட இயலாது.”

ஒரு உண்மையை நாம் ஒத்துக்கொள்ள வேண்டும். நீதியை காலதாமதமாக வழங்கு வதாலும், தேவையான அளவுக்கு வழங்காத தாலும் நீதிமன்றத்தின் மீது குறைகள் கண்டு பிடிக்கப்படுகின்றன. குற்றங்கள் சாட்டப் படுகின்றன. சில அரசியல்வாதிகளின் ஊழல் மயமான குற்றச்சாட்டுகளும், தாறுமாறான பேச்சுக்களும், நீதித்துறையின் மதிப்பை குறைத்து விட்டன. அதுபோல் பல விவகாரங் களில், நீதிமன்றங்களால் எதுவும் செய்திட இயலவில்லை, இயலுவதில்லை. இதனால் நீதிமன்றம், நீதித்துறை இவை சில விமர்சனங்களை எதிர்கொண்டிட



வேண்டியதாயிற்று. இந்த விவகாரங்களில் மக்கள் நீண்ட நாட்கள் அமைதி காப்பார்கள் என எதிர்பார்ப்பதற்கில்லை.

அவர்கள் வெளிப்படுத்தத்தான் செய்வார்கள், நாம் அதைக் கேட்டுத்தான் ஆகவேண்டும், அமைதியாக! இந்தக் குறைகளையும், குற்றங்களையும் நீதிபதிகளும்,வழக்கறிஞர்களும் தங்களுக்குத் தாங்களே கேட்டுக் கொள்ள வேண்டும். நாம் நமக்குள்ளேயே இந்தக் கேள்விகளை கேட்டுக்கொள்ள வேண்டும். “தேடல்கள்” நமக்குள்ளேயே இருந்திட வேண்டும்.


(வெளியே ஆதங்கங்களை வெளிப்படுத்து பவர்களைத் தண்டிப்பதில் பொருளில்லை)

இவையெல்லாமிருந்தாலும் ஒரேயடியாக நீதித்துறையையும், நீதித்துறை மேற்கொள்ளும் நடைமுறைகளையும்,ஒரேயடியாக மட்டந் தட்டிப் பேசுபவர்களை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கவும் முடியாது, விமர்சனங்கள் தரம் தாழ்ந்தவையாக இருந்திடும்போது.

இந்த விவகாரம், Rama Dayal Markarha Vs State of Madya Pradesh என்ற வழக்கில் தெளிவாக்கப்பட்டிருக்கின்றது. நீதிமன்றம் வழங்கும் தீர்ப்புகள், பொதுவான ஆவணங்கள் அவற்றை யார் வேண்டுமானாலும் விமர்சிக்கலாம். அதேபோல் பொதுவெளியில் நீதிபதிகள் செய்வதையும் யார் வேண்டுமானாலும் விமர்சிக்கலாம். இவற்றையெல்லாம் நீதிமன்ற அவமதிப்பு என எடுத்துக்கொள்ள இயலாது.

பிரசாந்த் பூஷனின் “வாதங்கள்” (இன்ஷா அல்லாஹ்) தொடரும்..





# குழந்தைகளை ஆர்வப்படுத்துவதா? அவசரப்படுத்துவதா?

தேர்வுகள் நெருங்கிக் கொண்டிருக்கின்றன. நம் குழந்தைகள் அந்தத் தேர்வுகளைச் சந்திக்கத் தயாராகிக் கொண்டிருக்கின்றார்கள். ஒருவித தேர்வு ஜுரம், மன அழுத்தம் அவர்களைப் பீடித்துக் கொண்டிருக்கும். "டென்ஷன்" என்ற ஆங்கிலச் சொல்லைத்தான் மன அழுத்தம் என நாம் கூறுகிறோம். குழந்தைகள் மட்டும்தான் இந்த மன அழுத்தங்களுக்கு ஆளாகின்றார்கள் என்றில்லை.

பெற்றோர்களுக்கும் ஒருவித "டென்ஷன்" மன அழுத்தம். குழந்தைகளின் எதிர்காலத்தைப் பற்றிய கவலை பெற்றோர்களுக்கு! இதனால் அவர்களும் படி, படி என குழந்தைகளை நிர்பந்தப் படுத்துகிறார்கள்.

பெற்றோர்களின் "டென்ஷன்" மன அழுத்தம் அப்படியே குழந்தைகளின் மேல் விழும். பாடம் சொல்லித்தரும் ஆசிரியர்களுக்கும் ஒருவித அழுத்தம். அவர்களுக்கு அவர்களிடம் பயின்ற மாணவர்கள் எல்லோரும் தேர்ச்சி பெற வேண்டும், நல்ல மதிப்பெண்களைப் பெற்றிட வேண்டும் என்ற நல்ல கவலை, "டென்ஷன்" மன அழுத்தம்.

இந்த மன அழுத்தமும், இந்த டென்ஷனும் மீண்டும் குழந்தைகள் மீதே படிகின்றது. ஆய்வாளர்கள் ஓர் உண்மையைக் கண்டெடுத்துச் சொல்கின்றார்கள். "அது நடுநிலையான ஆர்வம், நடுநிலையான மன அழுத்தம் -டென்ஷன் - குழந்தைகளின் திறமைகள் வெளிப்பட வேண்டும்.

அதேபோல் நடுநிலையான ஆர்வம், நடுநிலையான மனநிலை குழந்தைகளை முன்னோக்கி இழுத்துச்செல்லும். அதனால் மிதமான அழுத்தம், ஆர்வம் இவை நல்லது.

இதற்கு நேர்மாறாக, மிதமிஞ்சிய அழுத்தம், எல்லை தாண்டிய ஆர்வம், டென்ஷன் இவை குழந்தைகளின் திறமைகளைப் பின்னுக்குத் தள்ளி விடும். குழந்தைகளின் திறமையைப் பின்னுக்குத் தள்ளுவது மட்டுமல்ல அவர்களின் அறிவுத்திறனை (Mental Power) பூட்டிப் போட்டுவிடும். இதனால் திறமையான குழந்தை கூட எதிர்பார்த்த அளவுக்கு மதிப்பெண்களைப் பெற இயலாமல் ஆகிவிடுகின்றது.

இதனால் சில நேரங்களில் என் பிள்ளையால் அதெல்லாம் முடியத்தானே செய்யும். அப்படியிருந்தும் எப்படிக் கோட்டை விட்டாள்? என அங்கலாய்க்கின்ற அளவுக்குத் தள்ளப் படுகின்றோம்.

அளவுக்கதிகமான ஆர்வமும், மன அழுத்தமும் குழந்தைகளை விரக்திக்கும் தள்ளிவிடும். விரக்தி பரிதாபமான முடிவுகளுக்கு இட்டுச் சென்றுவிடும். தற்கொலை போன்ற அனைவரையும் சோகத்தில் வீழ்த்தும் நிகழ்வுகள் நடந்து விடுவது இதனால் தான்.

இதனால் பெற்றோர்கள் குழந்தைகளை ஆர்வப்படுத்த வேண்டும், அவசரப்படுத்தக் கூடாது.

அளவுக்கு மிஞ்சிய மன அழுத்தங்களுக்கு அவர்களை ஆளாக்கிடக்கூடாது. தட்டிக்கொடுக்க வேண்டும். தளர்வுகளுக்கும் விரக்திக்கும் ஆளாக்கிடக்கூடாது.

குழந்தைகள் தாங்களாகவே சில அழுத்தங்களுக்கும், அவசரங்களுக்கும் ஆளாகிநிற்கும் இந்தத் தேர்வு நேரங்களில், அவர்களை அதிகமான அழுத்தங்களுக்கு ஆளாகிவிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

பெற்றோர்களும்,குழந்தைகளும் அதிகப்படியான மன அழுத்தங்களுக்கும், அவசரங்களுக்கும் ஆளானால் வீடு என்னவாகும் கலவரப் பூமியாகி விடாதா?

**மாணவர்கள் தங்கள் மனதை உற்சாகமாக வைத்துக் கொள்ள சில வழிகள்**

குழந்தைகள் தங்கள் நினைவாற்றலை நேர்த்தியாக வைத்துக்கொள்ள வேண்டும். அப்போதுதான் கேள்விகளுக்கான விடைகளைத் துல்லியமாகத் தரமுடியும்.

இதற்கு மனது சிறப்பாக (உஷாராக) செயல்பட வேண்டும். மூளை துடிப்போடு இயங்க, நல்ல பிராணவாயு தேவை. இதேபோல் "குளுக்கோஸ்" என்ற கால்சியம் சுண்ணாம்பு சத்து, இரும்புச்சத்து, பாஸ்பரஸ் போன்றவை மிகவும் அவசியம்.

குழந்தைகள் அமர்ந்து படிக்கும், இடங்கள் போதிய அளவு காற்றோட்டம் உள்ளவையாக இருக்க வேண்டும்.

உங்கள் உணவில் பால், கோதுமை, பச்சைக் காய்கள் போதிய அளவு மீன், கோழி போன்றவை கலந்திருக்க வேண்டும்.

தேர்வுகளின் போதும், அதற்காகப் படிக்கும் போதும், குழந்தைகள் காலை உணவை வேண்டாம் என்று சொல்லி உதறித் தள்ளிவிட்டுவிட முயற்சிப்பார்கள் இந்த விபரீதம் நடந்து விடாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

"Breakfast is Brain Food" காலை உணவு மூளையின் உணவு என்ற பழமொழியை மறந்துவிடாதீர்கள்.

வயல் காய்ந்து, வறுமை வாட்டி எடுக்கும்போது வயிறு காயாமல் பார்த்துக் கொள்ளுங்கள் எனச் சொன்னால் அது மாடிவீட்டுச் சிந்தனை எனச் சொல்வார்கள் நம்மவர்கள்.

"பட்டினிக்கிடந்து படித்தவர்கள்தான் பண்டிதரானார்கள்" என்றொரு பழமொழியை அவர்கள் நமக்குப் பதிலாக வைத்திருப்பார்கள்.

மன்னிக்கவேண்டும்! தேர்வு நேரங்களில் சற்று உணவு தந்து அனுப்புவது நல்லது. அஃதோர் போர்க் களம், அதில் இறுதிவரை நின்று அவர்கள் ஓர் பேனா முனை போரை நடத்த வேண்டும் என்பதை நினைவு கூறுங்கள்.

ஆனால் சற்று கவனமாக இருக்க வேண்டும். சற்று ஒரேயடியாக உணவை ஊட்டி உறங்க வைத்து விடாதீர்கள்.

உணவில் எப்போதும் நிதானம் வேண்டும்!

இதனை இறைவன் இப்படி அறிவுறுத்துகின்றான்:

ஆதமுடைய மக்களே! தொழும் இடத்திலெல்லாம் (ஆடைகளினால் உங்களை அலங்கரித்துக் கொள்ளுங்கள். நீங்கள் புசியுங்கள், எனினும் அளவுகடந்து செலவு செய்யாதீர்கள். நிச்சயமாக அல்லாஹ், அளவுகடந்து செலவு செய்பவர்களை நேசிப்பதில்லை.(அல்குர்ஆன் 7: 31)

இறைவனின் இறுதித்தூதர் முஹம்மது(ஸல்) அவர்கள் சொன்னார்கள்:

"ஆதமுடைய மகன் நிரப்பும் பாத்திரங்களில் அவனது வயிற்றை விட மோசமான பாத்திரமில்லை. அவன் அதை நிரப்பினால் மூன்றில் ஒரு பகுதியை உணவால் நிரப்பட்டும், பிரிதோர் பகுதியை (மூன்றில் மற்றொரு பகுதியை) தண்ணீரால் நிரப்பப்படும். மற்றொரு பகுதியை காற்றுக்காக விட்டுவிடட்டும்." (ஷஹீஹ் ஹஸன் : அஹ்மத், திர்மிதி)

இஸ்லாமிய ஆட்சித் தலைவர் உமர்(ரலி) அவர்கள் சொன்னார்கள்:

"உணவு,பணம் இவற்றைக்கொண்டு உங்கள் வயிறுகளை நிரப்புவதில் கவனமாக இருங்கள். அதிக உணவு உடலுக்கு ஊறுவிளைவிக்கும், நோய்களைக் கொண்டு வரும், சோம்பலை உருவாக்கும். இறை வணக்கங்களைத் தடுக்கும். உண்பதிலும், பருகுவதிலும் நிதானமாக இருங்கள். அது உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும், விரயங்களைத் தடுக்கும்."(ஹன்சுல் அம்மால்)

ஆக உணவு உண்ணவேண்டும் அதில் நிதானமும் வேண்டும். மனதை ஒருமுகப்படுத்துங்கள் அது நினைவாற்றலை வளர்க்கும்.

ஏழு அல்லது எட்டு மணி நேரம் நிச்சயமாக தூங்குங்கள். அது மூளை சுறுசுறுப்பாக இயங்க அவசியம் தேவை.

நல்லதை நினையுங்கள் நல்லதே நடக்கும். நன்றாக எழுதுங்கள் என உற்சாகப்படுத்துங்கள்.

தேர்வு முடிவும்,விளைவும் என்னவாகிவிடுமோ எனப் பதற்றம் வேண்டாம். செய்வதை நன்றாகச் செய்யுங்கள். தேர்வை நன்றாக எழுதுங்கள், முடிவை இறைவனிடம் ஒப்படையுங்கள் என நம் மழலைகளுக்குச் சொல்லிடுவோம்.

2030ல் நமது குழந்தை என்னவாக இருக்க வேண்டுமென்பதை இப்போதே எண்ணிப் பாருங்கள்.

இன்ஷா அல்லாஹ்!

**-MGM.**

# NIA/UAPAக்கு எதிரான மக்கள் இயக்கம்



மாண்புமிகு திரு.

# தீபக் குப்தா

உச்சநீதிமன்ற நீதிபதி(ஓய்வு)

# அவர்களின் உரை

இன்றைய விவாதத்தின் முக்கியக் கருத்து சனநாயகம், கருத்து மாறுபாடு மற்றும் கருப்பு சட்டங்கள் என்பதாகும். சனநாயகத்தில் கருத்து வேறுபாடு என்பது அத்தியாவசியமானது. ஆனால் கருப்பு சட்டங்களுக்கு சனநாயகத்தில் இடமில்லை.

சமீப காலங்களில் குறிப்பாகக் கடந்த சில வருடங்களாக அரசுக்கு எதிராகக் கருத்து கூறுபவர்களின் குரல்வளையை நெறிக்கவும், அரசை எதிர்த்துக் கேள்வி கேட்பவர்களை அடக்குவதற் காகவும் மட்டுமே சட்டங்களை தவறாக பயன் படுத்தும் நிலையைக் கவனிக்க நேர்கிறது. அதன் காரணமாகவே இங்கு நான் பேச விழைகிறேன்.

இப்படிப்பட்ட சூழ்நிலை, மிகுந்த வேதனை அளிப்பதாக உள்ளது. மாண்புமிகு.நீதிபதி ஆலம் அவர்கள் ஊபாச் சட்டத்தின்கீழ் புனையப்பட்ட வழக்குகளின் புள்ளி விவரங்களுடன், மிகச்சிறப்பான ஒரு பகுப்பாய்வை செய்துள்ளார். என்னைப் போலன்றி சிறந்த பேச்சாளரான நீதிபதி திரு.கௌடா அவர்கள் பல்வேறு நீதிமன்றத் தீர்ப்புகளைச் சிறப்பாகப் பகுப்பாய்வு செய்துள்ளார்.

நான் முதலில் அரச துரோகம் பற்றிப் பேச விரும்புகிறேன்.ஒரு சனநாயக நாட்டில் அரசதுரோகம் எனும் கருத்தாக்கம் சனநாயகத்திற்கு ஒவ்வாதது. ஏனெனில் சனநாயகத்தில் அரசை எதிர்த்துக் கேள்வி கேட்கும் உரிமை ஒவ்வொரு குடிமகனுக்கும் உள்ளது.

உண்மையிலேயே பிரிட்டிஷ் ஆதிக்கத்தின் கீழ் இந்தியா இருந்தபோது அவர்களுடைய ஆதிக்கத்திற்கு எதிராக எவரும் கேள்வி கேட்கக்கூடாது என்பதற்காக உருவாக்கப்பட்ட சட்டமே "அரசு துரோகம்" என்னும் குற்றம். எனவேதான் இந்தச் சட்டப்பிரிவின் வார்த்தைகள் அரசுக்கு எதிரான வெறுப்போ அவமரியாதையோ அல்லது நிந்தனையோ எதை ஏற்படுத்தினாலும் அது அரசதுரோகம் என்று வரையறுக்கிறது. ஆனால் இதுகுறித்து நான் மகாத்மா காந்தியின் வார்த்தைகளைவிட மேலதிகமாக எதையும் கூறிவிட முடியாது என்று கருதுகிறேன்.

ஒரு நபருக்கு ஓர் அமைப்பின் மீதோ அல்லது தனி நபர் மீது பற்று இல்லை என்றாலோ அல்லது கண்டிக்க வேண்டும் என்று கருதினாலோ அவர் தன்னுடைய கருத்தை முழுமையாக வெளிப்படுத்தவும், தனது பற்றற்ற நிலையைத் தெரிவிக்கவும் முழுமையான சுதந்திரம் இருக்க வேண்டும்.

அதாவது அந்தச் சுதந்திரம் வன்முறையைத் தூண்டுவதாகவோ அல்லது வன்முறை வளர்ப்பதாகவோ இல்லாமலிருந்தால் பற்றற்ற தனது கருத்தை அல்லது வெறுப்பை வெளிப்படுத்த அவருக்கு முழு சுதந்திரமும் இருக்க வேண்டும். ஆனால் கெடுவாய்ப்பாக, சில ஆண்டுகள் முன்பு வரை கூட அரசுக்கு எதிராகக் கோபத்தையோ, வேறுபாடான கருத்தையோ ஏற்படுத்தும் விதமாக எதைக் கூறினாலும் அது அரச துரோகம் என்றே கருதப்பட்டது.

ஆனால் இந்தியாவின் தலைமை நீதிபதியாக இருந்து பின்னர் தில்லி பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகவும் பணியாற்றிய சர் மாரிஸ் காயர், எந்த ஒரு எதிர்க்கருத்தும் வன்முறையைத்

தூண்டுவதாக அல்லாமல் இருந்தால், அது அரசதுரோகம் இல்லை என்று கூறினார். ஆனால் கெடுவாய்ப்பாக அவருடைய தீர்ப்பைப் பிரித்தானிய பிரிவின் கவுன்சில் மாற்றியமைத்தது.

இறுதியாக 1962இல் உச்ச நீதிமன்றத்தின் ஐந்து நீதிபதிகள் அடங்கிய அமர்வு கேதர்நாத் வழக்கில் அரச துரோகம் என்றால் என்ன என்பது குறித்து மிகத் தெளிவான வரையறையை அளித்தது. மாறாக, உங்களது செயல்பாடுகள் எடுத்துக் காட்டாக திஷா ரவியைப்போல விவசாயிகள் போராட்டத்தில் கலந்து கொள்வது போன்ற செயல்கள் "அரசு துரோகமாகாது".

இந்த அரச துரோகச் சட்டத்தை முறை தவறிப் பயன்படுத்துவதே ஒரு பிரச்சனையாக இருக்கிறது. ஏனெனில் சனநாயகத்தின் அடிப்படையான, அதிகாரத்தை எதிர்த்துக் கேள்வி கேட்பவர்களின் குரல்வளையை நெறிப்பதற்காக இச்சட்டத்தை பயன்படுத்துவதுதான் பிரச்சனை. நீங்கள் என்னுடன் ஒத்துப்போகாமல் இருக்கலாம் நான் உங்களுடன் ஒத்துப்போகாமல் இருக்கலாம். ஆனால் நாம் இருவரும் ஒத்துப் போகாமல் இருப்பதை அமைதியான முறையில் ஏற்றுக் கொள்ள வேண்டும். இரண்டு விதமான பார்வைகள் இல்லாமல் எப்படி ஒரு சனநாயகப் பூர்வமான விவாதம் நடக்கும்? இன்றைக்குக்கூட நான் எனக்கு எதிரான கருத்துக்களை முன்வைக்கும் பேச்சாளர்களின் குரலைக் கேட்கவே விரும்புகிறேன்.

இருப்பினும் மீண்டும் மீண்டும் அரச துரோகச் சட்டம் தவறாகப் பயன்படுத்தப்படுவது மிகத் தெளிவாகப் புலனாகிறது. சமீபத்தில் கூட உச்ச நீதிமன்ற நீதிபதி திரு.லலித் அவர்கள் வினோத் வழக்கில் அரச துரோகம் என்பதைப் பற்றி தெளிவுபடுத்தி இருக்கிறார்.

ஆனால் இதுபோன்று தெளிவுகளும் விளக்கங்களும் எத்தனை வந்தாலும், காவல்துறை இச்சட்டத்தை முறைகேடாக பயன்படுத்தியே வருகிறது என்று கருதுகிறேன். உச்சநீதிமன்றம், தகவல் தொடர்பு சட்டப்பிரிவு 66A என்பது அரசியல் சாசனத்தின் அடிப்படை உரிமையான பேச்சு சுதந்திரத்திற்கு எதிராக இருக்கிறது என்று ஸ்ரேயா சிங்கா வழக்கில் 66A வை ரத்து செய்து ஆணை பிறப்பித்த பின்பும் இன்று வரை நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான வழக்குகள் இச்சட்டப்பிரிவின் கீழ் பதிவு செய்து வருகிறார்கள். என்னுடைய பார்வையில், வன்முறையைத் தூண்டுவது என்றால் வழக்கில் அரச துரோகம் என்று குதிரைக்கு கடிவாளம் கட்டியது போல குறுகிய பார்வையிலேயே பார்க்கிறார்கள்.

வன்முறையைத் தூண்டும் குற்றத்திற்கு எதிராக இன்று ஊபா போன்ற பல்வேறு சட்டங்கள் வந்து விட்டன. எனவே என்னுடைய தனிப்பட்ட பார்வையில் நமது சட்டப் புத்தகங்களில் அரச துரோக குற்றத்தை இன்னும் வைத்திருக்க வேண்டிய தேவையே இல்லை என்று கருதுகிறேன்.

இந்தச் சட்டத்தை உடனடியாக ரத்து செய்ய வேண்டும். ஆனால் உச்சநீதிமன்றம் வேறுவிதமாக கருதினால், அதைத் தொடர்ந்து நடைமுறையில் வைத்திருப்பதன் பொருட்டு சில பாதுகாப்புகளை ஏற்படுத்த வேண்டும்.

1974ல் திருமதி. இந்திராகாந்தி இதைக் கைது செய்யக்கூடிய ஒரு குற்றமாக மாற்றினார். எனவே 74 க்கு முன்பு இருந்ததைப் போல இக்குற்றம் கைது செய்யப்பட வேண்டிய ஒரு குற்றமல்ல என்ற நிலையைக் கொண்டுவர வேண்டும். ஏனெனில் தொடர்ந்து இச்சட்டம் மென்மேலும் கடுமையானதாக ஆகிவருகிறது.

ஒரு அரச துரோக வழக்கில் ஒரு காவல் அதிகாரி ஒரு நபரைக் கைது செய்வதற்கு ஒரு வாரண்ட் கூட தேவைப்படுவதில்லை. எங்கோ ஹிமாச்சல பிரதேச மாநிலத்தில் உட்கார்ந்துகொண்டு தில்லியில் இருக்கும் ஒரு பத்திரிக்கையாளர் மேல் அரச துரோக வழக்குப் பதிவுசெய்து குற்றச்சாட்டை வனைகிறார்கள். இச்சட்டம் ரத்து செய்யப் பட்டாலோ அல்லது அரசமைப்புச் சட்டத்திற்கு எதிரானது என்று தீர்ப்பளிக்கப்பட்டாலோ நான் கூடுதலாக மகிழ்ச்சியடைவேன். அதுவரை இச்சட்டத்தைப் பயன்படுத்துவதில் சில பாதுகாப்பு நிபந்தனைகள் இருப்பது அவசியம். தொடர்ந்து இச்சட்டம் மென்மேலும் கடுமையானதாகிக் கொண்டே வருகிறது.

இது ஒரு எதிரொலி கேட்கும் களமாகத் தோன்றுகிறது. உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி கருத்துத் தெரிவித்துள்ள இந்த நேரத்தில், இதுபோன்ற வழக்குகள் பிரிவு 124A இன் கீழ் புனையப்பட்டால் அவ்வழக்கு அரசமைப்புச் சட்டத்துக்கு விரோதமானது என்று அறிவிக்கக் கூடிய தருணம் வந்துவிட்டது என்றே கருதுகிறேன்.

ஊபா வழக்குகள் பற்றி நான் பேச விழையும் போது, இது குறித்து விவாதிக்கும்போது, ஒரு முன் எச்சரிக்கையுடன் தொடங்க வேண்டும் என்று கருதுகிறேன். நான் பயங்கரவாத நடவடிக்கை களுக்கு எதிராக ஒரு சட்டம் தேவையில்லை என்று

கூறவரவில்லை. ஆனால் பயங்கரவாத நடவடிக்கைகள் என்பது குறித்துத் தெளிவான வரையறை நமக்குத் தேவை. மாறாக, ஊபாச் சட்டத்தில் காணப்படுவது போல குழப்பமான அல்லது வரையறைக்குட்படாத "பயங்கரவாத நடவடிக்கைகள்" என்று எதுவும் இருக்க முடியாது. இதனால் பலபேர் இச்சட்டத்தில் சிறைப்படுத்தப் படும்போது, காவல்துறையினருக்கு இவை ஊபாச் சட்ட வரையறைக்குள் வராது என்பது தெரியும். ஆனால் அவர்கள் ஊபாச் சட்டத்தின் பல பிரிவு களுக்குக் கீழான குற்றச்சாட்டுகளைச் சேர்க்கும் போது நீதிமன்றங்கள் பிணையில் விடத் தயங்கும் என்பதும் அல்லது நீதிமன்றங்கள் பிணையில் விட முடியாது என்பதும் தெரியும்.

அண்மையில் முகமது இலியாஸ், இர்பான் ஆகியோர் NIA நீதிமன்றத்தால் 12 ஆண்டுகளுக்குப் பிறகு விடுதலை செய்யப்பட்டதும், ஊபாச் சட்டத்தின் கீழ் சூரத்தில் குற்றம் வனையப்பட்ட 122 பேர்களும் 20 ஆண்டுக் காலத்திற்குப் பிறகு விடுதலை செய்யப்பட்டதும் மிகுந்த வேதனை அளிப்பதாக உள்ளது.

நடாஷா நாவால் பிணையில் விடுவிக்கப்பட்டார். ஆனால் அவர் சிறையில் இருந்த காலத்தில் அவருடைய தந்தை காலமாகிவிட்டார். அதேபோல் சித்திக் கப்பனின் தாயார் அவர் சிறை பட்டுள்ள காலத்தில் இறந்துவிட்டார். 84 வயதான அருட்தந்தை ஸ்டேன் சுவாமிக்குப் பிணை கிடைக்கவில்லை.

நாமெல்லாம் மானுட பிறவிகள் தானா? நாம் இதுபோன்று வயதான, தளர்வுற்ற, நோயுற்ற மனிதனுக்குப் பிணையை மறுக்கும் அளவு மனிதத் தன்மையை இழந்து விட்டோமா?

பொதுவாகப் பிணையை மறுக்கக் கூடிய பிரிவு 43D மற்றும் 43E இருந்தபோதிலும் உச்சபட்ச நீதிமன்றத்தின் அதிகாரத்தைப் பயன்படுத்தி இதுபோன்றவர்களுக்குப் பிணை வழங்கப் பட்டிருக்க வேண்டும். மும்பை உயர் நீதிமன்றம் அவருக்கு சிறையில் தேவைப்பட்ட சிகிச்சையை அளிப்பதை உறுதிப்படுத்தியது என்பதில் சந்தேகமில்லை. ஆனால் ஏன் விடுவிக்கவில்லை? அவர் ஓடி ஒளியவோ அல்லது இந்த நாட்டை விட்டு வெளியேறிடவோ போவதில்லை. சட்டத்தில் பிணைக்குப் பொருள்தான் என்ன?

ஒரு நபர் பிணையில் விடுவிக்கப்பட்டால் அவர் சாட்சியங்களைத் தனக்குச் சாதகமாகத் தூண்டக் கூடாது என்பதும், சட்டத்தின் பிடியிலிருந்து தப்பி விடக்கூடாது என்பதும் தானே இதன் அடிப்படை? ஸ்டேன் மற்றும் பிறருக்குப் பிணை வழங்கும்போது நீதிமன்றத்திற்கு இதற்குத் தேவையான நிபந்தனைகளைப் போடப் போதுமான அதிகாரம் உள்ளது. ஆனால் ஊபாச் சட்டப்பிரிவு 44Dயும், வட்டாலி வழக்கின் தீர்ப்பும் இதற்குத் தடையாக உள்ளது. ஆனால், நஜீப் வழக்கில் இதுபோன்ற சட்டப்பிரிவுகள் மூலம் உச்ச நீதிமன்றத்தின் அதிகாரத்தை நீர்த்துப்போகச் செய்ய இயலாது என்று மூன்று நீதிபதிகள் அடங்கிய அமர்வு கூறிய கருத்தையும், பரந்த பார்வையுடன் இதை அணுகியதையும் நன்றியறிதலோடு பார்க்க வேண்டும். ஆனால் இது இன்னும் குழப்பமான நிலையில் நம்மை வைத்துள்ளதா அல்லது இந்த 3 நீதிபதிகள் அமர்வின் கருத்து, நீதிபதிக்கு நீதிபதி மாறுபடுமா என்பதை என்னால் தெளிவாகக் கூற இயலவில்லை. ஒரு சட்டப் பிரிவு பிணையில் விடக்கூடிய உச்சநீதிமன்றத்தின் அதிகாரத்தைப் பறிப்பதாக இருக்குமானால் அல்லது நீதிமன்றத்தில் சீராய்வு அதிகாரத்தை மறுப்பதாக இருக்குமானால் அது அரசமைப்புச் சட்டத்திற்கே விரோதமானது என்பதே என் கருத்தாகும்.

நீங்கள் (NDPS) போதை மருந்துகள் சட்டத்தில் இருப்பது போல நிபந்தனைகளை விதிக்கலாம். ஆனால் இங்கு பிரிவு 173 கீழான காவல் துறை அறிக்கையில் இருக்கும் அனைத்தையும் நம்ப வேண்டும் என்ற நிலை இருக்கிறது. அவ்வாறு காவல் அதிகாரியின் 173 அறிக்கையை அப்படியே உண்மை என்று கருதினால் பிணை தருவது என்பதே சாத்தியமில்லை.

காவலராக உள்ள எவரும் தங்களுடைய பிரிவு173 அறிக்கையில், வழக்குக்கு முகாந்திரம் உள்ளது என்பதையே கூறுவார் என்பதை நாம் உணர வேண்டும்.தில்லி உயர்நீதிமன்ற நீதிபதி பம்பானி அவர்களின் தீர்ப்பு இந்த விசயத்தைப் பொறுத்த மட்டில் குறிப்பிடத்தக்கது. அதில் ஊபாச் சட்டத்தின் கீழ் வழக்குப் போட எந்தச் சட்ட முகாந்திரமும் இல்லை. ஆகவே நீதிமன்றம் பிரிவு 43D படி பரிசீலிக்க எந்தத் தேவையும் இல்லை.

எந்த பயங்கரவாதச் சம்பவமும் நடைபெறவில்லை என்பதால் ஊபாவின் கீழ் வழக்கே வராது என்று தில்லி உயர்நீதிமன்றம் கூறியுள்ளது. அவர்கள் CAA விற்கு எதிராகச் சாலை மறியலில் ஈடுபட்டார்கள் என்பதால் பயங்கரவாதச் சட்டத்திற்குக் கீழ் வழக்கு தொடுப்பது என்ற கேள்விக்கே இடமில்லை என்றும் கூறியுள்ளது. எனவே ஊபா போன்றதொரு சட்டம் தற்போது இருக்கும் விதத்தில் சட்டப் புத்தகங்களில் இருக்கக்கூடாது என்பதே எனது கருத்தாகும். இந்த நாட்டில் பயங்கரவாதத்திற்கு

எதிராக ஒரு சட்டம் தேவையா என்று கேட்டால் நான் கோஃபி அண்ணன் அவர்களை மேற்கோள் காட்டலாம். அதைக் காட்டிலும் நான் லால் பகதூர் சாஸ்திரி அவர்கள் கூறியதை நினைவு கூற விழைகிறேன்.

அவர், நாகலாந்து, மணிப்பூர் பிரச்சனைகளைக் கையாளுவதற்குத் தனக்கு இதுபோன்ற சட்டங்கள் தேவையில்லை என்றும், தான் அவர்களிடம் நேருக்குநேர் பேசி இப்பிரச்சனைகளைக் கையாள முடியும் என்றும் கூறினார். எனவே நாம் பயங்கரவாதம் இல்லை என்று கூறி நம் கண்களை மூடிக்கொள்ள இயலாது. உண்மையில் சர்வதேச அளவிலுள்ள பயங்கரவாதம் என்பது நம் அனைவருக்கும் கவலையளிப்பதாக உள்ளது. எனவே நான் பயங்கரவாதத்திற்கு எதிராக சட்டமே தேவையில்லை என்று கூறமாட்டேன். மாறாகச் சட்டம் மிகச் சரியாக புரிந்து கொள்ளப்பட வேண்டும் என்று கூறுகிறேன். இச்சட்டம் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு எதிராக மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். இந்த சட்டம் முறைகேடாகப் பயன்படுத்தப்படாமல் இருக்கும் விதத்தில் இச்சட்டம் உருவாக்கப்பட வேண்டும்.

இதுவரை, நீதிமன்றங்களில் இதுபோன்ற சட்டங்கள் அரசமைப்புச் சட்டத்தின் பாற்பட்டதா, இல்லையா என்ற விசயத்தை வரையறுக்கும் நேர்வுகளில், அச்சட்டம் முறைகேடாகப் பயன் படுத்தப்படுவதற்கும் வாய்ப்புள்ளதாக இருக்கும் என்று கருதினால் அச்சட்டத்தை ரத்து செய்ய இயலாது. மாறாக தவறாக பயன்படுத்துவதை சரிசெய்யும்படியும், சட்டத்தை முறையாக அமல் படுத்தும்படியும் கூற வேண்டியுள்ளது. இதுபோன்ற சட்டங்கள் அன்றாடம் தவறாக பயன்படுத்தப் படுவதை நீதிமன்றத்தின் முன் நிரூபிக்கும்போது அதை முறையாக நடைமுறைப்படுத்தும் படி கூற வேண்டியுள்ளது. ஆனால் இப்படிப்பட்ட சட்டக் கருதுகோள்களை மறுபரிசீலனை செய்ய வேண்டியுள்ளது என்று நினைக்கிறேன்.

NSA என்ற அரச பாதுகாப்புச் சட்டத்தை எடுத்துக் கொள்வோம். ஒருவர் கோவிட் பெருந்தொற்றை மாட்டுச் சிறுநீர் மூலம் குணப்படுத்த முடியாது என்று சொன்னதற்காக NSA வில் கைது செய்யப் பட்டு, சிறையில் தள்ளப்பட்டிருக்கிறார். நாம் ஒரு எதேச்சதிகாரமான போலீஸ் ராஜ்ஜியத்தில் வாழ்கிறோமா? இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு, நீதிமன்றங்கள் ஏற்கனவே அளித்த தீர்ப்புகளைக் கூட மீள் பரிசீலனை செய்ய வேண்டும். இதுபோன்ற சட்டங்கள் அரசமைப்புக்கு உட்பட்டதா என்ற கேள்வி, நீதிமன்றத்தின் முன்னர் எழுப்பப்படும்போது உச்சநீதிமன்றம் தனது அதிகாரத்தை உறுப்பு 142 மூலம் பயன்படுத்த வேண்டும்.

மேலும் விசாகா வழக்கில் அளித்த வழிகாட்டுதல் கட்டளைகளைப் போல, ஊபாச் சட்டத்தின்கீழ் வழக்கு தொடுப்பதற்கு முன்பு கடைபிடிக்க வேண்டிய வழிகாட்டுதல்களை உருவாக்க வேண்டும்.

இவ்வழக்குகளுக்கு ஒரு சீராய்வுக் குழு உள்ளது. நம் அனைவருக்குமே இந்தக்குழு என்ன செய்யும் என்பது தெரியும். இந்தக் குழு 2800 பக்கங்களை ஒரே இரவில் படித்து முடித்து அடுத்த நாளே வழக்குப் போடுவதற்கு ஒப்புதல் அளிக்கிறது. இந்நிலையில் சட்டத்திற்குப் புறம்பான முறையில் சிறைப்படுத்தப்பட்டது என்று பின்னர் தீர்மானிக்கப்பட்டால், அவர்களுக்கு இழப்பீடு வழங்கப்பட வேண்டும்.

ஏற்கனவே மேற்கூறியபடி மணிப்பூரைச் சேர்ந்த திருவாளர் கைது செய்யப்பட்டது போன்ற நேர்வுகளில் நீதித்துறை நடுவர் இழப்பீட்டைத் தீர்மானித்து அதை வழங்க உத்தரவிட வேண்டும். இப்படித் தரப்படும் இழப்பீட்டை, பொய் வழக்குப் போட்ட அதிகாரியின் சொந்தப் பணத்திலிருந்து தரும்படி உத்தரவிட வேண்டும். அப்போதுதான் இதுபோன்ற நேர்வுகளில் அவர்கள் தங்களுக்கு அரசியல் ரீதியாக வரும் அழுத்தங் களுக்கும், கட்டளைகளுக்கும் இணங்குவதற்கு இருமுறை யோசனை செய்வார்கள்.

நீதிமன்றங்களும், இதுபோன்று பாதிக்கப்பட்ட மக்களிடம் கடுமை காட்டாமல், சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அதிகார அமைப்புகளிடம் கடுமையாக நடந்துகொள்ள வேண்டும்.

தற்போது நாட்டுப்பற்று என்ற பெயரில் குறுகிய தேசியவாதக் கண்ணோட்டத்தின் அடிப்படையில் ஊபாச் சட்டத்தை முறைகேடாகப் பயன் படுத்துவதை பார்க்க முடிகிறது. ஆனால் நாட்டிற்கு எதிரான நடவடிக்கைகளுக்கு மட்டுமே இந்த ஊபாச் சட்டம் பயன்படுத்தப்பட வேண்டும்.

மாவட்ட நீதிமன்றங்கள் இதுபோன்ற சட்டங்களில் பிணையில் விடுவிக்கும்போது சமூக வலைதளங்களில் வரக்கூடிய எதிர்வினைகள் குறித்துக் கவலை கொள்கின்றன. எனவே உயர் நீதிமன்றங்களும், உச்ச நீதிமன்றமும் முன்னோடி களாக இருந்து வழி நடத்த வேண்டும் என்று கருதுகிறேன்.

இந்த நீதிமன்றங்களுக்கு இருவிதமான பணிகள் இருப்பதாக நான் கருதுகிறேன். ஒன்று, நீதிமன்றங்களில் வழக்குகளில் உத்தரவுகளை பிறப்பிக்கும் பணி. மற்றொன்று குடிமக்களின் மனித உரிமைகளை காக்கும் பணி. உலகம் முழுவதிலும் அடிப்படை உரிமைகளுக்காக உறுப்பு 32ன் மூலம் நேரடியாக உச்சநீதிமன்றத்தை அணுகும் உரிமையை அடிப்படை உரிமையாகக் கொண்டிருக்கும் வெகுசில அரசமைப்புச் சட்டங்களுள் இந்திய அரசமைப்புச் சட்டமும் ஒன்றாகும்.

எனவே அடிப்படை உரிமைகளுக்கும், நீதிமன்றத்திற்கும் நமது அரசமைப்புச் சட்டத்தின் சிற்பிகள் கொடுத்த முக்கியத்துவத்தை மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும், உரிமைகள் பறி போகும்போது உரிமைகளுக்குப் போராடுவதற்கு இந்த நீதிமன்றங்களுக்குக் கடமையும், பொறுப்பும் உள்ளது என்பது புலனாகிறது.

இவை எல்லாவற்றையும் இணைத்து, ஒட்டுமொத்தமாக நாம் செய்ய வேண்டியது என்ன என்று பார்க்கும்போது எந்தெந்த சட்டங்கள் தெளிவான வரையறைகளை கொண்டிருக்க வில்லையோ, அவையெல்லாம் ரத்து செய்யப்பட வேண்டும் அல்லது நீதிமன்றங்களால் அச்சட்டத்தின் தெளிவற்ற தன்மைகள் நீக்கப்பட வேண்டும். அதாவது இன்னின்ன நடவடிக்கைகள் உட்பட்டவை என்றும் இன்னின்ன நடவடிக்கைகள் சட்டத்திற்குப் புறம்பானவை என்றும் நீதிமன்றங்கள் தெளிவுபடுத்த வேண்டும்.

இந்த ஊபா மற்றும் அரச விரோதச் சட்டம் ஆகியவற்றில் உள்ள தெளிவற்ற நிலைதான் இச்சட்டங்களைக் காவல்துறையினர், மக்கள் மீது ஏவி சிறையில் தள்ளப் பயன்படுகின்றது. இன்று வரை கூட சில நீதிபதிகள் எது அரச விரோதம் எது பயங்கரவாதம் என்பதையே புரிந்து கொண்டவர்களாக இல்லை. இதை நான் கடந்த 40 ஆண்டுகளாகச் சட்டத்துறையில் இருப்பதால் வேதனையோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

தற்போது தில்லி உயர்நீதிமன்றம் அளித்துள்ள மிகச் சிறப்பான தீர்ப்பு என்பது குறித்துப் பெருமகிழ்ச்சியடைகிறேன். இது ஊபா வழக்குகளில் பிணையில் விடும் அணுகுமுறையைக் குறித்து மிகச்சிறப்பாக ஆராய்ந்து எழுதப்பட்ட தீர்ப்பு என்று கருதுகிறேன்.

காவல் சித்திரவதைகளுக்கு எதிரான கூட்டியக்கம் -தமிழ்நாடு-புதுவை வெளியிட்ட, "கொடுங்கோன்மைச் சட்டங்களுக்கு எதிரான நீதியின் குரல்' நூலிலிருந்து.


**எது முதலில்** என்பதை அறிந்து கொள்ள வேண்டிய அவசியத் தேவை இப்போது அவசரத்தேவையாகியிருக்கிறது...




₹ 380

கொரியர் கட்டணம் தனி

வேர்கள் பதிப்பகம் Vergal Publications 8148129887

# கொடிக்கால் ஷேக் அப்துல்லா அவர்களின் எல்லைப் போராட்ட தொகுப்பு "திரு தமிழகம் - போராட்ட வரலாறு" நூல் வெளியீடு




கன்னியாகுமரி மாவட்டம் தமிழகத்துடன் இணைந்த நவம்பர் முதல் தேதி சென்னை தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் திரு மு.க.ஸ்டாலின் அவர்கள் எல்லைப் போராட்ட தியாகி கொடிக்கால் ஷேக் அப்துல்லா அவர்களை கௌரவித்து ஒரு லட்சம் ரூபாய் பொற்கிழி வழங்கி பாராட்டினார்.

அதே நிகழ்வில் கொடிக்கால் ஷேக் அப்துல்லா அவர்களின் எல்லைப் போராட்ட தொகுப்பு "திரு தமிழகம் - போராட்ட வரலாறு" புத்தகத்தையும் முதல்வர் அவர்கள் வெளியிட்டு பெருமை சேர்த்தார்.

தமிழக முதல்வர் வெளியிட்ட "திரு தமிழகம் போராட்ட வரலாறு" புத்தகம் அறிமுகக் கூட்டம் நவம்பர் 21ம் தேதி நாகர்கோவிலில் நடந்தது. குமரி மாவட்ட கூடுதல் அரசு வழக்கறிஞர் மதியழகன் தலைமை தாங்கினார்.



கணபதிபுரம் அன்னவிநாயகா கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த கனகசபாபதி, சிவதாணுபிள்ளை முன்னிலை வகித்தனர்.

உத்தமபாளையம் ஹாஜி கருத்த ராவுத்தர் கல்லூரியில் பணியாற்றி ஓய்வு பெற்ற பேராசிரியர் மு.அப்துல் சமது, நாகப்பட்டினம் சட்டமன்ற உறுப்பினர் ஆளூர் ஷானவாஸ் ஆகியோர் புத்தகம் குறித்து உரையாற்றினர்.

கொடிக்கால் ஷேக் அப்துல்லா அவர்கள் ஏற்புரையாற்றினார்..

புத்தகத்தின் பதிப்பாளரும், திருவிதாங்கோடு ஆக்ஸ்போர்டு ஸ்கூல் தாளாளருமான எம்.எஸ். அலிகான் நிகழ்வுகளை தொகுத்து வழங்கினார்.

தகவல் : குளச்சல் ஆசிம்






# 70 சதவிகிதம் இந்தியர்களுக்கு இறைச்சிதான் விருப்பமான உணவாம்!

2014க்கு பின் அமைந்த மோடியின் இந்த பாசிச பா.ஜ.க. ஆட்சியில் மாட்டின் பெயரால் நடந்த படுகொலைகள் ஏராளம். ஏதோ இந்தியாவில் முஸ்லிம்களும், தலீத்களும் தான் அசைவ உணவுப்பழக்கம் உடையவர்கள். மற்றவர்களெல்லாம் சைவ உணவுப்பழக்கம் கொண்டவர்கள் என்ற மாயையை உருவாக்கி வைத்துள்ளனர்.

ஆனால் சமீபத்தில் வெளிவந்த ஆய்வு ஒன்று, "இந்தியாவில் 70 சதவிகித ஆண்களும், 78 சதவிகித பெண்களும் அசைவ உணவுப்பழக்கம் உடையவர்கள்" என்று கூறியுள்ளது. இந்த ஆய்வு கூறும் தகவல்களுக்குள் செல்வதற்கு முன் நாம் இன்னொரு விடயத்தை கூர்ந்து கவனிக்க வேண்டும். அது இந்தியாவில் முஸ்லிம்கள் எப்படி மாட்டிறைச்சியோடு சம்மந்தப்படுத்தப்படுகிறார்கள் என்பது.

கடந்த 2014க்கு பின், மாட்டின் பெயரால் படுகொலை செய்யப்பட்டவர்களில் பெரும்பான்மையினர் முஸ்லிம்கள்தான். தொடர்ந்து முஸ்லிம்களை "மாட்டிறைச்சி வைத்திருந்தான்", "இந்துக்களின் தெய்வமான மாட்டை கடத்தினான்" என்றெல்லாம் குற்றம் சுமத்தி பொதுவெளியில் அடித்துக் கொன்றார்கள்.

ஆரம்பத்தில் இதற்கு எதிராக ஒருவிதமான எதிர்ப்பு மனநிலையைக் கொண்டிருந்த வெகுஜன மக்கள் தொடர்ச்சியாக நடந்த சம்பவங்களின் தாக்கத்தால், "ஏன் முஸ்லிம்கள் மாடுகளை உண்ணுவதில் குறியாக இருக்கிறார்கள்? மாட்டிறைச்சியை திண்ணுவதை விட்டால் தான் என்ன?" என்று சொல்லும் மனநிலைக்கு வந்துவிட்டார்கள்.

ஆக முஸ்லிம்களுடைய வாழ்வியல் உணவுப்பட்டியலில் "மாட்டிறைச்சி" மிக அத்தியாவசியமான உணவு என்ற கண்ணோட்டம் எல்லா மக்களிடத்திலும் புகுத்தப்பட்டது. அதன் விளைவு வெகுஜன மக்களிடத்தில் இந்தியாவில் மாட்டின் பெயரால் முஸ்லிம்கள் கொல்லப்படுவது சாதரணம் என்ற சிந்தனை உருவானது

**இந்தியாவில் ஏன் மாடுகள் இறைச்சியாகின்றன?**

இந்தியாவை பொருத்தவரை ஆடு, கோழி, மாடு இவை மூன்றுமே முக்கியமான அசைவ உணவாக உள்ளது. இதில் ஆடு மற்றும் கோழி இவை இரண்டும் உணவுக்காக மட்டுமே வளர்க்கப் படுகின்றன. ஆனால் மாடு என்பது அப்படியல்ல. இந்தியாவில் மாடு என்பது இறைச்சியையும் தாண்டி, விவசாயத்திற்காகவும், மனிதனின் பயணங்கள் போன்ற இன்னபிற தேவைகளுக்காகவும் பயன்படுத்தப்படுகிறது.


ஆக மாட்டை யார் வளர்ப்பார்கள் என்றால் விவசாயம் செய்யக்கூடிய அளவில் சொந்தமாக நிலம் வைத்திருக்கக் கூடிய நிலவுடைமையாளர்கள் தான் வளர்ப்பார்கள். எப்படி குறிப்பிட்ட ஏக்கர் நிலங்கள் அவர்களுடைய சொத்தாக இருக்குமோ, அதேபோல் அவர்கள் வளர்க்கும் மாடுகளும் அவர்களின் சொத்தாக கருதப்படும்.

மேலும் இந்தியாவில் சராசரியாக ஒரு மாட்டின் விலை 40 ஆயிரம் முதல் 50 ஆயிரம் வரை இருக்கிறது. ஒரு சாதாரண கூலித் தொழிலாளியால் மாட்டை சொந்தமாக வாங்க முடியாது. ஆக நிலவுடைமையாளர்கள் கையில் இருக்கும் இந்த மாடுகளை அவர்கள் விவசாயத்திற்கு நன்கு பயன்படுத்திவிட்ட பிறகு, அந்த மாட்டிற்கு வயதான பிறகு அது அவனுக்கு ஒரு சுமையாக மாறிவிடுகிறது. அப்படி சுமையாக மாறிய மாடுகளால் அவர்களுக்கு எந்தப் பயனும் இல்லை என்ற நிலை ஏற்பட்டவுடன் அவைகளை சந்தையில் “கறி”க்காக கொண்டு வந்து விற்கிறார்கள்.

இங்குதான் இந்தியாவின் முஸ்லிம்கள் “மாட்டிறைச்சி” உணவு முறைமைகளோடு சம்மந்தப்படுத்தப்படுகிறார்கள். சந்தைக்கு “இறைச்சிக்காக” வரும் மாடுகளை எல்லோரைப் போலவும் முஸ்லிம்களும் வாங்குகிறார்கள். அதை உணவுக்காக பயன்படுத்துகிறார்கள்.

இந்தியாவைப் பொருத்தவரை முஸ்லிம்கள் கோழிகளை அல்லது ஆடுகளை உணவிற்காகவே வாங்கி, வளர்த்து, அறுத்து உண்பதுண்டு. ஆனால் எந்த முஸ்லிமும் ஒரு மாட்டை குட்டியிலிருந்தே வாங்கி அதை உணவுக்காகவே வளர்த்து, பின்னர் நன்கு வளர்ந்த பிறகு அதை அறுத்து உண்பதில்லை. ஏனென்றால் முஸ்லிம்களின் அசைவ உணவுப் பட்டியலில் மாட்டிறைச்சியும் ஒன்றுதானே தவிர, மாட்டிறைச்சி முஸ்லிம்களின் அத்தியாவசியமான உணவு என்றெல்லாம் இல்லை.

ஆக இங்கே “மாட்டுக்கறி உண்பது என்பது” முஸ்லிம்களின் அத்தியாவசிய உணவுப் பழக்கம் அல்ல. மாறாக “மாட்டுக்கறி உண்பதை விரும்பாத” நிலவுடைமையாளர்கள், பண்ணையார்கள், போன்றோர் தங்களுக்கு சுமையாக இருக்கும் மாடுகளை மாட்டிறைச்சிக்காகவே விற்பதனால் தான் எல்லோரையும் போல முஸ்லிம்களும் வாங்கி உண்கிறார்கள்.




இது காலம் காலமாக நடந்து கொண்டிருக்கும் ஒரு வழக்கம் தான். ஆனால் மோடியின் இந்த பா.ஜ.க. ஆட்சியில், முஸ்லிம்களை மட்டுமே மாட்டிறைச்சி மற்றும் அசைவ உணவுப் பழக்கங்களோடு சம்மந்தப்படுத்தி, படுகொலைகளை சங்கபரிவார பாசிச குண்டர்கள் அரங்கேற்றி வருகின்றனர்.

இப்படி ஒரு பக்கம் மாட்டிறைச்சி மற்றும் அசைவ உணவுப்பழக்கமுடைய சிறுபான்மை சமூகங்கள் மீது தனது வன்முறைகளை கட்டவிழ்த்து விட்டாலும், இன்னொரு பக்கம் மாட்டிறைச்சி ஏற்றுமதியிலும், உள்நாட்டு வியாபாரத்திலும் கொடிகட்டி பறக்கிறது. பின்வரும் தரவுகள் இதனை நமக்கு வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றது.

**ஆய்வுகள் கூறும் உண்மைகள்**

பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டுக்கான அமைப்பு (Organisation for


NEWS •LIVE TV INDIA TODAY APP

HOME MY FEED INDIA WORLD BUSINESS TECH MOVIES SPORTS SCIENCE HEALTH

News / DIU / India's meat map: 7 out of 10 people relish non-vegetarian items, East & South lead the way

# India's meat map: 7 out of 10 people relish non-vegetarian items, East & South lead the way

Economic Co-operation and Development - OECD) அறிக்கையின் படி, 2020-ல் இந்தியா ஆறு மில்லியன் டன் இறைச்சியை உட்கொண்டுள்ளது. இந்தியாவில் கிட்டத்தட்ட பாதிக்குப் பாதி மக்கள் வாரம் ஒருமுறை அசைவ உணவை புசிக்கிறார்கள்.

உலக இறைச்சி உற்பத்தியில் இந்தியா, 2.18 சதவிதம் உற்பத்தி செய்து சீனா, அமெரிக்கா, பிரேசில், ரஷ்யா மற்றும் ஜெர்மன் ஆகிய நாடுகளுக்கு அடுத்து ஆறாவது இடத்தில் உள்ளது என்று உணவு பதப்படுத்தும் தொழில்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்தியாவில் இறைச்சி உற்பத்தி 2014-15 முதல் 2019-20 வரை 5.15 சதவிதமாக வளர்ந்துள்ளதாக கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத்துறை அமைச்சம் தெரிவித்துள்ளது.

இந்தியாவின் மொத்த இறைச்சி உற்பத்தியில் 30 சதவிகிதம் எருமை மாடுகளின் இறைச்சி பங்களிக்கிறது. மாநில வாரியாக பார்த்தோமேயானால், உத்தரப் பிரதேசம் 15 சதவிதம், மகாராஷ்டிரா 13 சதவிதம், மேற்கு வங்காளம் 10 சதவிதம் என இந்தியாவில் இறைச்சி உற்பத்தியில் அதிக பங்களிப்பை வழங்குகின்றன என்று ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.

தொற்றுநோய் தாக்கங்கள் இருந்தபோதிலும் ஏப்ரல் 2020 முதல் மார்ச் 2021 வரை இந்தியா 3.17 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்புக்கு இறைச்சியை ஏற்றுமதி செய்துள்ளது. இது முந்தைய ஆண்டின் ஏற்றுமதிக்கு சமமானது என்று வணிகம் மற்றும் தொழில் துறை அமைச்சகம் கடந்த 2021 ஜூலை மாதம் கூறியது.

உலகின் மிகப்பெரிய எருமை இறைச்சியை ஏற்றுமதி செய்யும் நாடுகளில் ஒன்றாக இந்தியா இருக்கும் நிலையில், 70-க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு இறைச்சியை ஏற்றுமதி செய்து வருகிறது.

2018 - 2019ம் ஆண்டுகளில் இந்தியாவில் முதல் 10 எருமை இறைச்சி ஏற்றுமதியாளர்களில் 7பேர் உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள், 2பேர் மகாராஷ்டிராவை சேர்ந்தவர்கள், ஒருவர் டெல்லியைச் சேர்ந்தவர் என்று வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் பியூஷ் கோயல் 2019 டிசம்பரில் மக்களவையில் கூறியுள்ளார்.

OECD தரவுகளின் படி, இந்தியாவில் இறைச்சி நுகர்வு 2010ல் இருந்து குறையத் தொடங்கியது; ஆனால், 2014க்குப் பிறகு மீண்டும் அதன் வேகத்தை அதிகரித்தது. கோழி மற்றும் பிற இறைச்சி நுகர்வு தொடர்ந்து அதிகரித்து வந்த நிலையில் எருமை இறைச்சி நுகர்வு 2017க்குப் பிறகு தான் இழந்த வேகத்தை மீட்டெடுத்தது. 2020ல் இந்தியா ஆறு மில்லியன் டன் இறைச்சியை உட்கொண்டுள்ளது.

இந்தியாவில் 10 பேரில் 7 பேர் அசைவப் பிரியர்கள் தான். நாட்டில் 70 சதவித பெண்களும் 78 சதவித ஆண்களும் ஏதோ ஒரு வகை இறைச்சியை சாப்பிடுகிறார்கள் என்று தேசிய குடும்ப நல ஆய்வு-4 வழங்கும் தரவுகள் குறிப்பிடுகின்றன.

ஆய்வுத் தகவல்கள் - வினவு

**- அஷ்ரப் அலீ**



# உஸ்மானியா பேரரசு கடைவீதியின் தொங்கும் கூடைகள்

எல்லா கடைகளிலும் கூடைகள் தொங்கவிடப்பட்டிருக்கும். ஒரு செல்வந்தர் அந்த கடைக்கு வந்து தனக்கு தேவையான நான்கு ரொட்டிகளுக்கு பணம் செலுத்தாமல் எட்டு ரொட்டிக்களுக்கான பணத்தை கொடுக்கிறார்.

கடைக்காரர் கூறுகிறார் பணம் அதிகமாக தந்து விட்டீர்கள் என்று அதற்கு செல்வந்தர் கூறினார். "மீதுமுள்ள பணத்திற்கான ரொட்டியை தொங்கும் கூடையில் போட்டுவிடுங்கள்."

கடைக்காரரும் அந்த பணத்தை தான் எடுத்துக் கொள்ளாமல் அந்த ரூபாய்க்கான ரொட்டி களை அந்த தொங்கும் கூடையில் போட்டு விடுகிறார்.

அடுத்தது ஒரு ஏழ்மையான மூதாட்டி வருகிறாள். கடைக்காரன் தங்களுக்கு ரொட்டி வேண்டுமா என்று வினவுகிறார்.

ஆமாம் என்று மூதாட்டி கூற நான்கு ரொட்டிகளைக் கொண்டு பையை நிரப்பி கடைக்காரர் மூதாட்டியிடம் கொடுத்த போது மூதாட்டி கூறுகிறாள்,

"எனக்கு இரண்டு போதும் மீதத்தை வேறுயாருக்காவதுக் கொடுத்து விடுங்கள் என்று கூறி தனக்கு எவ்வளவு தேவையோ அதனை மட்டும் எடுத்துக் கொண்டு விடை பெறுகிறாள்."

இந்த அற்புதமான பழக்கத்தின் விளைவாக தேவையுடையவர்கள் நல்ல நிலைக்கு மாறினாலும், தான் தேவையோடு இருந்த காலங்களில் தனக்குக் கிடைத்த இந்த உதவிக்கு செய்யும் நன்றிக்கடனாக அவர்கள் ஒரு ரொட்டி வாங்கினால் இரு ரொட்டிக்கான பணத்தைக் கொடுத்து மற்றொரு ரொட்டியை தொங்கும் கூடையில் போட்டுவிடுகிறார்கள்.

தனது அண்டை வீட்டுக்காரர் பசியோடு இருக்க வயிறு நிரம்ப சாப்பிடுபவர் உண்மை யான முஃமினே அல்ல என்ற அண்ணலாரின் (ஸல்) கூற்றை ஒரு சாம்ராஜ்யமே கடைப் பிடித்துள்ளதற்கு இதுவொரு சிறந்த எடுத்துக்காட்டு.

**அரபி மூலம்: தியானத் டிவி**

# மேட்டுப்பாளையத்தில் காவல்துறை அராஜகமா?



கோவை மாவட்டம் மேட்டுப் பாளையத்தில் 25/09/2021 அன்று அடையாளம் தெரியாத இரண்டு நபர்களால் இந்து முன்னணியைச் சார்ந்த சந்திரசேகரன் என்பவர் தாக்கப்பட்டுள்ளார். வருத்தத்திற்கும், கண்டனத்திற்கும் உரிய இந்த சம்பவத்தில், உடனே காவல்துறை வழக்குப்பதிவு செய்து விசாரணையை மேற்கொண்டு வந்தது.

தாக்குதலுக்குள்ளானவர் இந்து முன்னணி உறுப்பினர் என்ற காரணத்தினால், தனது விசாரணைப்போக்கை முஸ்லிம் இளைஞர்களை குறிவைத்தே நகர்த்தியது காவல்துறை.

- மேட்டுப்பாளையத்தில் உள்ள முஸ்லிம் வீடுகளுக்கு நள்ளிரவு நேரங்களில் சென்று கதவை தட்டுவது,
- ஜர்க்கின் இருக்கின்றதா? என்று கேட்டு அதை போட்டுக்காட்டும் படி சொல்வது,
- ஹெல்மட் இருக்கிறதா? அதை போட்டுக்காடுங்கள் என்று கூறி புகைப்படம் எடுப்பது,
- மேட்டுப்பாளையத்தில் முஸ்லிம்கள் பெருவாரியாக வசிக்கக்கூடிய பகுதிகளுக்கு சென்று எத்தனை முஸ்லிம் வீடுகள் இருக்கின்றது என்று கணக்கெடுப்பது
- மேலும் முஸ்லிம்களின் இருசக்கர வாகனங்களை புகைப்படம் எடுப்பது

போன்ற செயல்பாடுகளில் இறங்கியது.

மேலும் சம்பவம் நடந்த 25/09/2021 நாளிலிருந்து அடுத்த பத்து நாட்களுக்குள், எந்தவொரு முறையான சம்மனும் (SUMMON) அனுப்பாமல், முப்பதுக்கும் மேற்பட்ட முஸ்லிம் இளைஞர்களை காவல்துறை விசாரித் திருக்கின்றது.

இந்த சட்டமுறையற்ற காவல்துறை விசாரணையில்,

- செல்போனை பிடிங்கி வைப்பது,
- ஒரு நாள் முழுவதும் வெளியில் நிற்க வைத்து,
- நாளைக்கு வா! என்று திருப்பி அனுப்புவது,
- தேவையில்லாமல் அலைக்கழிப்பது,
- "நீ எந்த அமைப்பில் இருக்கிறாய்?" என்று மீண்டும், மீண்டும் கேட்டு உளவியல் ரீதியாக துன்புறுத்துவது,

போன்ற அடாவடித்தனங்களும் அரங்கேறியுள்ளன.

இந்த நிலையில், தாருல் இஸ்லாம் அறக்கட்டளையைச் சார்ந்தவர்களையும் விசாரணைக்கு அழைத்தார்கள். "எந்தவொரு முறையான சம்மனும்(SUMMON) அனுப்பாமல் நாங்கள் விசாரணைக்கு வரமாட்டோம்" என்று கூறிவிட்டார்கள். பின்னர் முறையாக சம்மன்(SUMMON) அனுப்பி, இருவரை விசாரித்து அனுப்பினார்கள்.

அதன் பின் நீதி மற்றும் அமைதிக்கான மக்கள் இயக்கம் சார்பாக ஒரு பத்திரிகையாளர் சந்திப்பை நடத்தி, அதில் என்ன நடந்தது என்பதையும், காவல்துறையின் அத்துமீறல் களையும் அம்பலப்படுத்தினோம்.


இதையறிந்த காவல்துறை, அன்று இரவே மேட்டுப்பாளையும் பகுதியைச் சார்ந்த அனைத்து இஸ்லாமிய இயக்கங்கள் மற்றும் கட்சிகளையும் அழைத்து ஒரு சந்திப்பை நடத்தியது.

அந்த சந்திப்பில், "நாங்கள் முஸ்லிம்களை மட்டும் குறிவைத்து விசாரணையை நடத்த வில்லை. பொதுவான பார்வையில்தான் விசாரணையை நடத்துகின்றோம்" என்று காவல்துறை சார்பில் விளக்கமளித்தனர்.

அப்போது குறுக்கிட்டு பேசிய நீதி மற்றும் அமைதிக்கான மக்கள் இயக்கம், வழக்குரைஞர். சுலைமான் அவர்கள், "சம்பவம் நடந்த நாளிலிருந்து முப்பதுக்கும் மேற்பட்ட முஸ்லிம் களை முறையான சம்மன் (SUMMON) இல்லாமல் விசாரித்துள்ளீர்கள் என்றும் காவல்துறையின் விசாரணைப்போக்கு முஸ்லிம்களை காரணமாக்குவதிலேயே குறியாக உள்ளது என்றும்" கூறினார்.

நாம் முன்வைத்த குற்றச்சாட்டை ஒப்புக் கொண்ட காவல்துறை, "தவறுதான். இனி இதுபோன்ற தவறுகள் நடக்காமல் பார்த்துக் கொள்கின்றோம்" என்று கூறியது.

அதன் பின் மேட்டுப்பாளையத்தில் காவல் துறையின் இதுபோன்ற அட்டூழியங்கள் நிறுத்தப்பட்டிருந்த நிலையில், 11/11/2021 அன்று அதிகாலை, சுமார்



ஆக்கீப்



நவாஸ்



முபீன்

பத்துக்கும் மேற் பட்ட காவல்துறையினர், அகீப், நவாஸ் (இருவரும் அண்ணன் தம்பிகள், ஒரே வீட்டில் வசிக்கக்கூடியவர்கள்) மற்றும் முபீன் ஆகிய மூவரையும், "உங்களை விசாரிக்க வேண்டும்" என்று அழைத்து சென்றுள்ளனர்.

தகவல் அறிந்த மேட்டுப்பாளையும் இஸ்லாமிய இயக்கங்கள் மற்றும் அரசியல் கட்சிகள், காலை 8.15 மணியளவில் காவல் நிலையம் சென்று விசாரித்தபோது, "இவர்கள் தான் குற்றவாளிகள் என்பதற்கு எங்களிடம் ஆதாரம் கிடைத்துள்ளது, அந்த மூவரில் ஒருவர் குற்றத்தை ஒப்புக்கொண்டார். விசாரித்துக் கொண்டிருக்கின்றோம்" என்று கூறி அனுப்பியுள்ளனர்.

விசாரணைக்காக காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்ட மூவரில் ஒருவரான முபீன் அவர்களிடன் பேசினோம். அப்போது அவர்,

"காவல் நிலையத்தில் எங்கள் மூவரையும் விசாரித்துக் கொண்டிருக்கும் போது, ஏற்கனவே அவர்கள் தயாரித்து வைத்திருந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் கையெழுத்திடும்படி கூறியுள்ளனர். மேலும் நவாஸிடம் சென்று இந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் கையெழுத்துப் போட்டால் உன்னை விட்டு விடுகின்றோம் என்று ஆசைவார்த்தை கூறவே, நவாஸ் நான் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை படித்துப் பார்க்கவேண்டும் என கூறியுள்ளார். பிறகு அந்த ஒப்புதல் வாக்குமூலத்தைப் படித்துப் பார்த்த நவாஸ் இதில் நாங்கள் செய்யாதவற்றை யெல்லாம் நீங்கள் கூறியுள்ளீர்களே இதில் நான் எப்படி கையெழுத்திட முடியும்? நான் எனது வழக்கறிஞரிடம் பேசிவிட்டு பின் கையெழுத்திடுவதைப்பற்றி கூறுகிறேன் என்று சொல்ல, வழக்கறிஞரை காவல்துறையினர் செல்போனில் அழைத்துப் பேசவைத்தனர். வழக்கறிஞரோ நீங்கள் அதிலுள்ளபடி செய்திருந்தால் அதில் கையொப்பமிடுங்கள் இல்லையேல் கையொப்பமிடாதீர்கள் எனக் கூறவே நவாஸ் கையெழுத்திடவில்லை.

அவர்கள் ஏற்கனவே தயாரித்து வைத்திருந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் எப்படியாவது எங்களிடம் கையெழுத்து வாங்கிவிட வேண்டும் என்று பல முயற்சிகளை மேற்கொண்டார்கள். நாங்கள் எதிலும் கையெழுத்திடவில்லை. இதனால் ஆத்திரமடைந்த அந்த காவல் நிலைய ரைட்டர் எங்களிடம், "என்னடா ஓவரா பன்னுரீங்க! எப்படியாவது எங்களிடம் சிக்குவீர்கள். அப்போது வச்சி செய்கிறோம் உங்களை" என்று கத்தினார்.

"அதன் பின் எங்களை ரிமாண்ட் செய்ய அழைத்து சென்றனர். நாங்கள் வண்டியில் ஏறினோம். வண்டி மேட்டுப்பாளையத்தை சுற்றியுள்ள ஊர்களிலெல்லாம் சுற்றியது. இறுதியாக சிறுமுகைய்யில் உள்ள நீதிபதியின் வீட்டிற்கு சென்றது. அந்த நீதிபதி, எங்களை Remand நீதிமன்ற காவலில் வைக்க உத்தர விட்டார்." என்று கூறினார்.

ஒட்டுமொத்தமாக இந்த வழக்கே, குற்றவாளிகள் அளித்த ஒப்புதல் வாக்கு மூலத்தை அடிப்படையாக கொண்டு தான் புணையப்பட்டுள்ளது. ஆனால் காவல்துறை தயாரித்து வைத்திருந்த ஒப்புதல் வாக்கு மூலத்தில், மூவரின் கையெழுத்தும் இல்லை.

மேலும் தாக்குதலுக்குள்ளான நபர் இந்து முன்னணி அமைப்பைச் சார்ந்தவர் என்பதானாலேயே, இதில் முஸ்லிம்கள் தான் குற்றவாளிகளாக இருப்பார்கள் என்ற கோணத்தில் காவல்துறை விசாரணையை மேற்கொண்டிருப்பது அம்பலமாகியுள்ளது.

நீதி மற்றும் அமைதிக்கான மக்கள் இயக்கத்தின் நீண்ட சட்ட போராட்டத்திற்கு பின் மூவருக்கும் பிணை கிடைத்துள்ளது.

இப்படி (Anti Minority Sentiment) சிறுபான்மை எதிர்ப்புணர்வுடன் செயல்பட்டு கொண்டிருக்கின்ற மேட்டுப்பாளையம் காவல்துறையின் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். அதுவரை நமது சட்டப்போராட்டம் தொடரும்....

நமது நிரூபர்

மேட்டுப்பாளையம்

*03/12/2021*




# “தாஜிருல்லாஹ் - அல்லாஹ்வின் வியாபாரி”

எந்த இடமும் உலகத்தின் முடிவல்ல. அது பரந்து விரிந்த இப்பூமியின் இன்னொரு இடத்தின் எல்லை என்று உணர்த்துவது போல் அமைந்தது தான் மதீனாவை நோக்கிய அதிகாரப்பூர்வ ஹிஜ்ரத் பயணம்.

உஸ்மான்(ரலி) அவர்களைத் தவிர்த்து வேறெவரும் தங்களுடைய முழு பொருட்செல்வத்துடன் ஹிஜ்ரத் செய்யவில்லை.

அணிய ஒரு ஆடை கூட இல்லாத ஏழை முஸ்லிம்களும், வாழ்வாங்கு வாழ்ந்த முஸ்லிம்களும், எல்லாவற்றையும் துறந்து ஒன்றுமில்லாமல் அகதிகளாக, ஈமான் எனும் உயரிய செல்வத்தை மட்டுமே உடன் எடுத்துக் கொண்டு மதீனா நோக்கி ஒவ்வொருவராக, சில குழுக்களாக இடம் பெயர்ந்து கொண்டிருந்தனர்.

அந்த அணியில் அப்துர்ரஹ்மான்(ரலி) அவர்களும் தங்களை இணைத்துக் கொண்டார்கள்.

ஆம்! மக்காவின் பெரும் செல்வந்தராக, செல்வாக்கு மிக்க தலைவர்களான உத்பா, ஷைபா ஆகியோரின் மருமகனாக (உத்பாவின் மகள் உம்மு குல்ஸூமையும், ஷைபாவின் மகளையும் மணம் முடித்திருந்தார்கள்) வலம் வந்த அப்துர்ரஹ்மான் ஒரு சில திர்ஹத்தோடு, உடுத்திய ஆடையோடு, செல்வாக்கு, செல்வம் என அத்துனையையும் துறந்து ஹிஜ்ரத் எனும் புனிதப் பயணம் மேற்கொண்டார்கள்.

அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்கள் எல்லாவற்றையும் துறந்து வந்த முஹாஜிர்களை அன்ஸார்களிடம் சகோதரர்களாக ஏற்றுக் கொள்ளுமாறு அறிவுறுத்தினார்கள்.

அன்ஸாரிகளும் அவ்வாறே மனமுவந்து முஹாஜிர்களை சகோதரர்களாக ஏற்றுக் கொண்டனர். அப்படி ஏற்படுத்தப் பட்ட சகோதர உறவின் மூலம் சகோதரர்களானார்கள் அப்துர்ரஹ்மான் இப்னு அவ்ஃப்(ரலி) அவர்களும் ஸஅத் இப்னு ரபீஉ(ரலி) அவர்களும்.

இங்கே தான் தியாகத்திற்கும், உயர்ந்த எண்ணத்திற்குமான போட்டி ஏற்பட்டது.

ஆம்! தம் சகோதரர் அப்துர்ரஹ்மானை அழைத்துக் கொண்டு தன் வீட்டிற்குச் சென்ற ஸஅத்(ரலி) அவர்கள்,

"சகோதரர் அப்துர்ரஹ்மான் அவர்களே! இதோ இது என் வீடு இதில் நீங்கள் சரிபாதியை எடுத்துக் கொள்ளுங்கள்! அதோ என் இரு தோட்டங்கள் அதில் நீங்கள் விரும்பும் ஒரு தோட்டத்தை எடுத்துக் கொள்ளுங்கள்! இதோ நான் மணம் முடித்திருக்கின்ற என் இரு துணைவியர்கள், இருவரில் எவரை வேண்டுமானாலும் தேர்வு செய்யுங்கள்! இத்தா காலம் முடிந்ததும் நானே உங்களுக்கு மணம் முடித்து தருகின்றேன்! என்று அகம் மகிழ கூறினார்கள்."

எல்லாவற்றையும் சரி பாதியாகத் தரத் துடித்துக் கொண்டிருக்கும் ஓர் உன்னத ஆத்மாவை, மரியாதை கலந்த பார்வையோடு, புன்னகை பூத்த முகத்தோடு அக மகிழ்வோடு ஏறிட்டுப் பார்த்து

"ஸஅதே! என் சகோதரரே! அல்லாஹ் உமக்கும், உம் குடும்பத்தாருக்கும், உம் செல்வத்திற்கும் அபிவிருத்தியை நல்கட்டும்! உம்முடைய எதையும் நிராகரிக்கும் எண்ணம் எமக்கில்லை, ஆனாலும், இந்த நோக்கத்திற்காக நான் இஸ்லாத்திற்கு வரவில்லை. எல்லாவற்றையும் நீங்களே வைத்துக் கொள்ளுங்கள்! எனக்கு மதீனாவின் கடை வீதிக்குச் செல்லும் வழியை மட்டும் காட்டுங்கள்! அது போதும்" என்றார்கள் அப்துர்ரஹ்மான் இப்னு அவ்ஃப்(ரலி) அவர்கள்.

எதை வேண்டுமானாலும் தர முன்வந்து நின்ற ஸஅத் (ரலி) அவர்களின் தியாகத்தின் முன்பு எதுவுமே வேண்டாம் என்கிற பெருந்தன்மையும், அதன் பிண்ணனியில் இருந்த உயர்ந்த இலட்சியமும் வென்றது. வரலாற்றில் முதன் முதலாக இங்கு தான் தியாகம் தோற்றுப் போனது.

மதீனாவின் புகழ்பெற்ற கடை வீதியான பனூகைனுகா கடை வீதிக்கு வழிகாட்டப் பட்டார். அல்லாஹ்வின் திருப்பெயரை முன் மொழிந்து கடை வீதிக்குள் நுழைந்த அவர் மாவு, நெய், பாலாடைக்கட்டி என சிறு வணிகம் செய்து லாபம் ஈட்டினார்.

உயர்ந்த எண்ணங்களோடும், இலட்சியத் தோடும் அவர்கள் சில திர்ஹத்தோடு வாழ்வைத்துவங்கிய போது அவர்களுக்கு வயது 37 அல்லது 40 தான். அவர்கள் இப்பூவுலகைப் பிரியும்போது 75 வயது.

சற்றேறக்குறைய 35 ஆண்டுகளில் மிகப் பெரும் செல்வந்தராக உருவெடுத்தார்கள். அல்லாஹ்வின் வணிகர் என்றும் மக்களால் அழைக்கப்பட்டு வரலாற்றில் இடம் பெற்றார்கள்.

எந்தளவு அவர்கள் உயர்ந்த இடத்திற்கு வந்தார்கள் என்றால், அவர்களே சொல்வார்களாம்: "ஒரு கல்லைத் தொட்டு தூக்கினால் கூட அதன் அடியிலிருந்து தங்கத்தையோ, வெள்ளியையோ பெற்றுக் கொண்டே இருக்கின்றேன். நான் தொட்ட தெல்லாம் துலங்கிற்று. என் கை பட்டதெல்லாம் பொன்னாகியது" என்று

எல்லாவற்றிற்கும் மேலாக அண்ணல் நபிகளாரின் அருள் நிறைந்த வாயால் உலகிலேயே சுவனத்தைக் கொண்டு சோபனம் பெறும் பேற்றையும் பெற்றார்கள். ஆம் சுவனத்தைக் கொண்டு சோபனம் பெற்ற பதின்மரில் அப்துர்ரஹ்மான் இப்னு அவ்ஃப் (ரலி) அவர்களும் ஒருவர்.

அவர்கள் சத்திய சன்மார்க்கத்திற்காகவும், ஏழை எளியோருக்காகவும் வாரி வழங்கியதைப் பற்றிய செய்திகளைப் பார்த்தாலே அவர்கள் பெற்றிருந்த செல்வம் எவ்வளவு என்பதை வியப்பின் விளிம்பில் நின்றுதான் நாம் உணர முடியும்.

அப்துர்ரஹ்மான் இப்னு அவ்ஃப் (ரலி) அவர்கள் செல்வத்தில் மதீனா வாசிகள் அனைவருக்கும் பங்கிருந்ததாம். ஆம்! செல்வத்தில் மூன்றில் ஒரு பங்கை மக்களுக்கு கடனாக வழங்குவார்களாம். மூன்றில் இன்னொரு பங்கை மக்கள் வாங்கிய கடனை அடைப்பதற்காக வழங்குவார்களாம். மூன்றில் இன்னொரு பங்கை அவர்களுக்கு தானமாக வழங்குவார்களாம்.

*அப்துர்ரஹ்மான் இப்னு அவ்ஃப் (ரலி) அவர்கள் மரண நேரத்தில் செய்த வஸிய்யத்தில் "என் செல்வத்தில் 50,000 தீனாரை அல்லாஹ்வின் பாதையில் தர்மம் செய்து விடுங்கள். பத்ரில் கலந்து கொண்டவர்களில் இப்போது எவரெல்லாம் உயிருடன் இருக்கின்றார்களோ அவர்களில் ஒவ்வொருவருக்கும் 400 தீனார் வீதம் கொடுத்து விடுங்கள்" என்று சொல்லி இருந்தார்களாம்.*

*அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்கள் ஹயாத்தோடு வாழும் காலத்தில் தமது பொருளாதாரத்தில் சரிபாதியை அல்லாஹ்வின் பாதையில் அர்ப்பணித்தார்கள். ஒரு போரின் போது 500 வாகனங்களையும், இன்னொரு போரின் போது 1500 வாகனங்களையும் அர்ப்பணித்தார்கள்.*

*மதீனாவில் முஸ்லிம்களுக்குச் சொந்தமான அடகு வைக்கப்பட்ட சுமார் 30,000 வீடுகளை தன் சொந்தப் பணத்தில் மீட்டுக் கொடுத்தார்கள்.*

*ஒரு தடவை 700 ஒட்டகங்களையும், அவை சுமந்து வந்த வியாபாரப் பொருட்களையும் முஸ்லிம்களுக்கு தானமாக வழங்கினார்கள். பிரிதொரு முறை 500 குதிரைகள் சுமந்து வந்த பொருட்களை மக்களுக்கு வாரிக் கொடுத்தார்கள்.*

*ஒரு முறை தங்களுக்கு சொந்தமான ஒரு இடத்தை விற்று, அதன் மூலம் வந்த 40,000 தீனாரை அண்ணலாரின் அருமைத் துணைவியர்களுக்கும், ஏழைகளுக்கும், அவர்களின் சொந்த உறவுகளில் சிரமப்படு வோருக்கும் வழங்கினார்கள். (நூல்: இஸ்தீஆப், தபகாத் இப்னு ஸஅத், ஸியரு அஃலா மின் நுபலா, உஸ்துல் காபா, ரிஜாலுன் ஹவ்லர் ரஸூல் {ஸல்}.... )*

*"ஸஅதே! என் சகோதரரே! அல்லாஹ் உமக்கும், உம் குடும்பத்தாருக்கும், உம் செல்வத்திற்கும் அபிவிருத்தியை நல்கட்டும்! உம்முடைய எதையும் நிராகரிக்கும் எண்ணம் எமக்கில்லை, ஆனாலும், இந்த நோக்கத்திற்காக நான் இஸ்லாத்திற்கு வரவில்லை. எல்லாவற்றையும் நீங்களே வைத்துக் கொள்ளுங்கள்! எனக்கு மதீனாவின் கடை வீதிக்குச் செல்லும் வழியை மட்டும் காட்டுங்கள்! அது போதும்"*


*என்ற அப்துர்ரஹ்மான் இப்னு அவ்ஃப்(ரலி) அவர்கள் வெளிப்படுத்திய தன்னம்பிக்கை தான் இவ்வளவு மகத்தான வெற்றியை பெற வைத்தது. என் வாழ்க்கையை தீர்மானிக்க என்னால் முடியாவிட்டால் வேறு யாரால் தான் முடியும் என்ற கேள்விக்கணையோடு சில திர்ஹங்களோடு வாழ்வைத் துவக்கினார்கள். அவர்கள் இந்த உலகை விட்டுப் பிரிகிற போது விட்டுச் சென்ற மேலான செல்வங்களில் மகத்தானது "தாஜிருல்லாஹ் - அல்லாஹ்வின் வியாபாரி" என்பதாகும்.*

*அவர்கள் வாழ்க்கையை வென்றெடுக்க வேண்டும் என்ற நோக்கில் பயணித்தமையால் வாழ்க்கையிலும் வென்றார்கள். ஆம்! அன்றைய அரபுலகின் முடிசூடா மாபெரும் செல்வந்தராக, வணிகராக விளங்கினார்கள்.*

*ஆகவே, கடந்த காலங்களில் நம்மை கவலையுறச் செய்த காரியங்களில், சோதனைகளில், ரணங்களையும், கசப்புணர்வுகளையும் தந்த சம்பவங்களில் இருந்து நாம் பாடம் பெறுவோம்!.*

*சோதனைகளிலிருந்து பாடங்களைக் கற்று, வெற்றி வாகை சூட வேண்டுமென்ற தனியாத ஆர்வத்தோடு தன்னம்பிக்கையையும், விடாமுயற்சியையும் கையாண்டு எதிர்காலத்தை நோக்கிய பயணத்தில் ஏற்படும் தடைகளைத் தகர்த்தெறிவோம்! இண்ஷா அல்லாஹ்!!*

http://vellimedaiplus.blogspot.com/



# இந்திய சினிமாவில் முஸ்லிம்கள்




## நூல் விமர்சனம்

இந்திய சினிமாவின் 90 ஆண்டு கால வரலாற்றையும் அதன் சுவாரஸ்ய நிகழ்வுகளையும் ஒரு 100 பக்கங்களுடைய புத்தகத்தில் கூட அடக்கிவிடமுடியாது, ஆனால் அப்படியொரு சாகசத்தை செய்ய துணிந்துவிட்டார் நமது தமிழகத்தின் பிரபல எழுத்தாளர் திரு.அப்ஸல் அவர்கள். இதில் அவர்கள் இந்தி மற்றும் மலையாள சினிமாவில் ஆளுமை செலுத்திய, தற்போது செலுத்திக்கொண்டுள்ள முஸ்லிம்கள் பற்றியும் கூறியுள்ளார் என்றபோதும் அவற்றை நீங்களே படித்து தெரிந்துகொள்ள வேண்டுகோள் வைக்கின்றேன். தமிழ் திரையுலகில் இஸ்லாமியர்களின் இல்லாமையை மட்டும் இங்கே குறிப்பிட விழைகிறேன்.

1918ல் நடராஜ முதலியார் என்பரால் எடுக்கப்பட்ட "கீச்சக வதம்" எனும் வசனமில்லாத திரைப்படம் தான் தமிழின் முதல் திரைப்படம் என அறியப்பட்டாலும், முழுவதுமாக பாடல்களும் வசனங்களுமாய் நிரம்பி வழிந்த “காளிதாஸ்” தான் தமிழகத்தின் முதல் திரைப்படமாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. 1931ல் வெளியான இந்த திரைப்படம் இந்தி சினிமாவின் முதல் திரைப்படமாக அறியப்படும் “ஆலம் அரா” வெளியாகி அடுத்த பத்து மாதங்களிலே எடுக்கப்பட்ட திரைப்படம் என்கிற அந்தஸ்த்தினை பெறுகிறது.

இந்திய திரைப்பட ரசிகர் ஒருவரால் திரைப்படங்களின் தோற்றத்தையும், அதன் வளர்ச்சியையும் ,அதன் பரிணாம வேறுபாடுகளையும், தற்போது அவை அறிவியல் துணைக்கொண்டு அடைந்திருக்கும் அசாத்திய உருமாற்றத்தையும் முழுமையாக கற்பித்துவிட முடியாது. ஆனால் நமது உள்ளங்கவர் எழுத்தாளர் திரு.அப்ஸல் அவர்கள் அதையும் சாதித்துக்காட்டிவிட்டார். கையடக்க புத்தகத்தின் வழியே தமிழ் திரைத்துறை என ஒன்று உருவாக தேவையாயிருந்த காரண காரணிகளோடு நமக்கு அவற்றை விளக்கும் விதம் எளிமையில் எளிமை.

தமிழ் திரையுலகத்தில் நிலவிய ஆங்கிலேயர்களின் ஆளுமைகள் அடங்கி அதற்கு அடுத்த கட்டமாக அப்போதைக்கு மதராஸ் மாகாணத்தோடு இணைந்திருந்த தெலுங்கு பேசும் ஆந்திர மக்களின் திரைப்படம் தயாரிக்கும் ஆர்வத்தினால் உருவான அவர்களது ஆதிக்கமும், இயக்கத்திலும்

இசையமைப்பிலும் நடிகர்கள் தேர்விலும் மிகைத்திருந்த காலகட்டங்களையும், அதன்பின் திரையுலகில் தமிழ் முஸ்லிம்களின் காலடிப்பதிப்பின் தொடக்கத்தையும் மிக அழகாக விவரிக்கிறார்.

ஆரம்பத்தில் திரைப்படம் தயாரித்தவர்களாக, பாடலாசிரியிர்களாக,வசனகர்த்தாக்களாக,சண்டை பயிற்சியாளர்களாக,பாடகர்களாக அறிமுகமான அனைத்து முஸ்லிம் கலைஞர்களும் ஏனோ ஒரு காரணத்தைக்காட்டி தமது சொந்த பெயரை மறைத்து புனைப்பெயர்களிலே இடம்பெற்றார்கள், அந்த காரணத்தையும் மிகத் தெளிவாக விளக்குகிறார். பின்னாளில் அதே முஸ்லிம் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் தங்களது உண்மை பெயரிலேயே தொடர முடிந்த காரணத்தையும், தற்போது முஸ்லிம்களுடைய சினிமா ஆளுமையையும் தெளிவுபடுத்துகிறார்.

பெரியாரின் கொள்கைகளை மூடப்பழக்க எதிர்ப்பு என்கிற பெயரில் மென்மையான முறையில் திரு.என்.எஸ்.கிருஷ்ணனும், நாத்தீகம் என்கிற பெயரில் சற்றே காட்டமாக கடுமையாக திரு.எம்.ஆர்.ராதாவும் சினிமா வழியே புகுத்திய விதங்களையும், தமிழ் சினிமாவில் ஒருகாலத்தில் புராணங்களும், பக்திப்படங்களுமாய் நிரம்பி வழிந்த காலத்தில், மதிமங்கியிருந்த ரசிகப்பெருமக்களின் கலாரசனையை பூர்த்தி செய்ய ஜனரஞ்சக நாயகர்கள் உருவெடுத்தார்கள். அவர்களின் வாயிலாக சமூக கருத்துக்கள் பரவத்தொடங்கியது. அந்த காலத்து சூப்பர்ஸ்டார்களை உருவாக்கியவர்களில் பெரும்பங்கு இஸ்லாமியர்களுக்கே உண்டு என்பதை நிரூபணம் செய்கிறார்.

1950களிலேயே தயாரிப்பாளர்கள் மற்றும் நடிகர்களிடையே உருவான காழ்ப்புணர்ச்சி பழிவாங்கல்களுக்கிடையில், ஒருவர் காலினை மற்றொருவர் வாரிக்கொண்டிருக்க, 1980களுக்கு பிறகு தீவிரமாக தமிழ் சினிமா, இஸ்லாமியர்களுக்கு எதிராக எப்படி தனது முகத்தை மாற்றிக்கொண்டது என்பதும், திராவிட அரசியல் தடம் மாறி ,மத அரசியல் எப்படி, யாரால் தமிழ் சினிமாவை ஆட்டுவித்தது என்பதையும், தற்போது தம்மீது விழுந்த தீவிரவாத முத்திரைச்சாயத்தை துடைக்க முஸ்லிம் சமூகம் எவ்வழியில் தனது திரைத்துறை பாதையை கட்டமைத்து வருகிறது என்பது வரை மிகவும் பொறுமையாக அழகாக ரசிக்கும்படியாக எழுதியுள்ளார் திரு.அப்ஸல்.

இந்த "இந்திய சினிமாவில் முஸ்லிம்கள்" என்கிற புத்தகத்தை குறித்த எனது மதிப்பீடே இன்னொரு புத்தகம் போல ஆகிவிடக்கூடாது என்பதற்காகவும் புத்தகத்தில் உள்ளதனைத்தையும் நானே இங்கே கொட்டித்தீர்த்துவிட கூடாது என்பதற்காகவும் இந்த கட்டுரையை சுருக்கிக்கொள்கிறேன்.

திரு.அப்ஸல் அவர்களின் இந்த புத்தகத்தில் என்னை மிகவும் கவர்ந்த ஒரு விஷயம் என கூற வேண்டுமானால் அது அவர் இயக்குநர் ஆபாவாணன் அவர்களை பற்றி குறிப்பிட்டது தான்.

தற்போது பிரம்மாண்டம் என்கிற பெயரில் கணினி வித்தைகளை காட்டி குழந்தைகளுக்கு கேளிக்கை காட்டும் சமயத்தில் பிரம்மாண்ட இயக்குநர் என்றால் அவர் மணிரத்னமும், சங்கரும் தான் என்கிற சித்தரிப்பிற்கு பின்னே ஒளிப்பதிவினாலே தனது பிரம்மாண்டத்தை எடுத்துக்காட்டிய ஆபாவாணன் என்கிற பிரம்மாண்டம் ஒளித்து வைக்கப்பட்டது. அவர் வெறும் சைக்கோத்ரில்லர் அல்லது க்ரைம் சப்ஜக்ட் திரைப்படங்கள் எடுக்கக்கூடிய இயக்குநர் மாத்திரமல்ல மாறாக அவருக்கு இசையமைக்கும் திறமை உண்டு. அவரது திரைப்படங்களில் இடம்பெறும் சில சிக்னேச்சர் சத்தங்கள் அனைத்தும் அவரது இசையமைப்புகளே.

அதேபோல அழகான எளிய சொற்களை கொண்டு கிராமிய தென்பாங்கு பாடல்களை எழுதக்கூடிய ஒரு பாடலாசிரியர் என்பதும் நம்மில் பலருக்கும் தெரியாது.

அவரை குறித்து ஓரிரு வரிகள் தொட்டுக்காட்டிய விதம் என்னை வெகுவாக கவர்ந்த ஒன்று.

ஒருகாலத்தில் தமிழ் சினிமாவுக்கு முதுகெலும்பாய் இருந்து உதவிய இஸ்லாமிய சமுதாயத்தின் முன்னோடிகள் பலர் சினிமா வெளிச்சத்திற்கு வராமலேயே இருட்டடிப்பு செய்யப்பட்ட வரலாற்றினை நிச்சயமாக ஒருமுறை படித்துவிடுங்கள்.

நூலைப்பெற:

6380798360 (Afzal)

9080870936 (கோதை பதிப்பகம்)

**- நஸ்ரத் ரோஸி**

Owned and published by **M. GULAM MOHAMED** from 52/1 Mannady street, Mannady, Chennai - 600001.
Editor **M. Gulam Mohamed.** Printed by **M. GULAM MOHAMED** at **CHENNAI OFFSET PRINTERS**,
19/1, 21,2, Kitabath Khan Bhadur Street, chennai - 600 002